


# யாழ் அச்சுவேலி
# மகா வித்தியாலயம்






# நூற்றாண்டு மலர்
## 1892 – 1992




மலர் வெளியீடு
1999



மக்கள் மனதில் தமக்கென

ஒரு நீங்காத இடம் பிடித்த

**வீடியோ கலாமினி**

தமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன்

சிங்கப்பூரிலிருந்து புதிய ரக மிக்சர்கள்

புத்தம் புதிய கமராக்கள் வரவழைத்து


திறம்பட நடாத்தி வருகிறார்கள்

அத்துடன் அழகிய இயற்கை

காட்சிகள் அமைந்த


மணப் பந்தல் சேவையும்

நடாத்தி வருகிறார்கள்



உள்ளூர் வெளியூர்

தொலைத் தொடர்புகளுக்கும் நாடுங்கள்



# வீடியோ கலாமினி

## அச்சுவேலி

# சிறப்பு மலர்

# 1892-2000

அச்சுவேலி

மகா வித்தியாலயம்

# கல்லூரிக்கீதம்

அச்சுவேலிப் பதியிலே அறிவொளியை யூட்டவே
மெச்சுமொரு தீபமாய் மேவுவான் ஜோதியே !

ஒன்றுஎட்டு ஒன்பது இரண்டு ஒருங்கிணைந்த ஆண்டிலே
நன்று நன்று பாரென நாம் சிறார்கள் நலம்பெற
பார்புகழும் பணிமொழி பண்நிறைந்த தமிழ்மொழி
சீர்கமழும் வித்தைகள் சிறக்கவந்த அறிவகம்
(அச்சுவேலிப்)

எம்மதமும் ஓரிடமாய் அன்புவழி சென்றிட
செம்மைசேர் முதல்வர்கள் சென்றவழி கண்டிட
பள்ளித்தலம் என்றென்றும் பண்புலமாய் விளங்கிட
உள்ளந்தெளி உத்தமரை உருவாக்கும் ஆலயம்
(அச்சுவேலிப்)

ஈழமெங்கும் புகழ்பரப்பி காலமெல்லாம் கல்விமான்கள்
வாழ்வு கண்டு மலர்ந்திட மாண்புமிகு தொண்டர்கள்
தாழ்வுறாத நிறுவுனர் 'தாங்கும்பணி நிலைத்திட
மாழ்வுறாது வளர்வுறும் மகாவித்தியாலயம்
(அச்சுவேலிப்)

கவின் கலைகள் வளர்ந்திட கனிந்துமனம் உருகிட
கண்ணியமும் புண்ணியமும் கனிந்து நடம் புரிந்திட
அன்னையவள் தொல்லைகள் அருகி ஒளிந்தோடிட
உன்னை என்றும் நாடியே உதயகீதம் பாடுவோம்
(அச்சுவேலிப்)

அச்சுவேலி மகா வித்தியாலயம்

தாளம் :- ஆதி

இராகம் :- மத்தியமாவதி

# உள்ளுறை


01. சமர்ப்பணம்
02. மலர் வெளியீட்டுக் குழு
03. பதிப்புரை
04. ஆசியுரைகள்
05. அதிபரின் சிந்தனையில்
06. எங்கள் அதிபர்கள்
07. ஆசிரியர் ஆளணி
08. கல்லூரியின் வரலாறு
09. செயலாளர்களின் சமர்ப்பணம்
10. கல்லூரியின் கல்விப்பணியும், அமெரிக்கன் மிசனறியும்
– திரு .க. ஸ்ரீஸ்கந்தராசா
11. புதிய கல்விச் சீர்திருத்தத்தில் பாடசாலைகளின் மீள் கட்டமைப்பும் பாடசாலை மட்டக் கணிப்பீடும்
– திரு. மா. ஞானலிங்கம்
12. எமது கல்லூரியின் இலச்சினை
– திரு. பொ. சகலகலாநிதி
13. A MASSAGE – MR. V. M. MUTHURAJAH
14. கலைத்திட்டத்தில் தொழில் முன்னிலைப் பாடம்
– திரு. நா. சண்முகரட்ணம்
15. GLEANINGS FROM THOUGHTS - HISTORY IN ATCHUVELY MAHA VIDYALAYAM - MRS. T. RASARATNAM
16. பரத நடன ஆசானின் இலட்சணம்
– செல்வி. தே. சிவக்கொழுந்து
17. விளையாட்டுத்துறையில் எமது கல்லூரி
18. எங்கள் வீட்டுப் பூனை
19. எங்கள் ரீச்சர்
20. எனது செல்லப்பிராணி
21. கல்விதனைப் போற்றுவோம்
22. முயற்சி
23. வெடிபொருள்
24. எமது கிராமம்
25. எங்கள் பாடசாலை
26. THE USE OF NEWS PAPERS
27. கலங்கரை விளக்கம் நீயே
28. இராமாயணத்தில் பரதனின் மனநிலை
29. THE CHARMS OF COUNTRY LIFE
30. கணணியின் உபயோகம்
31. இசைக்கலையின் வளர்ச்சி
32. இலக்கியமும் வாழ்க்கையும்
33. வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்

# சமர்ப்பணம்



வளர்ச்சிப் படிகளாக இருந்து
கல்லூரியை இந்நிலைக்கு
வளர்த்தெடுத்து
அமரர்களாகிய அதிபர்
ஆசிரியர்களுக்கும், காலச்சூழ்
நிலையால் இடையிலே கருகி
மடிந்துபோன மாணவச்
செல்வங்களுக்குக்கும் இம்மலர்
சமர்ப்பணம்

# மலர் வெளியீட்டுக்குழு

| | | |
|---|---|---|
| 1. | திருமதி ச. கனகராசா | அதிபர் |
| 2. | திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா | பிரதி அதிபர் |
| 3. | திருமதி. த. இராசரத்தினம் | தலைவர் – ஆரம்பப்பிரிவு |
| 4. | திரு. மா. ஞானலிங்கம் | ஆசிரியர் |
| 5. | திரு. இ. யோகராசா | செயலாளர் பா. அ. ச. |
| 6. | திரு. பொ. சரவணபவானந்தன் | பொருளாளர் பா. அ. ச. |
| 7. | திரு. க. சிவஞானசுந்தரம் | உப செயலாளர் பா. அ. ச. |
| 8. | திரு. சி. சந்திரலிங்கம் | தலைவர் ப. மா. ச. |
| 9. | திரு. இ. யோகராசா | ப. மா. ச. |

# பதிப்புரை

1892ம் ஆண்டிலிருந்து அறிவொளி பரப்பி தனது 108வது அகவையில் அடியெடுத்து வைத்த எமது கல்லூரியின் நூற்றாண்டு விழா மலரை இன்று வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

நூற்றாண்டு விழா மலரை 1992ம் ஆண்டில் வெளியிடுவதற்கு கால்கோள் இடப்பட்டபோதிலும் காலச் சூறாவளியால் அம் முயற்சி கைகூடாது போனது. ஏழாண்டுகளின் பின்பு முயற்சி கருவாகி மலர்ந்துள்ளது.

நூற்றாண்டு விழா மலரை வெளியிட முனைந்த வேளைகளில் ஏற்பட்ட குறுக்கீடுகள் குழப்பங்களுக்கு முகம் கொடுத்து "முயற்சி திருவினையாக்கும்" என்ற நோக்கோடு உறுதுணையாக இருந்துழைத்த அதிபரின் முயற்சி பாராட்டுக்குரியது.

கல்லூரியின் நூற்றெட்டாவது ஆண்டு வரலாற்றில் மலர் வெளியிடும் கல்வி முயற்சி திடகாத்திரமாக நிறைவேற ஒத்துழைப்பு வழங்கிய கல்லூரி ஆசிரியர் குழாமிற்கும், பணி யாளர்களுக்கும் பாராட்டுக்கள்.

மலருக்கான ஆசிச்செய்தியை வழங்கி உதவிய யாழ் கல்வி வலயங்களின் இணைப்பாளரும், யாழ் கல்வி வலயத் தின் பணிப்பாளருமான கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அவர்களுக்கு நன்றி.

ஆசிச் செய்தியை வழங்கிய மதகுருமார்களுக்கும், வாழ்த்துக்களை வழங்கி உதவிய வலயக் கல்விப் பணிப் பாளர்கள், அதிபர்கள் ஆகியோருக்கு நன்றிகள்.

காலத்தின் தேவை உணர்ந்து மலர் வெளியீட்டிற்கு மனம் தளராது உதவி வழங்கி ஒத்துழைத்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றோர் நலன்விரும்பிகள் மாணவர்களுக்கும் நன்றி.

மலருக்கான ஆக்கங்களைத் தந்துவியோருக்கும் பணச் சுமையைத் தளர்த்தி விளம்பர உதவி வழங்கிய கூட்டுறவுத் துறையினர், வர்த்தகர்கள் மற்றும் நிறுவன அதிபர்களுக்கும், மலரை அழகுற அச்சிட்டு உதவிய புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினர்க்கும் மனமார்ந்த நன்றிகள்

22.10.1999 — மலர் வெளியீட்டுக்குழு

# ஆசியுரை

இ. சிவானந்தன்
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்
வடக்கு கிழக்கு மாகாணம்

யா/அச்சுவேலி மகா வித்தியாலயம் தனது நூற்றாண்டுப் பூர்த்தியை முன்னிட்டு வெளியிடும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 107 ஆண்டுகளாக இப்பிரதேசத்தில் நலிவுற்ற மக்களின் கல்வி வளர்ச்சியில் இக்கல்லூரி ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

பாடசாலையும், ஆலயமும் ஒரு கிராமத்தில் இரு கண்கள் எனக் கூறுவர். முகத்திற்கு அழகு கொடுக்கும் கண்களைப் போல் இக்கல்லூரி யும் அதனை அண்டியுள்ள ஆலயங்களும் அச்சுவேலியை அழகு செய்கின்றன.

ஒரு சிறிய பாடசாலையாக ஆரம்பித்து இன்று ஆயிரத்திற்கு மேற் பட்ட மாணவர்கள் கல்வி பயிலக்கூடிய பெரு விருட்சமாக வளர்ச்சி பெற்றுள்ள இக்கல்லூரியில் கல்வி கற்று உயர்ந்த பலரை நாம் அறிவோம்.

இக்கல்லூரியின் வளர்ச்சியில் உறுதுணையாக நின்று உழைத்த பெரியோர்களை நாம் இத்தருணத்தில் நினைவு கூர்ந்து அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இத்துடன் இப்பாடசாலையின் வளர்ச்சியில் தம்மை இனம் காட்ட ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்கி வரும் பெற்றோரும், பழைய மாணவர்களும் பாராட்டப்பட வேண்டி யவர்கள்.

அண்மைக்கால நிகழ்வுகளால் இக்கல்லூரி பல வழிகளிலும் பாதிப் புக்குள்ளாகியபோதும் தமது பாடசாலையில் பற்றுமிக்க பல பெரியோர்கள் ஒன்றுகூடி இக்கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவந்து இயங்கவைத்த செயலானது கல்லூரியின் வருங்கால வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாகும்.

அச்சுவேலி மகா வித்தியாலயம் தொடர்ந்தும் வளர்ச்சி பெற்று இப்பிரதேச மக்களின் கல்வி விருத்திக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புச் செய்ய வேண்டும் என ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

மாகாண கல்வித்திணைக்களம்
வடக்கு கிழக்கு மாகாணம்
திருகோணமலை
1999.10.11

# பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து ...

முத்து சிவஞானம்
பணிப்பாளர்
ஆரம்ப கல்வி திட்டமிடற் செயற்திட்டம்

யாவருக்கும் கல்வி, கல்வியில் சமவாய்ப்பு, கல்வியின் சமூக இயைபு, கல்வி வளப்பகிர்வில் சமத்துவம் என்பன நமது கல்விக் கொள்கையின் பிரதான பரிமாணங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இக் காலகட்டத்தில் அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் பங்கும் பாத்திரமும் மிக முக்கயமானதொன்றாகும்.

இப்பாடசாலை மிகப் பெரும்பாண்மையினரை வறிய விவசாயிகளாகவும், அன்றாடம் தொழில் செய்து பிழைப்போராகவும் உள்ள சமூகத்தை உள்ளடக்கியுள்ள பிரதேசத்தின் அறிவு விளக்கச் சாலையாக உள்ளமையும், ஏறக்குறைய மூன்று மைல்கள் அரைவட்டத்துள் கல்லூரி நிலைக் கல்வியை வழங்கும் ஒரே பாடசலையாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனடிப்படையில் நோக்கும் போது இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் இதனைச் சூழவுள்ள மக்களின் வளர்ச்சிக்கும் எத்துணை இறுகிய பிணைப்பு உள்ளது என்பது தெளிவாகிறது.

இப்பாடசாலையில் கற்கும் மாணவர்கள் பரிவுடன் அணுகப்பட வேண்டியவர்கள், அதேவேளை கண்டிப்புடன் வழிநடத்தப்பட வேண்டியவர்களும் ஆவர். அவர்களை ஊக்கப்படுத்தும் மலர்வெளியீடு போன்ற நிகழ்ச்சிகள் விதந்து ஆதரிக்கப்பட வேண்டியவையாகும்.

இப்பாடசாலையில் உதவி அதிபராக பத்துவருடங்களுக்கு மேலாக எனது தொழிற் சேவைக் காலத்தைச் செலவிட்டமையினால் இப்பாடசாலையின் வளர்ச்சியில் நலனில் இயல்பாகவே எனக்கொரு பற்றுதல் உண்டு.

இப் பாடசாலையிலே கற்றுப் பல்கலைக் கழகம் சென்று பின்னர் ஆசிரியையாகப் பணியாற்றி இன்று அதிபராக வழிநடத்தகின்ற திருமதி. ச. கனகராசாவின் தலைமையில் பல்வேறு அம்சங்களிலும் தகவுபெற்ற ஆசிரியர் குழுவொன்று உள்ளமை மகிழ்வளிக்கும் விடயமாகும். ஆசிரியர்களுட் பலர் இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் என்பதும் இப்பிரதேசத்தையே சேர்ந்தவர்கள் என்பதும் பாடசாலைக்கு வலுவூட்டும் இன்னொரு காரணியாகும்.

இங்குள்ள பாடசாலை அபிவிருத்திச் சபையின் உணர்வுபூர்வமான ஒத்துழைப்பையும் பழைய மாணவர்கள் சங்கத்தின் பங்களிப்பையும் நான் நன்கறிவேன். இத்தகைய கூட்டுச் சக்திகள் யாவும் இப்பாடசாலையை மேலான நிலைக்கு இட்டுச்செல்லும் என உறுதிகூறி கல்லூரியின் நூற்றாண்டு விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாயா

# யாழ் மாவட்டக் கல்வி வலயங்களின் இணைப்பாளரும், யாழ் வலயக் கல்விப் பணிப்பாளருமான கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி

*கலாநிதி. ச.நா. தணிகாசலம்பிள்ளை*
*வலயக் கல்விப் பணிப்பாளர்*
*யாழ்ப்பாணம்*

1892ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவினையொட்டி மலர் வெளியீடு செய்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இம்மலர் பாடசாலையின் வரலாற்று ஆவணமாகவும் அதன் வளர்ச்சியின் படிக்கல்லாகவும் அமைகின்றது.

பாடசாலை ஒரு கிராமப்புறப் பாடசாலையாக இருந்தாலும் கூட சகல அம்சங்களையும் பௌதீக வளங்களையும், கொண்ட ஒரு பாடசாலையாக இருப்பதை 1998ஆம் ஆண்டு இங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டபோது அவதானிக்க முடிந்தது. இப்பாடசாலை மாணவர்கள் விளையாட்டுக்களில் மட்டுமன்றி கல்வித் துறையிலும் ஆற்றலும், திறமையும் உடையவர்கள் என்பதை பரீட்சைப் பேறுகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும் கோட்ட, மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிகளிலும், வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும் இவர்கள் படைத்த சாதனைகளை நேரில் கண்டு மகிழ்வடைந்துள்ளேன். இப் பாடசாலை மென்மேலும் வளர்சியடைந்து கல்லூரியாகத் தரம் உயர வேண்டும் என வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

# ஆசிச் செய்தி

*சி. சிவராசா*
*கல்விப் பணிப்பாளர்*
*யாழ் வலயம் -02*

யா/ அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நூற்றாண்டு காலமாக பல சான்றோர்களை உருவாக்கிய இப்பாடசாலை அச்சுவேலியில் கலங்கரை விளக்கமாக விளங்குகின்றது.

"ஆகாயத்துக்கு அழகு சந்திரன்
நாட்டுக்கு அழகு அரசர்
பெண்ணுக்கு அழகு கணவன் – ஆனால்
உலகுக்கு அழகு கல்விதான் "

என நீதி சாஸ்திரம் கூறுகிறது. அச்சுவேலிக்கு அழகு அச்சுவேலி மகாவித்தியாலயம்.

இருபத்தோராம் நூற்றாண்டின் சவால்களை முகம் கொடுக்கக்கூடிய சான்றோர்களை உருவாக்க இக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், ஏனைய நலன் விரும்பிகளும் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**வாழ்க வளர்க அச்சுவேலி மகாவித்தியாலயம்**

**வாழிய அச்சுவேலி மாணவர்கள், ஆசிரியர்கள்**



# வலிகாமக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வீ. இராசையா
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயம் வலிகாமம்

**"கேடில் விழுச் செல்வம் கல்வி என்ற கருத்தில் வளர்க"**

ஒரு பாடசாலை கல்விச் சேவையில் நூற்றாண்டுகளைக் கழித்திருப்பதென்பது மகிழ்வோடு மனங் கொள்ளத் தக்கதாகும். இவ் வகையிலே யா/ அச்சுவேலி மகாவித்தியாலயம் ஒரு நூற்றாண்டினைக் கல்விப் பணியில் கழித்து 108ஆம் ஆண்டிலே நூற்றாண்டு நிறைவு மலரை வெளியீடுவது அதன் கடந்த கால நினைவுகளை நினைவு கூரச் செய்கின்றது.

ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்திலே திண்ணைப் பள்ளிகளின் ஆரம்பம் ஓர் படிக்கல்லாக அமைகின்றது. ஐரோப்பியரின் ஈழநாட்டு வருகையினால் வளப்படுத்தப்பட்ட கல்விப் பாரம்பரியத்திலே அமெரிக்கன் மிஷனரியின் அரவணைப்பில் ஆங்கிலப் பாடசாலையாக இது பரிணமித்தது. வணக்கத்துக்குரிய பிதா ஜே. எம். சான்டேஸ் அவர்களின் கீழ் உருப்பெற்றது.

பின்னர் கிறிஸ்தவக் கல்லூரியாக கிறிஸ்தவ மணம் பரப்பிக் கல்விச் சேவையில் கற்றறிந்தார் பலரை அவனிக்களித்தது. இந்துப் பெரியார்களின் ஆதரவுடன் உயர் கல்விக்குரிய வகுப்புக்களைத் தன்னகத்தே கொண்டு யா/ அச்சுவேலி மகாவித்தியாலயமாக மிளிர்ந்தது. பாடசாலைகளின் அமைப்பு முறைகளின் மாற்றத்துக்கு ஏற்ப அச்சுவேலிக் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாக உயர்வைப் பெற்றது. கொத்தணி, கோட்டம், மாவட்டம் என்ற நிலைகளில் தனக்கெனத் தனியான முத்திரைகளைப் பதித்துச் சாதனைகள் பல படைத்தது. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக சாதனைகள் படைத்துத் தலைநிமிர்ந்து நிற்கும் இப் பாடசாலையின் மலர் சிறப்புற அமைவதைக் கல்வி உலகம் பாராட்டாமல் இருக்க முடியாது. கேடில் வீழுச் செல்வம் கல்வி என்ற தேடற்கரிய கருத்தில் நின்று செயற்பட என் உளமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

# தென்னிந்திய திருச்சபைப் பேராயரின் வாழ்த்து

*எஸ். ஜெபநேசன்*
*தென்னிந்திய திருச்சபை பேராயர்*

108 ஆண்டுகள் நிறைவுறும் அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி ச. கனகராசாவிற்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் எனது இனிய வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அச்சுவேலி நீர் வளமும், நில வளமும் நிறைந்த ஊர். சமீபத்தில் அது ஷெல்வந்த ஊர் என்றும் பெயர் பெற்றுள்ளது.

அச்சுவேலி அமெரிக்கன் மிசன் கிறிஸ்தவர்கள் 1892ல் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தனர். இதனைப் பற்றி அச்சுவேலித் திருச்சபையின் 1892ம் ஆண்டின் பதிவேடு பின்வருமாறு கூறுகின்றது,

"ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஒன்றும் புதிதாய் அச்சுவேலியில் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சுவேலியில் ஆங்கிலம் படித்தவர்கள் இல்லையென்று சொல்லலாம். எந்தப் பகுதியில் இருக்கும் கிறிஸ்தவர்களும் ஆங்கிலக் கடிதம் வாசிக்க வேண்டுமாயின் போதகரிடம் போவார்கள். படித்தவர்கள் இல்லாதபடியால்தான் தீமைகள் இங்கு பெருகுகின்றது என்று கண்ட போதகர் ஒரு பள்ளிக்கூடம் இங்கே அவசியம் வேண்டுமென்று உணர்ந்து ஏற்கனவே அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தது மாத்திரமின்றி அப்படிப்பட்ட பள்ளிக்கூடமொன்று வேண்டுமென்று சனங்களும் உணரத்தக்கதாய்ச் செய்து வந்தார். இப்போது 36 பிள்ளைகள் ஆங்கிலம் படிக்கிறார்கள். நாலு, ஐந்து பிள்ளைகள் பெரிய பள்ளிக்கூடங்களிலும் போய்ப்படிக்கிறார்கள். ஆங்கிலம் படிப்பிக்கும் உபாத்தியார் முழுதும் பிள்ளைகளாலேயே தாபரிக்கப்படுகிறார். மாதவீதம் 16 ரூபா ஒழுங்காகச் சம்பளம் கொடுத்து வருகிறார்கள்.

1895ல் இப்பாடசாலையில் இரண்டு ஆசிரியர்களும், 44 ஆண் பிள்ளைகளும், 01 பெண் பிள்ளையும் இருந்ததாகப் போதகர் அறிக்கை கூறுகின்றது. 1889ல் இங்கு 64ஆண்களும் 10 பெண்களும்

படித்ததாகத் தெரிகிறது. 4 ஆசிரியர்கள் படிப்பித்தனர். பிள்ளைகளிடமிருந்து சேர்க்கப்பட்ட வருடாந்தக் கட்டணம் ரூபா 414.75 ஆகும்.


1920ம் ஆண்டு இந்த ஆங்கிலப் பாடசாலை யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகத்தின் கீழ் வந்ததும் அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி எனப் பெயர் பெற்றது. 1943ம் ஆண்டு அரசின் உதவி நன்கொடைத் திட்டத்தில் சேர்ந்துகொண்டதும் 1960ல் அரசினால் சுவீகரிக்கப்பட்டு அச்சுவேலி மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டதும் வரலாற்றுச் செய்திகள் ஆகும்.

அச்சுவேலி மகா வித்தியாலயத்தைப் பற்றி நான் நன்கு அறிந்திருக்கிறேன். எனது தமையனார் திரு.எஸ்.என்.சுகுணானந்தன் 1956–1957ல் இங்கு சில காலம் கற்பித்ததாக ஞாபகம்.

திரு. இரத்தினம் – சிங்கரத்தினம் அதிபர் அவர்கள் உடுப்பிட்டித் திருச்சபையின் கற்றூண். அவர் இறக்கும் வரையும் அச்சுவேலி மகா வித்தியாலயமே அவரின் பேச்சும் மூச்சுமாகவிருந்தது.

இன்றுள்ள அதிபர் திருமதி ச. கனகராசா அச்சுவேலிப் பாடசாலையின் பாரம்பரியத்தில் மிகுந்த ஆர்வமுடையவர். அவருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இறைவனின் நல்லாசி கிட்டவேண்டுமென்று பிராத்தித்து இவ் வாழ்த்துரையை முடிக்கின்றேன்.



# ஆசியுரை

*சிவஸ்ரீ. கு. வை. விருத்தகிரீசக் குருக்கள்
உடலவிக்குளம் சித்திவிநாயகர் தேவஸ்தானம்
அச்சுவேலி*

"யாவிலும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்'' என்று பாரதியார் பாடினார். "எழுத்தறிவித்தவன் இறை வன்'' என்பது முதுமொழி. கல்விப் பணியூட்டும் கல்வி நிலையங்கள் தெய்வ சந்நிதானங்களுக்குச் சமமாக மதிக்கப்பட வேண்டியவை.

அந்த வகையில் அச்சுவேலி வாழ் மக்களுக்கு அறிவு வழங்கும் யா/ அச்சுவேலி மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழா கொண்டாடுவது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந் நூற்றாண்டு மலர் வெளியிட முன்வந்த யா/ அச்சுவேலி மகாவித்தியாலயத்தைச் சார்ந்தவர்களின் பண்பைப் பாராட்டி எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

இப் பாடசாலையின் பன்முகப்பட்ட சமய, கலை, கல்விப் பணிகளை இளைய தலைமுறையினரும் அறிய இம்மலர் பெரிதும் உதவும் என நம்புகின்றேன். இப் பாடசாலையின் பழைய மாணவர் கள் பலரும் கல்வியில் சிறந்து சமூகத்தின் நற்பிரசைகளாகத் திகழ்வதும் சிறப்புக்குரியது.

நூற்றாண்டு விழாவும், மலரும் சிறந்து விளங்கவும், அனை வரும் நல்வாழ்வு பெறவும், சகல மங்களங்களும் நல்கும்படி இறை வன் திருவடிகளை வணங்கி ஆசி கூறி அமைகின்றேன்.

# பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி

Fr. X. W. ஜேம்ஸ்
பங்குத்தந்தை
அச்சுவேலி

அச்சுவேலி மகாவித்தியாலயம் தனது நூற்றெட்டாவது ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதையிட்டு பாடசாலைச் சமூகத்துடன் சேர்ந்து நானும் மகிழ்ச்சி அடைகின்றேன். இப்பாடசாலையானது சிறிய கிராமத்தில் அமைந்திருந்தாலும் இதனுடைய பணியானது அளப்பரியது. பல அறிஞர்களை, ஆசிரியர்களை, கல்விமான்களை இத்தாயானவள் பெற்றிருக்கின்றாள் என்றால் அது பொய்யாகாது.

போர்ச்சூழலுக்கும், இடம்பெயர்வுகளுக்கும் மத்தியிலும் இப் பாடசாலையானது நிமிர்ந்து பல வளர்ச்சியைக் கண்டு காலத்தின் குறிகள் உணர்ந்து தன்னுடைய பிள்ளைகளை அறிவிலும் ஒழுக்கத் திலும் ஆன்மீகத்திலும் வழிநடாத்தி வருகிறாள். இதற்காக அயராது உழைக்கும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற் றோர்கள், நலன்விரும்பிகளை வாழ்த்தி நிற்கின்றேன்.

இறைவன் இப்பாடசாலையையும் மாணவர்களையும், அதிபர், ஆசிரியர்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

St. Joseph's Church
Atchuvely

To make Christ known

# நீடு வாழ்க நின்புகழ்

*க. கேதீஸ்வரன்*
*பிரதேச செயலர்*
*கோப்பாய்*

1892ஆம் ஆண்டு அமெரிக்க மிசனறியால் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவக் கல்லூரி இன்று அச்சுவேலி மகாவித்தியாலயமாகி நூற்றாண்டைக் கடந்து நூற்றெட்டாவது அகவையில் காலடி எடுத்து வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து"**

என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்க எழு பிறப்பும் தொடர்ந்து வரும் கல்வியினை மாணவர்க்கு வழங்கி ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேருன்றி விழுதுவிட்ட கல்விக்கூடமாக தலைநிமிர்ந்து நிற்கின்றது.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரும் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவிலும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற புதுமைக் கவிஞன் பாடலுக்கு இலக்கணமாக விளங்கி ஆயிரமாயிரம் சிறார்களின் கல்விக் கண்களைத் திறந்து வைத்தது இக்க கல்விக் கூடம். இங்கு பயின்ற கல்விமான்கள், அறிஞர்கள், பல்துறை விற்பன்னர்கள் இலங்கையிலும், பிறநாடுகளிலும் இப் பாடசாலையின் புகழ் பரப்பி நிற்கின்றார்கள். இக் கலைச்சேவையானது மென்மேலும் சிறப்புற வாழ்த்தி அமைகின்றேன்.

# ஆசிச் செய்தி

*திரு. இ. சிவஞான சுந்தரம்*
*உதவிக் கல்விப் பணிப்பாளர்*
*கோப்பாய்ப் பிரிவு*

மதமும் கல்வியும் இரு கண்களாய் இணைந்து அறிவொளி பரப்பி வளர்ந்து நிற்கும் இவ் அறிவாலயத்தின் நூற்றாண்டு மலருக்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இப் பிரதேசத்தில் ஒடுக்கப்பட்டிருந்த கல்வியை யாவர்க்கும் பெற வாய்ப்பளித்த அமெரிக்கன் மிசனறியினர் சுதேச மொழியுடன் ஆங்கில மொழியையும் உகந்தளித்தனர். இப் பகுதி மக்களின் சமூக, பொருளாதார, கலாசார கல்வி நிலையை உயர்த்துவதில் மேலான பணியை ஆற்றினர் என்பது வரலாற்று உண்மை.

மிசனறியின் கீழ் இயங்கிவந்த இப் பாடசாலை அரசு பொறுப்பேற்ற பின்பும் தனது தனித்துவத்தை இழக்காது எத்தனையோ இடர்பாடுகள், இடப் பெயர்வுகள் மத்தியிலும் அணையா விளக்காய் என்றும் பிரகாசித்து நிற்கின்றது.

கல்லூரியின் கல்விச்சேவை ஒழுக்க நலனோடு கூடியதாய் அமைந்திருந்தமையால் பலர் பல துறைகளில் உயர்பதவிகளை வகித்து வருகின்றனர். இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் அதிபர், ஆசிரியர்கட்கும் எனது நல்லாசிகள். மகாவித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சியடைந்து கல்விப்பணியைச் சிறப்புடன் ஆற்றவேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.



# வளர்ச்சிப் பாதையில் அச்சுவேலி மகாவித்தியாலயம்

*ஆ. ராஜேந்திரன்*
*உதவிக் கல்விப் பணிப்பாளர்*
*வலயக் கல்வித் திணைக்களம்*
*வடமராட்சி*

பழம் பெரும் கிராமமான அச்சுவேலிப் பகுதியில் இப்பாடசாலை ஒரு நூற்றாண்டைக் கடந்து புகழ்பரப்பி நிற்கிறது. ஒரு பாடசாலையின் வரலாற்றில் நீண்ட இவ்வாறானதொரு காலப்பகுதி கவனத்திற் கொள்ள வேண்டியதொன்றாகும்.

சிறந்த பயன்தரு பாடசாலை ஒன்றிற்கான அம்சங்கள் பலவற்றை இப் பாடசாலை கொண்டுள்ளது. “நல்ல தலைமை ஆசிரியர் உள்ள கூடாத பாடசாலை இல்லை” என்பது கல்வியாளர் கருத்து நல்ல கண்ணியமான அதிபர் ஒருவர் இப் பாடசாலையைத் தற்போது நிர்வகித்து வருகிறார். நல்லாசிரியர்கள் பெரும்பாலானவர்களைக் கொண்ட ஆசிரியர் குழாம் ஒன்று இங்கு சேவையாற்றுகின்றது. அதிபர், ஆசிரியர் உறவுகள் நன்னிலையிலுள்ளன. ஆசிரிய மாணவ நல்லுறவுகள் மிக மேம்பட்ட நிலையில் பேணப்படுகின்றன. இப் பாடசாலைக்கு என உயர்வான குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதனை அடையப் பாடசாலைச் சமூகத்தினர் அனைவரும் பாடுபடுகின்றனர். இத்தன்மைகளால் நல்லதொரு கற்றல் கலாசாரம் இப்பாடசாலையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறத்தில் அன்பையும், அறிவையும் நற் பண்புகள் சார் வாழ்க்கை முறைகளையும் வழங்கும் இத்தகைய பாடசாலைகளினால் நற்சமூக உருவாக்கமும், சமூக மேம்பாடும் நிதர்சனமாகியுள்ளன. கடந்த குறுகியதொரு காலத்தில் இப்பாடசாலை கல்வியிலும், இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஈட்டியுள்ள சாதனைகள், வெற்றிகள் என்பன குறிப்பிடத்தக்கன. இவ்வாண்டில் இப்பாடசாலையில் உயர்தர பிரிவில் கணிதபாட பிரிவு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இச் செயற்பாட்டினால் இப் பாடசாலை மாணவர்களும் இருபத்தொராம் நூற்றாண்டிற்குள் துணிவோடு பிரவேசிப்பதற்கான நுழைவாயில் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேச மாணவர்களின் கல்வியில் மறுமலர்ச்சியையும், உத்வேகத்தையும் ஏற்படுத்த வேண்டும். இதற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் அனைவரும் அயராது உழைக்க வேண்டும். உயர் விழுமியங்களின் தாயகமான இப்பாடசாலை துணிவோடும், திறனோடும் சாதனைகள் பல படைத்து இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைத்தோங்க என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# நல்ல அறிவாலயமாக ஒளி வீசட்டும்




நூற்றாண்டு விழாக்கால அதிபர்

திரு. சி. செல்லையா
உதவிக் கல்விப்பணிப்பாளர்
கோட்டக்கல்வி அலுவலகம்
சங்கானை

யா/அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாமலர் வெளிவர உள்ள இத்தருணத்தில் அம்மலருக்கு ஆசியுரை வழங்கக் கிடைத்தமையை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

1992ம் ஆண்டில் நூறாண்டுகளைத் தன் கல்விப்பணியில் கழித்த இவ்வறிவாலயம் பல்வேறு கல்விச் சாதனைகளை இத்தரணியில் புரிந்து தலைநிமிர்ந்து நிற்பது எம்மையெல்லாம் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்துகின்றது.

1992ம் ஆண்டில் இவ்வறிவாலயத்தின் நூறாண்டு நிகழ்வின்போது அதிபர் பதவியை அலங்கரித்த பேறு எனக்குக் கிடைத்திருந்தமை என் பெரும்பேறாகவே நான் கருதுகின்றேன். ஆத்தருணத்தில் நூறாண்டு நிகழ்வுகளைப் பல்வேறு கட்டங்களாக நடத்தி முடிததுப் புகழ்பெற்றது இவ் அறிவாலயம். எனினும் நூறாண்டு விழா மலர் ஒன்றினை வெளியிடுவதற்கு அன்று எடுத்த முயற்சி கைகூடவில்லை. திரு. க. கனகராசா அவர்கள் அன்று பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினராக இருந்து தொடங்கிய இப்பணி அவரின் துணைவியார் அதிபராக இருக்கும் இவ்வேளையில் நிறைவு பெறுவதையிட்டு மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றேன்.

நல்ல செயல்திறனும் ஆழ்ந்த அறிவும் ஊக்கமும் கொண்ட ஆசிரியர்களையம் துடிப்புமிக்க சிந்தனை ஆற்றல்மிக்க பெற்றோர்களையும் நலன் விரும்பிகளையும் ஆற்றல் மிக்க மாணவர்களையும் அடித்தளமாகக் கொண்டது என்பதை நான் நன்கு அறிவேன். ஆர்ப்பணிப்பும் அயராத உழைப்பும் ஆக்கத்திறனும் அசையாத நம்பிக்கையும் மிக்க அதிபரின் நல்லூக்கத்தினால் நல்ல அறிவாலயமாக ஒளிவீச இறைவனை யாசித்து ஆசிவழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

# A MESSAGE

K. Sivasubramaniam
Retired Cluster Principal
J/Atchuvely Mahavidyalaya.

It is indeed a great pleasure to send this message to a historic souvenir being published to mark the completion of its one hundred and eight years.

I started my education in English in this institution at the third standard when Mr. S. Veerasingham was Principal of this school who was also a great scholar in English. The Knowledge of English I learnt from my teachers of English in this school helped me to obtain a Degree in English and to be enrolled as an officer in the Sri Lanka Education Administrative service.

It had been a privilege to me to be a teacher in this institution from 1957-1972 and as a cluster principal from 1987-1990. In the year 1958 the then principal Mr. R. Singaratnam obtained permission from the department to hold Advanced Level Classes in Arts and I was entrusted as a teacher to teach subjects in the Advanced Level Classes too. In spite of being a village school many students had gained admissions to the University of Ceylon and are occupying eminent positions in all walks of life in this Country and abroad. To add proof and glory to this institution and village the present principal Mrs. S. Kanagarajah is an illustrious example of her high academic talents. Past principals, teachers, students and villagers had been always faithful to the American Mission for having guided them to attain high academic talents in education although majority of the pupils had been Hindus. This showed the Missionous extreme dedication to humanity and the poor students.

In conclusion I wish to add that this school which is one of the oldest institution in this Country to impart and develop English education be achieved with more growth and progress and success for many more years to come.

I wish celestial bless to this institution in all its endeavours.

# யாழ். மத்திய கல்லூரியின் அதிபரும், வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபருமான திரு. க. இராசதுரை அவர்களின் ஆசியுரை

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் கிறிஸ்தவ நிறுவனங்களின் பங்களிப்பு அளப்பரியது. மெதடிஸ்தமிசன், அங்கிலிக்கன், தென்னிந்தியத் திருச் சபை என கிறிஸ்தவ மிசனரிமாரின் கல்வித் தொண்டில் வலிகாமம் கிழக்கின் மூத்த கல்வி நிறுவனமாக அச்சுவேலி மகாவித்தியாலயமே திகழ்கின்றது. அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியாக புகழ் பூத்து பெயரை மாற்றி பிற்காலத்தில் அச்சுவேலி மகாவித்தியாலயமாக நிற்கின்றது. வலி வடக்கு, வடமராட்சி, வலி கிழக்கு பகுதியின் மத்திய நிலையமாக இது அமைந்திருந்ததனால் கல்வித் திணைக்களம் ஒரு கொத்தணிப் பாடசாலையாகவும் இதனைத் தெரிந் தெடுத்தது.

இக் கல்விக் கோவிலின் வளர்ச்சியைக் கண்டு பல கல்வி நிறுவனங்கள் வடக்கேயும், தெற்கேயும், மேற்கேயும் உருவாகி சிலகாலம் இதனை நிழல் மூடிய தாவரமாக நலிவச் செய்தன. அவைகளின் வளர்ச்சியில் தானும் பங்கு கொண்டு அவற்றை வளர்க்கும் ஊட்டப் பாடசாலையாகவும் உதவியது. "கொடுத்தார்க்குக் குறைவில்லை'' என்பது போல அவை இடையில் வீழ்வுற, இயங்காது அவற்றின் பங்கு பணியையும் சேர்த்து இக்கல்லூரி வளர்வுற்று இன்று அடக்கமான, ஆனால் நிதானமான கல்விப் பணியைப் புரிகின்றது. இன்று நூற்றிஎட்டு ஆண்டு காலம் நிறைந்த பணியாற்றி வலிகிழக்கில் அதிகம் மாணவர்களையும், கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற் பாடுகளிலும் தனக்கென ஒரு நிலையை ஏற்படுத்தி உயர்ந்து நிற்கின்றது.

மிக மோசமான யுத்த சூழ்நிலையிலும் கூட யுத்த மேகங்கள் இக் கல்லூரியைச் தடவிச் சென்றனவே தவிர தள்ளிச் செல்லவில்லை.

நான் அதிபராக இக் கல்லூரிக்கு ஆற்றிய சேவைக்குப் பின்பு தற் போது பொறுப்பேற்றுள்ள அதிபர் திருமதி. ச. கனகராசா இக் கல்லூரியால் வளர்ந்தவர், இக் கல்லூரியை வளர்ப்பவர் என்ற இரண்டு பெருமைகளையும் பெறுகின்றார்.

தற்போது இக்கல்லூரி அவரின் காலத்தில் எதிர்பார்க்கும் முக்கிய வளர்ச்சிகள் இவை

* விஞ்ஞானப் பிரிவுகளைக் கொண்ட க.பொ.த உயர்தர வகுப்புக்கள் கொண்ட உயர் கல்லூரியாக
* சகலத்திற்கும் மத்தியமாக விளங்குவதால் அச்சுவேலி மத்திய கல்லூரி என்ற பெயரால் முன்னைய பெயருக்கேற்ற பெயரைக் கொண்ட கல்லூரியாக
* கல்லூரியுடன் இணைந்த ஒரு விளையாட்டு மைதானத்தை அமைத்துக் கொண்ட பூரணமான கல்லூரியாக

இது மிளிர வேண்டும் என்பதே அதன் மகுட வாசகமான "என்றும் ஒளிரும் விளக்கு'' மிளிர, ஒளிர எனது வாழ்த்தும் ஆசியும் என்றுமுண்டு.

# Message

- Mrs. Buvaneswary Kanapathipillai -

My Schooling at Atchuvely Christian College began in the year 1945, and ended in the year 1953. During my school career, this school founded by the Church of South Indian Mission, gradually developed, and I was perhaps, one of the 'first' batch of students who got through the S.S.C. I left school in 1953 during the stewardship of Mr.Rajaratnam, and joined Vembady Girls College, and proceed from there to the University for graduation.

I rejoined Atchuvely Christian College in 1960, after graduation, and served the school as a teacher for 21 years, Sectional Head for 7 years Deputy Principal for 6 years and Principal for 3 years., and retired from my Alma-mater in 1998 with solace and satisfaction., that I have sowed the seed of eternity and prosperity to the Villagers of Atchuvely.

I recall with happiness and gratitude, my days at Atchuvely Christian College. My period as a student still remains afresh, in mind. I started life there most unwillingly as all children do, but by and by, the school became a second home. The Principal Mr. Rajaratnam, stern disciplinarian, had 15 members on the staff. The student-teacher relationship was always very cordial.

When I joined the school as a teacher in 1960, The Principal was Mr.Singaratnam and there were about 20 teachers on the permanent cadre. I remained happy and contended that I was at my Alma-mater. We had classes from Gr. 1 to S.S.C. and the number on roll was about 400.

The school grew big under the Principalship of Mr. Singaratnam and the P.T.A & O.B.A stretched a great deal to help the school become popular. The Science Lab and the Home Science Lab were put up and all round education was well provided. The lack of a school play-ground remains a threat to the increasing admission. The results of the O/L classes improved and Atchuvely Christian College was renamed as Atchuvely M.V. in 1961. The Principal, when this change of name took place was Mr. Singaratnam and the P.T.A. played a major role.

The Principals served thereafter were, M/S Ramasamy, Pathmanaban, Thuraisingam, Sivasubramanian, Chelliah, Rassathurai, and when I took over in 1995, I was perhaps the 'first' lady Principal, who adorned the Principals chair.

What began as a small school with a small building, has today grown up into a leading Educational Institution and may Atchuvely Maha Vid. Shine forever.

# ஆசிரியர் கழகத்தின் வாழ்த்துச்செய்தி

ஆசிரியர் கழகம்
யா/ அச்சுவேலி ம.வி.

வளம்மிக்க அச்சுவேலிப் பதியிலே ஆரம்பத்தில் அமெரிக்கன் மிசன் பாடசாலை என்றும், பின்னர் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி என்றும், தற்பொழுது அச்சுவேலி மகாவித்தியாலயம் என்றும் அழைக்கப்பட்டுவரும் எமது கலைக்கூடம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி வீறுநடை போடுகின்றது. கல்வி என்னும் அறிவுப் பேரொளி கிடைக்காத அக்காலத்தில் இப்பகுதி வாழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாய் நின்று பலதுறை வல்லு நர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியது.

நூற்றாண்டைக் கடந்து இன்றும் மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் பெரும் பங்காற்றி வருகின்றது. எம் மண்ணின் தேச மன்னராக வளரும் சேய்களுக்குச் செம்பரிதி போல் உறுதி நல்கி ஒளி வீசும் இக்கல்லூரி ஒரு தேசியக் கல்லூரியாக உருவாகி பல்துறையிலும் சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்து, இக் கிராமத்திற்கும், அயல் கிராமங்களிற்கும் தன்னாலான சேவையைச் செய்ய வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றோம்

# A Message . . .

*V. Satchithananthan,*
*Asst. Director of Education (Planning)*

I consider it a privilage to send this Massage on the occasion of the Centenary Celebrations of Atchuvely Maha Vidyalaya, which is one of the leading Educational Institutions in the North.

An Educational Institution which has withstood the trials and tributions of a hundred year period and imparted an excellent Education to thousands of its students deserves Commendation by one and all.

I am sure everybody who had ties with this great school would agree that the school owes a lot to the founders.

The old students whatever their attainments, will always have an abundance of good-will, admiration and respect for their Alma Mater and I join them in saluting her for her service to the Community over the past one hundred years.

On this historic occasion, I wish the principal, staff and students of this college every success.

*Zonal Dept. of Education,*
*Zone Valikamam,*
*Maruthanarmadam,*
*Chunnakam.*
09.11.1999

# பரீட்சைப் பெறுபேறுகள் 1998

**க.பொ.த. உயர்தரம் 1998**

பல்கலைக்கழக அனுமதி

1. செல்வன் அ. கிரிசாந்தன் A 2B C - 282 புள்ளிகள்
2. செல்வன் தி. ஜெராட் செல்வராசா 3B C - 275 புள்ளிகள்

நுண்கலை – சங்கீதம்

1. செல்வி ப. சர்மினி
2. செல்வி பொ. விமலேஸ்வரி

20 பேர் பல்கலைக்கழகத்தகுதி பெற்றனர்.

**க.பொ.த. சாதாரணதரம் 1998**

1. செல்வி சி. சசிரேகா – 7 D
2. செல்வன் ந. இளங்கீரன் – 5 D 2 C
3. செல்வி இ. றதினி – 4 D 4 C
4. செல்வன் த. சுதன் – 4 D 3 C
5. செல்வன் நா. குகாதரன் – 3 D 4 C S
6. செல்வி சி. சத்தியதேவி – 3 D 4 C S
7. செல்வி பா. பிரதீபா – 3 D 4 C S
8. செல்வன் சி. சஞ்சீவன் – 3 D 4 C
9. செல்வன் அ. பிரியதர்சன் – 3 D 4 C
10. செல்வன் சி. பிரதீபன் – 3 D 3 C 2 S
11. செல்வன் க அருள்நம்பி – 3 D 3 C S

56 மாணவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றனர்.

**1998 5ம் தரம் புலமைப்பரிசில் பரீட்சை சித்தியெய்தியோர்**

1. செல்வன் ஞா. செந்தூரன் – 111 புள்ளிகள்
2. செல்வி அ. வினிதிகா – 111 புள்ளிகள்
3. செல்வி இ. றிசானி – 111 புள்ளிகள்

**1999 5ம் தரம் புலமைப்பரிசில் பரீட்சை சித்தியெய்தியோர்**

1. செல்வி சி. கஸ்தூரி – 140 புள்ளிகள்
2. செல்வன் சி. பங்கயன் – 128 புள்ளிகள்
3. செல்வி கு. தீபவாணி – 122 புள்ளிகள்
4. செல்வி ஞா. பகீரதி – 122 புள்ளிகள்
5. செல்வி. இ. சஸ்மிதா – 121 புள்ளிகள்

## எங்கள் அதிபர்



திருமதி. சகுந்தலாதேவி கனகராசா அதிபர் தரம் 1
B.A.DIP.IN.ED

# அதிபரின் எண்ணத்தில் . . . .

## திருமதி. ச. கனகராசா

நூற்றெட்டு ஆண்டுகளை நிறைவு செய்கின்ற எமது கல்லூரியின் வரலாற்று ஆவணமாகவும் தகவல்களின் பொக்கிஷமாகவும், சாதனைகளைப் பிரதிபலிக்கும் ஏடாகவும் மலரும் இந்த நூற்றாண்டுச் சிறப்புமலர் எனது பதவிக் காலத்தில் மலர்வது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். 1892ம் ஆண்டு சாண்டேஸ் போதகர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வறிவாலயம் இன்று வளர்ந்து கிளை பரப்பி விருட்சமாகி விழுதுவிட்டுப் படர்ந்துள்ளது. இங்கு கல்வி கற்று அறிவு பெற்ற என்னிலடங்கா மாணவர்கள் அகில உலகமெல்லாம் அறிவாளிகளாகி அறிவொளி பரப்பி வாழ்கின்றனர்.

இக்கல்லூரியில் கல்வி கற்கும் பேறுபெற்ற யான் இங்கே ஆசிரியராக 15 வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் வாய்ப்பினைப் பெற்றேன். எனது சொந்த ஊரில் இக்கல்லூரியில் மாணவராக பின் ஆசிரியராக இன்று அதிபராகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது எனது தவப் பயனேயாகும். நீண்ட காலம் இக்கல்லூரியின் ஆசிரியராகவும் உபஅதிபராகவும் அதிபராகவும் கடமையாற்றிய திரு. சி. சா. துரைசிங்கம் அவர்களிடமும் கொத்தனி அதிபரும், எனது குருவுமாகிய திரு.க.சிவசுப்பிரமணியம் அவர்களிடமும் நான் ஆசிரியராகச் சேவையாற்றிப் பெற்ற அனுபவங்களே இன்று எனது நிர்வாகத்திற்கு உறுதுணையாக இருக்கின்றன. எனது உயர்விற்கு உறுதுணையாக இருந்த அதிபர்களை நான் சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன். இவ்விரு அதிபர்களில் ஒருவர் இன்றும் எமது கல்லூரிக்கு வழிகாட்டியாகவும் ஆலோசனை வழங்குபவராகவும் இருந்து எனக்கு உறுதுணையாய் இருப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலை இடம்பெயர்ந்து மீள இயங்கத் தொடங்கிய காலத்தில் இங்கு தளபாட வசதிகளோ, ஆசிரிய ஆளணியினரோ போதுமாக இருக்கவில்லை. அவற்றையெல்லாம் ஓரளவு சீர்செய்து பாடசாலையைப் புனரமைத்து என்னிடம் கையளித்தவர் எனது ஆசிரியரும், கல்லூரி அதிபருமான திருமதி. பு. கணபதிப்பிள்ளை அவர்களே. அவர்கள் ஆற்றிய பணி பாராட்டுக்குரியதே.

இக்கல்லூரியின் அதிபர் பதவியை எற்று இருவருடங்கள் மாத்திரமே ஆகின்றன. எனினும் இக்காலத்தில் இக்கல்லூரியின் வளர்ச்சி சகல துறைகளிலும் சிறப்பாக அமைந்துள்ளது என்று கூறுவதில் பெருமை அடைகின்றேன். பௌதீகவள விருத்தியிலும் சரி, இணைப்பாட செயற்பாடுகளிலும் சரி, பரீட்சைப் பெறுபேறுகளிலும் சரி எமது கல்லூரி தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பிடித்துக் கொண்டது. கல்லூரியுடன் இணைந்த விளையாட்டு மைதானம் இல்லாத நிலையிலும்கூட எமது மாணவர்கள் உடற்பயிற்சிப் போட்டிகளில் சிறந்த சாதனைகளைப் படைத்துள்ளனர். கரபந்தாட்டப் போட்டியில் கூட எமது மாணவர் குழு வடக்குக் கிழக்கு மாகாணப் போட்டிக்கு 1998ல் தெரிவு செய்யப்பட்டமை பாராட்டுக்குரியதாகும். பயிற்சி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர் இல்லாத நிலை

யிலும் கூட சாதாரண ஆசிரியர்களின் பயிற்சியின் மூலமே இச்சாதனைகள் படைக்கப்பட்டன என்பதை மகிழ்வுடன் கூறுகின்றேன்.


பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும், ஆசிரியர்களும் ஒரே நோக்கில் புரிந்துணர்வுடன் செயலாற்றி வருவது எமது கல்லூரி வளர்ச்சியின் அடித்தளமாகும். 1998ல் வழங்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் பெறப்பட்ட நிதியினால் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்ட கட்டடத்திருத்த வேலைகளினால் சேதமடைந்து காணப்பட்ட எமது கல்லூரி இன்று புதுப்பொலிவு பெற்று அழகுடன் காட்சியளிக்கின்றது. சேவையுள்ளம் கொண்ட இவர்களின் முயற்சியால் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு, மேற்பிரிவு முழுவதும் பூரணமாகத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திருத்த வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பரீட்சைப் பெறுபேறுகள் இக்காலத்தில் மிகவும் சிறப்பாக கிடைத்துள்ளமையும் சிறப்பானதேயாகும். க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 1998ம் ஆண்டில் 90 மாணவர்கள் 6 பாடங்களில் சித்தியடைந்துள்ளனர். அவர்களில் 20 பேர் கணித விஞ்ஞான பிரிவு உயர்வகுப்பில் கற்கத்தகுதி பெற்றமை போற்றுதற்குரியதாகும். நீண்ட காலவரலாற்றில் இப்போது சிறப்பானதாகும். இப்பேற்றின் மூலம் எமது கல்லூரியில் கணித உயர்வகுப்பு அமைப்பதற்குக் கல்வித் திணைக்கள அனுமதி கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது. 1998ம் கல்வி ஆண்டில் 5 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள், பழைய மாணவர்கள் அனைவரதும் அரும்பணியினால் எம்மை நாடி வந்த, நம்பி வந்த மாணவர்களை பேணி அறிவூட்டி வருகின்றோம். இந்நிறுவனத்தின் வரலாறுகள் ஆவணங்களைப் போற்றிப் புதிய தலைமுறையினரும் இவற்றை அறிய வேண்டுமென எடுத்த முயற்சியே இம்மலர் வெளியீடு ஆகும்.

இக்கல்லூரி நூற்றாண்டு வரலாற்றுப் பெருமை உடையது. எனினும் எமக்குக் கல்லூரியுடன் இணைந்த விளையாட்டு மைதானம் இல்லாமையும், மாணவர்களின் பிரார்த்தனை மண்டபம் இல்லாமையும் எல்லோர் நெஞ்சங்களையும் அழுத்தும் ஒரு பெரும் வேதனையாகும். இவ்விடயத்தை திணைக்களமும், பெற்றோரும், பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும், பெரியோர்களும் உணர்ந்து செயற்படுவார்களாயின் எம் குறை கட்டாயம் தீர்க்கப்பட்டு எமது கல்லூரி தலைநிமிர்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக இப்பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்கு ஆதரவும் ஊக்கமும் வழங்கிய பிரதி அதிபருக்கும், பகுதித் தலைவர்களுக்கும், ஆசிரிய அணியினருக்கும், மாணவச் செல்வங்களுக்கும், பெற்றோர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் சிறந்த ஆசியுரைகளை வழங்கி வாழ்த்திய சகல வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களுக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,, பிரதேச செயலருக்கும், தென்னிந்திய பேராயர் அவர்களுக்கும், கத்தோலிக்க சைவ மதகுருமார்களுக்கும் மலர் வெளியீட்டுக்குழு, உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எமது கல்லூரி மேன்மேலும் வளர்ந்து சிறப்படைய இறைவனை வேண்டுகிறேன்.



திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா
பிரதி அதிபர்



திருமதி.த.இராசரத்தினம்
பகுதித்தலைவர்




திரு.நா. சண்முகரத்தினம்
பகுதித்தலைவர்

# முன்னாள் அதிபர்களில்




திருமதி. கணபதிப்பிள்ளை
1944 ~ 1950
1996-1997




அமரர்
எஸ்.பி.இராசரத்தினம்
1944 ~ 1950



அமரர்
இ.சிங்கரத்தினம்
1951 ~ 1971



திரு.க.இராசதுரை
1994 ~ 1995




திரு.சி.இளையாலசிங்கம்
1944 ~ 1950



திரு.க.சிவசுப்பிரமணியம்
S.L.E.S
1987 ~ 1990

அமரர்
சி.சா.துரைசிங்கம்
1979 ~ 1986





திரு.ஆ.இராமசாமி
1974 ~ 1975



எங்கள் அதிபர்கள்

# எங்கள் அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு. கே. சின்னத்தம்பி | 1892 – 1909 |
| 02. | திரு. கே. செல்லையா | 1910 – 1915 |
| 03. | திரு. எஸ் சின்னத்தம்பி | 1916 – 1917 |
| 04. | திரு. வீ. ஆசிர்வாதம் | 1918 – 1919 |
| 05. | திரு. ஏ. கே. குருவிலா | 1920 – 1941 |
| 06. | திரு. எஸ். வீரசிங்கம் | 1942 – 1943 |
| 07. | திரு. எஸ். பீ. இராசரத்தினம் | 1944 – 1950 |
| 08. | திரு. ஆர். சிங்கரத்தினம் | 1951 – 1971 |
| 09. | திரு. சீ. குணபாலசிங்கம் | 1972 – 1973 |
| 10. | திரு. ஏ. இராமசாமி | 1974 – 1975 |
| 11. | திரு. எம். பத்மநாபன் | 1976 – 1978 |
| 12. | திரு. எஸ். எஸ். துரைசிங்கம் | 1979 – 1986 |
| 13. | திரு.க. சிவசுப்பிரமணியம் | 1987 – 1990 |
| 14. | திரு சி. செல்லையா | 1991 – 1993 |
| 15. | திரு. க இராசதுரை | 1994 – 1996 |
| 16. | திருமதி. பு. கணபதிப்பிள்ளை | 1996 – 1997 |
| 17. | திருமதி. ச. கனகராசா | 1998 – |

# பாடசாலையின் ஆளணி 1999ம் ஆண்டு

| | | |
|---|---|---|
| 01. | திருமதி ச. கனகராசா | கலைப்பட்டதாரி கல்வி டிப்ளோமா - அதிபர் தரம் 1 |
| 02. | திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா | கலைப்பட்டதாரி கல்வி டிப்ளோமா - பிரதி அதிபர் |
| 03. | திருமதி. த. இராசரத்தினம் | பொதுப்பயிற்சி - பகுதித்தலைவர் |
| 04. | திரு. நா. சண்முகரத்தினம் | விஷேடபயிற்சி கைவினை - பகுதித்தலைவர் |
| 05. | திரு. மா. ஞானலிங்கம் | கலைப்பட்டதாரி கல்வி டிப்ளோமா |
| 06. | திருமதி. கு. கணேசமூர்த்தி | கலைப்பட்டதாரி கல்வி டிப்ளோமா |
| 07. | திருமதி. ல. அழகதுரை | கலைப்பட்டதாரி |
| 08. | திருமதி. ம. வீரகத்திப்பிள்ளை | பொதுப் பயிற்சி |
| 09. | செல்வி. யோ. செல்லமுத்து | கலைப்பட்டதாரி கல்வி டிப்ளோமா |
| 10. | திருமதி யோ. சந்திரகுமார் | விஞ்ஞானப்பட்டதாரி கல்வி டிப்ளோமா |
| 11. | திரு. து. இராசா | விவசாய டிப்ளோமா |
| 12. | திரு. க. தம்பித்துரை | பொதுப்பயிற்சி |
| 13. | திரு. பொ. சரவணபவானந்தன் | விஷேடபயிற்சி - வர்த்தகம் |
| 14. | திரு. செ. புஸ்பதாஸ் | விஷேடபயிற்சி - கணிதம் |
| 15. | திருமதி. ந. ஜெகநாதன் | வர்த்தகப்பட்டதாரி கல்வி டிப்ளோமா |
| 16. | திருமதி. பே. துரைசிங்கம் | விஷேடபயிற்சி - சித்திரம் |
| 17. | திருமதி. ஞா. சிவராசா | பொதுப்பயிற்சி |
| 18. | திருமதி. வ. அருளானந்தம் | விஷேடபயிற்சி - சங்கீதம் |
| 19. | திரு. அ. மறைக்காடர் | விஷேடபயிற்சி - ஆங்கிலம் |
| 20. | திரு. ந. பார்த்தீபன் | விஷேடபயிற்சி - கணிதம் |
| 21. | செல்வி. வ. மயில்வாகனம் | விஞ்ஞானப்பட்டதாரி கல்வி டிப்ளோமா |
| 22. | திருமதி. ப. சிவயோகராசா | கலைப்பட்டதாரி |
| 23. | செல்வி. க. இராசையா | விஷேடபயிற்சி - விஞ்ஞானம் |
| 24. | திருமதி. வி. சடாச்சரம் | கலைப்பட்டதாரி |
| 25. | திருமதி. அ. சண்முகம் | விஷேடபயிற்சி - கணிதம் |
| 26. | திருமதி. சி. தங்கராசா | ஆரம்பப்பயிற்சி |
| 27. | திருமதி. உ.பாலசுப்பிரமணியம் | ஆரம்பப்பயிற்சி |
| 28. | செல்வி. கோ. குமாரசாமி | விஷேடபயிற்சி - விஞ்ஞானம் |
| 29. | திருமதி. தெ. ஈஸ்வரன் | கலைப்பட்டதாரி |
| 30. | திரு. பொ. சகலகலாநிதி | ஆரம்பப்பயிற்சி |

| | |
|---|---|
| 31. செல்வி. தே. சிவக்கொழுந்து | விஷேடபயிற்சி – நடனம் |
| 32. செல்வி. கௌ. சிவக்குமாரசர்மா | கலைப்பட்டதாரி பயிலுநர் |
| 33. செல்வி. மை. குலசேகரம் | பயிலுநர் ஆரம்பக்கல்வி |
| 34. செல்வி. த. தயாளினி | வர்த்தகப்பட்டதாரிப் பயிலுநர் |
| 35. திருமதி. இ. குமரகுருபரன் | விஞ்ஞானம் – பயிலுநர் |
| 36. திருமதி. ல. பத்மராசா | மனையியல் பயிலுனர் |

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்


01. திரு. வே. இராசரத்தினம்
02. செல்வி. சி. பாமினி
03. செல்வி. ந. ஜெயந்தினி

## தொண்டர் ஆசிரியர்கள்

01. திரு. இ. சந்திரராஜ்
02. செல்வி. கி. பிறேமளா
03. செல்வி. இ. நேசமலர்
04. செல்வி. க. கௌரி
05. திரு. சி. சஞ்சயகரன்

## ஏனைய ஆளனியினர்

| | | |
|---|---|---|
| 01. செல்வி. உ. சிங்கை ஆரியரத்தினம் | – | எழுதுவினைஞர் |
| 02. திரு. இ. நெடுஞ்செழியன் | – | அலுவலகப் பணியாளர் |
| 03. திரு. கு. கணேசலிங்கம் | – | ஆய்வுகூடப் பணியாளர் |
| 04. திருமதி. ஜெ. கோபாலகிருஷ்ணன் | – | நூலக உதவியாளர் |
| 05. திருமதி. ந. சிவகுமார் | – | நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 06. திரு. வ. சண்முகநாதன் | – | சிற்றூழியர் |
| 07. திரு. த. சுப்பிரமணியம் | – | காவலாளி |
| 08. திரு. என்சிலி ருக்மன் | – | காவலாளி |




ஆசிரியர் குழு - 1999



1999 ஆம் ஆண்டு ஒழுக்காற்றுக்குழுவும் முதன்மை மாணவர்களும்.



நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக் குழு -1992



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



# கல்லூரியின் வரலாறு

*திரு. கு. சிங்கை ஆரியரத்தினம்*
*பழைய மாணவர்*

"மனிதர்கள் வருவார்கள் போவார்கள் நாமோ எப்போதும் சென்று கொண்டே இருப்போம்'' என்று ஆறு கூறுவதாக ஒரு பாடல் உண்டு. கல்வி நிறுவனங்களுக்கும் வாய் இருப்பின் அவையும் இதையே சொல்லும். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோர் வருவார்கள், போவார் கள் ஆனால் பாடசாலைகளோ எக்காலமும் தொடர்ந்து நிலையாக இருந்து பணிபுரிகின்றன. எமது இப் பாடசாலையும் 108 வருடங்களாக பல மாணவர் களை உருவாக்கிப் பணிபுரிந்துள்ளது. இதன் பணி மேலும் வளர்கின்றது.

"உற்றுழியும் கைகொடுக்கும் கல்வி என உணர்ந்த எம் முன்னோர் முத லில் குருகுலக் கல்வி முறையிலும், பின்னர் திண்ணைப் பள்ளி முறையிலும் கல்வி பயின்றனர். மாணவர்கள் தங்கள் தகுதி, பரம்பரைத் தொழில் ஆகியவற் றிற்கு ஏற்ற முறையில் குருகுலக் கல்வி முடிவுற்றதும் உலக அனுபவக்கல்வி பெறச் சிலர் யாத்திரைக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் குருகுலக் கல்வி அமைப்பில் மாற்றம் ஏற்படத் திண்ணைப் பள்ளிகள் ஆரம்பமாயின. இத்தகைய திண்ணைப்பள்ளி வாத்தியார்கள் அச்சுவேலியிலும் இருந்தமைக்கு சான்றுகள் இருக்கின்றன.

எமது கல்லூரி நிறுவப்பட முன்னர் எமது மக்களும் அதாவது அச்சு வேலி கோவில்பற்று மக்களும் திண்ணைப் பள்ளியில் கற்றதற்குச் சான்றுகள் உண்டு. இந்த அடிப்படையில் திண்ணைப்பள்ளி வாத்தியார்களாக திரு. சரவண முத்து, திரு. ஆபேஸ், திரு. மனுவேற்பிள்ளை, திரு. பீலிஸ் போன்றவர்கள் ஆசிரியப்பணி புரிந்தனர் என அறிய முடிகின்றது. இதன் வளர்ச்சிக்காகப் பெண் கள் பாடசாலை இப்பொழுது ஆரம்பப் பாடசாலை இருக்கும் இடத்திலும், ஆண்கள் பாடசாலை தேவாலயத்திற்குப் பின்புறமாக வகுப்பறைகள் இருக்கும் இடத்திலும் இயங்கி வந்தன.

யாழ்ப்பாணத்தில் மிசனரிமாரின் வருகையால் கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமானது. ஆரம்பத்தில் 1811ஆம் ஆண்டளவில் தெல்லிப் பளை, அச்சுவேலி, உடுப்பிட்டி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் தேவாலயங் களை நிறுவியதுடன் கல்வி நிறுவனங்களையும் ஆரம்பித்தனர். 1816இல் முதன் முதல் தெல்லிப்பளையில் ஒரு கிராமப் பாடசாலையை ஆரம்பித்த இவர்கள் படிப்படியாக பாடசாலைகளை அமைக்கத் தொடங்கினர். இக் காலத்தில் 1887ஆம் ஆண்டில் அச்சுவேலிக் கோயில் பற்றில் ஈ. ஜே. வில்லியம் போதகர் தலைமையில் தேவாலயம் அமைக்கப்பட்டது. வடக்கே தொண்டமானாறு, இடைக்காடு, வளலாயையும் தெற்கே நவக்கிரியையும், கிழக்கே உப்பு வல்லை

யையும், மேற்கே வசாவிளான் பலாலியையும் எல்லையாகக் கொண்ட பிரதேசமே அச்சுவேலி கோயில் பற்றாகும்.

இத் தேவாலய வளவினுள் 1892ஆம் ஆண்டு ஓர் ஆண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தென்னிந்தியத் திருச்சபையின் அனுமதியுடன் ஆரம்பிக்கப் பட்ட இப் பாடசாலையே இன்று அச்சுவேலி மகாவித்தியாலயமாக கிளை பரப்பி வளர்ந்துள்ளது. இது மேலும் வளரும் என்பதில் ஐயமில்லை. 1892ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கான சான்று பழைய கட்டிடச் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கன் மிசன் A.C.M.E.S (ஆங்கிலப்பாடசாலை) "பாடசாலையைத் திற சிறைச்சாலையை மூடு'' என்ற பொன்மொழிக்கு அமைவாக அச்சுவேலிப் பதியில் அச்சு தீபமாக விளங்கும் எமது இப் பாடசாலையை வணக்கத்துக்குரிய ஜே.எம்.சாண்டேஸ் போதகர் அவர்கள் ஆரம்பித்து வைத்த பெருமைக்குரியவர். அவர்கள் ஏற்றிய விளக்கு இன்று அகல் விளக்காகச் சுடர் விட்டுப் பிரகாசிக் கின்றது. அவரிற்கு எமது நன்றிக் கடனாக அவர் நாமம் பூண்ட "சாண்டேஸ் இல்லம்'' இன்று நிலைத்திருப்பது சாலப் பொருத்தமானதே ஆகும்.

ஆண்கள் பாடசாலைக்கு அதிபராக திரு.கே. சின்னத்தம்பி அவர்களும், பெண்கள் பாடசாலைக்கு அதிபராகத் திருமதி. ஆச்சிப்பிள்ளை, தாமோதரம் பிள்ளை அவர்களும் இருந்தமையை அறிய முடிகின்றது. இவர்களுக்கு உதவி யாக திரு. ஆசைப்பிள்ளை, தம்பிமுத்து ஆகியோரும் இருந்தமையை அறிய முடிகின்றது. பாடசாலையை நிறுவுவதற்கு பொதுமக்கள் தம்மால் இயன்ற நிதி யுதவியை, பங்களிப்பை செய்தனர். ஆரம்ப கர்த்தாவான சாண்டேஸ் போதகர் அவர்களின் குடும்பத் தலைவர்கள் பாடசாலையை நிறுவுவதற்குக் காணியையும் அன்பளிப்புச் செய்தனர்.

ஆரம்பத்தில் ஆண்கள் பாடசாலை ஆங்கிலப் பாடசாலையாகவும், பெண்கள் பாடசாலை ஸ்ரேசன்மிசன் பாடசாலையாகவும் இயங்கி வந்தது. பெண்கள் பாடசாலைக்குத் தலைவராகக் திருமதி. ஆச்சிப்பிள்ளை, தமோதரம் பிள்ளை பணியாற்றினார். பெண்கள் பாடசாலை 5ஆம் வகுப்பு வரை இயங்கி வந்தது. 1904 தொடக்கம் பத்தைமேனியைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை 1934 வரை தலைமை ஆசிரியராகவும், 1935 – 1941 வரை திரு. எஸ். கே. நவரத் தினமும், 1948 – 1958 வரை திரு.எஸ்.தம்புவும், 1958 – 1971 வரை திரு.எஸ்.வேலுப் பிள்ளையும் கடமையாற்றினர்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு அச்சுவேலி தென்னிந்திய திருச்சபை யுடன் நெருங்கிய தொடர்புடையவரும் அச்சுவேலிக் கிராமத்தில் செல்வாக் குடையவருமான திரு. எஸ். தம்பிமுத்து பெரும் தொண்டாற்றினார். திரு. தம்பி முத்து அவர்கள் ஆங்கிலத்தில் "TRIBUNEL" தமிழில் "சன்மார்க்கபோதினி'' என்னும் அச்சுப் பத்திரிகையின் பத்திராதிபராகவும், நூலாசிரியராகவும் இருந்த மையால் பிரபல்யமானவராக விளங்கினார். இவரின் பெறாமகன் திரு. வைத்தி லிங்கம் அவர்களே எமது ஆங்கிலப் பாடசாலையின் முதல் மாணவர். திரு. வைத்திலிங்கம் அவர்களை சுவாமி ஞானப்பிரகாசர் ஆகவும், உலக மக்கள் போற்றும் மேதையாகவும் விளங்க வித்திட்ட பெருமையுடையது எமது பாட சாலை. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் எமது பாடசாலையின் முதல் மாணவர்

என்பதால் எமது பாடசாலை பெருமை அடைகின்றது. இருண்ட வீட்டில் ஏற்றிய தீபமாகச் சுவாமி ஞானப்பிரகாசர் ஏற்றிய ஒளிவிளக்கு இன்று அணையாத தீபமாக சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது. இவர் 70 மொழிகளுக்கு மேல் கற்ற பன்மொழிப் புலவர். ஞானப்பிரகாசர் இயற்றிய தமிழ் அகராதி இவரின் பண்பு களுக்குச் சான்றாகும். அவர்களின் பண்புகளைக் கௌரவித்து அரசு முத்திரை வெளியிட்டது.

ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை (ஏ.சி.எம்.எஸ்) அமெரிக்கன் தேவாலய மிசனறிப் பாடசாலை என அழைக்கப் பட்டது. பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு. கே. சின்னத்தம்பி கடமை யாற்றினார். பாடசாலையின் முதல் முகாமையாளராகத் திரு. பிக்னல் என்பவர் கடமையாற்றினார். இவருக்கு நன்றிக் கடனாக இன்றும் “பிக்னல் இல்லம்” இயங்கி வருவது பொருத்தமானதே. அடுத்து 1910 ஆம் ஆண்டில் திரு. செல்லையா அதிபர் ஆனார். அவரின் நாமத்துடனும் “செல்லையா இல்லம்” இயங்கி வருவது நன்றியுணர்வின் செயற்பாடேயாகும். செல்லையா அதிபரின் பின்னர் திரு. எஸ். சின்னத்தம்பியும் அடுத்து திரு. வீ. ஆசிர்வாதம் அவர்களும் கடமையாற்றினர்.

1920 – 1941ம் ஆண்டு வரை கடமையாற்றியவர் திரு. ஏ. கே. குருவிலா ஆவார். (எம். ஏ. மாற்றாஸ்) இவர் காலம் எமது பாடசாலை வரலாற்றில் பொற் காலம் ஆகும். இக் காலத்தில் 1920இல் யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகத்துடன் சேர்ந்து அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி எனப் பெயர் பெற்றது. கேரள தேசத் தவரான இவர் காலத்தில் தொடக்க நிலைப் பாடசாலையாக இருந்த எமது பாடசாலை “எலிமென்ரரி பாடசாலையாகத்” தரமுயர்த்தப்பட்டு எட்டாம் வகுப்பு வரை கற்பிக்கப்பட்டது. இக் காலத்தில் இவருக்கு உதவியாகத் திரு.எஸ்.வீர சிங்கம், திரு. எஸ்.ஆறுமுகம், திரு. எஸ்.மயில்வாகனம், திரு. எஸ்.பொன்னையா, திரு. தம்பிரத்தினம், திரு. பி. ஜே. செந்தில்நாதன், செல்வி சோமசுந்தரம் தேவி ஆகியோர் உதவி ஆசிரியர்களாக கடமையாற்றினர். திரு. குருவிலா காலத்தில் திரு. எஸ்.வீரசிங்கம் உதவி அதிபராகக் கடமையாற்றினார். ஆரம்பப்பிரிவு பெண் கள் பாடசாலைக்கு ஏழாலையைச் சேர்ந்த திரு. ரி. கந்தையா பொறுப்பாக இருந்தார்.

அதிபர் குருவிலா காலத்தில் ஆரம்பமான இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பாதிப்பு இலங்கையிலும் ஏற்பட்டது. 20 வருடமாகச் சேவையாற்றி மலையாளம் சென்ற குருவிலா அதிபர் போரினால் இலங்கைக்குத் திரும்பி வர முடியவில்லை. உப அதிபராக இருந்த திரு. எஸ். வீரசிங்கம் 1942 – 1943 வரை அதிபராகக் கடமையாற்றினார். பின்பு 1944இல் திரு. எஸ். பி. இராசரத்தினம் அதிபராகக் கடமை ஏற்றார். இக் காலம் இலங்கையின் கல்வி வரலாற்றில் பொற்காலம் “கன்னங்கரா” அறிக்கையின்படி இலவசக் கல்வி புகுத்தப்பட்டது.

1951இல் பதவி ஏற்ற திரு. இ. சிங்கரத்தினம் அதிபரின் காலமும் எமது பாடசாலை வரலாற்று ஏடுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. நாம் தற்பொழுது பயன் படுத்தி வரும் இராச வீதிக்கும், புனித திரேசா மகளிர் கல்லூரிக்கும் இடையில் இருக்கும் 18 பரப்புக் காணியை வாங்கி எமக்கு விளையாட்டு மைதானமாக அன்பளிப்புச் செய்த அதி பெருமகன் அதிபர் சிங்கரத்தினமே 22 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய இவரின் காலத்தில் வருடாவருடம் பல மாணவர்

கள் பல்கலைக்கழகம் சென்றமை குறிப்பிடத்தக்கது. (அவ்வாறு சென்ற மாணவர்களில் இன்றைய அதிபரும் ஒருவர் ஆவார்) இவரின் அரும் பணிக ளுக்கு நன்றிக் கடனாக மக்கள் சிங்கரத்தினம் இல்லத்தை அமைத்து, ஒரு மண்டபத்துக்கு அவர் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர். 1960ஆம் ஆண்டில் அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்தபோது பாடசாலையின் பெயரும் யா/ அச்சுவேலி மகாவித்தியாலயம் என மாற்றப்பட்டது. 1971ஆம் ஆண்டு ஆரம்ப பாடசாலையையும், ஆங்கிலப் பாடசாலையும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் வந்தது.

1972–1973 வருடத்தில் நவற்கிரியைச் சேர்ந்த திரு.சி. குணபாலசிங்கம் அதிபராகக் கடமையாற்றினார். திரு. எஸ். எஸ். துரைசிங்கம் உப அதிபராகக் கடமையாற்றினார். 1974–1975 வரை திரு. ஏ. இராமசாமி அதிபராக கடமையாற் றினார். 1976–1978 வரை திரு. எம். பத்மநாபன் அதிபராகக் கடமையாற்றினார். நீண்டகாலம் சேவையாற்றியோர் வரிசையில் இடம் பெறுகின்றார். 1966ஆம் ஆண்டில் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையேற்ற இவர் 1970இல் உப அதிப ராகி 1979இல் அதிபராக பதவி உயர்வு பெற்றார். இவரது காலத்தில் கட்டப் பட்ட மேல்மாடிக் கட்டடம் துரைசிங்கம் மண்டபம் என்ற பெயருடன் மிளிர்கின் றது. உப அதிபராகக் கடமையாற்றிய திரு. முத்து சிவஞானம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் பதவி உயர்வு பெற்று சீடா நிறுவனத்தில் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார். 1987–1990 வரை கடமையாற்றிய திரு. க. சிவசுப்பிர மணியம் அவர்களின் காலமும் எமது பாடசாலை எமது பாடசாலை வரலாற்றின் உன்னத காலமேயாகும். பாடசாலையின் பழைய மாணவரும், ஆசிரியரும், கிராம வாசியுமான இவர் எமது பாடசாலைகளின் கொத்தணி அதிபர் என்ற சிறப்பினை உடையவர். பல்வேறு சிரமங்களின் மத்தியில் அச்சுவேலி கொத்தணி அமைப்புக் களின் மூலாதாரப் பாடசாலையாக எமது பாடசாலையை கொத்தணிப் பாடசாலையாக்கிய பெருமைக்குரியவர். இச் செயற்பாடு இன்றும் எமக்குக் கைகொடுத்து உதவுகின்றது. உப அதிபராக திருமதி பு. கணபதிப்பிள்ளை கடமையேற்றார்.

1991–1993வரை அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. செல்லையா அவர் களின் காலமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும். எமது பாடசா லையின் நூற்றாண்டு விழா இரண்டு தினங்கள் அதிபர் சி. செல்லையா தலை மையில் கொண்டாடப்பட்டது. இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வாகும். பாடசாலையின் நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் நிகழ்வும் கால் கோள் ஆயிற்று. அது நாட்டின் சூழ்நிலைகளால் நிறைவேறவில்லை. மலர் வெளியீடு 108வது ஆண்டில் நிறைவேறுவதைக் கண்டு பெருமையடைகின்றேன்.

1993–1995 வரை கடமையாற்றிய திரு. க. இராசதுரை அதிபர் காலமும் பாடசாலை வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றது. நாட்டின் குழப்ப நிலைகளால் பாடசாலை பல இடப்பெயர்வுகளுக்குள்ளானது. இதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டது. எனினும் பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பு மட்டத்தை அடைந்தன.

திருமதி. பு. கணபதிப்பிள்ளை அவர்களின் காலமும் வரலாற்றுச் சிறப்பு டையது. பழைய மாணவியும், ஆசிரியரும், கிராமவாசியுமான இவர் பாடசாலை வரலாற்றில் நீண்டகாலம் சேவையாற்றிய பெருமையுடையவர். தனது சேவைக் காலம் இப் பாடசாலையில் பணியாற்றிய பெரும் பேற்றினைப் பெற்றவர். பாட

சாலையில் கல்வி கற்று இப் பாடசாலையிலேயே ஆசிரியராக, உப அதிபராக, பின் அதிபராகக் கடமையாற்றிய ஒருவர் இவரேயாவார். 1987 தொடக்கம் தொடக்கம் உப அதிபராகக் கடமையாற்றி 1996இல் அதிபராகக் கடமை யேற்றார். மீளக் குடியேறிக் கல்லூரியை மீண்டும் கட்டியெழுப்பிய அதிபரின் முயற்சிக்கு ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத் திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள் எல்லோரும் ஒத்துழைத்து உதவினர்.

பாடசாலையின் வரலாறு 108 ஆண்டு பெருமையுடையது. வரலாறு தொடர்பான ஆவணங்கள் இல்லாத நிலையில் 1992ஆம் ஆண்டில் தொகுக்கப் பட்டது. இதற்கான குறிப்புக்களை தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அருட் திரு. எஸ். ஜெபநேசன் அடிகளாரும், ஆசிரியர் திரு. தம்பிரத்தினம், திரு. வில்லியம் குடும்பத்தினரும், எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்கள் (அமரர்கள்) எஸ். மயில்வாகனம், திருமதி. எஸ். ஆறுமுகம், எஸ். வேலுப்பிள்ளை, எஸ். வைத்திய லிங்கம், எஸ். இராசா ஆகியோரும் முன்னாள் அதிபர் அமரர் இ.சிங்கரத்தினமும் தந்துதவினர்.

1998ஆம் ஆண்டு அதிபராகப் பதவியேற்ற திருமதி. ச. கனகராசா அவர்களின் அயராத முயற்சியினால் கல்லூரி வள அபிவிருத்தி, கல்வி சார் விருத்தி, இணைப்பாட விதான செயற்பாடுகள் போன்ற அனைத்துத் துறைகளி லும் வளர்ந்து புகழ்பரப்ப இறைவன் அருள்புரிவாராக.



**கருணையுள்ள ஒருவன் அல்லும் பகலும் பிறருக்கு நன்மை தரும் செயல்களையே செய்கின்றான். சுயநலம் கொண்டவன் பயனற்ற காரியங்களில் மூழ்கி இன்னல் படுகின்றான்**

**- ஸ்ரீ நாராயணகுரு -**



# பழைய மாணவர் சங்கச் செயலாளரின் சிந்தனைத் துளிகள்



நூற்றெட்டாவது அகவையில் தன் தளராத உறுதியுடன் செயற்பட்டு நூற்றாண்டுச் சிறப்பு மலரை வெளியீடு செய்யும் இவ்வறிவாலயத்தை மென்மேலும் வளர வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். நூற் றாண்டு நிறைவு விழா 1992ஆம் ஆண்டு அதிபர் திரு. சி.செல்லையா அவர்களின் காலத்தில் அதிபர், ஆசிரி யர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை மாணவர்கள் அனை வரும் இணைந்து இரு தினங்கள் கோலாகல மாகக் கொண்டாடப் பட்டது. அந் நாளில் நூற்றாண்டுச் சிறப்பு மலரை நாம் வெளியீடு செய்வதற்கு எடுத்த முயற்சிகள் நாட்டின் இடப்பெயர்வுகளால் நிறைவு பெறவில்லை எனினும் இன்று இம்முயற்சி நிறைவு பெறுவது கண்டு நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.


108 வருடங்களாக எமது பழைய மாணவர்களின் சாதனைகளை விரித்துக் கூற முடியாவிடினும் எமது மாணவர்கள் கடந்த பத்து வருடங் களாகப் பயன்தரு சேவைகளை இக் கல்லூரிக்கு ஆற்றி வருவதை யாரும் மறுக்க மாட்டார்கள். எமது பழைய மாணவர்கள் அகில உலகம் எங்கணும் நமது அறிவாலயத்தின் மைந்தர்களாக ஒளிபரப்பி வாழ்கி றார்கள்.

1996ஆம் ஆண்டில் எமது பாடசாலை இடப்பெயர்வின் பின்னர் மீள இயங்கத் தொடங்கியதும் எமது சங்கத்தினர் தம்மால் இயன்ற உதவி களை வழங்கி மாணவர் கல்வி முன்னேற்றத்தில் கவனமெடுத்தனர். எமது சங்கம் 1991இல் புணருத்தாரணம் செய்யப்பட்ட பின்னர் பல பொது நிறுவனங்களின் உதவியுடன் (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம், வலி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) பல அரிய செயற்பாடுகளை பாடசாலை மேம்பாட்டிற் காக செய்துள்ளனர். பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களு டன் அவர்களைக் கற்பித்த ஆசிரியர்களும் எங்களால் கௌரவிக்கப்பட் டனர். முற்றாக அழிந்த நூலகத்திற்கு நூல்களைத் திரட்டியும், புதிதாக கொள்வனவு செய்தும் அன்பளிப்புச் செய்து நூலகத்தை இயங்க வைத்துள்ளனர்.

வருடாவருடம் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிக்கும், பரிசளிப்பு விழாவிற்கும் பந்தல் இருக்கை செய்து வரும் எமது பழைய மாணவர்கள் போற்றப்பட வேண்டியவர்களே. அது மட்டுமல்ல நீண்ட காலத்திற்கு முன்னரே எமது கல்லூரிக்கு ஒரு திறந்த கலையரங்கை அமைத்துத் தந்தவரான திரு. வன்னியசிங்கம் அவர்களும் எமது பழைய மாணவரே. வருடாவருடம் பரிசளிப்பு விழாவின்போது காலையில் மரதன் ஓட்டப் போட்டியை நடாத்தி பரிசு வழங்கி வருபவரும் எமது பழைய மாணவரே ஆவார்.

எனவே எமது கல்லூரியின் நூற்றாண்டு மலர் மலர்ந்து மணம் வீச எமது ஆசியைத் தெரிவிப்பதுடன் ஒன்றுகூடல் மண்டபம் இல்லாத குறையை நீக்க அனைத்துப் பழைய மாணவர்களும் முன்வரவேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இன்று மட்டுமல்ல என்றும் எமது அறிவொளி வழங்கிய கல்லூரியின் வெற்றிப் பாதைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்போம் என உறுதி கூறுகின்றோம்.

*திரு. க. செல்வரத்தினம் சுதந்தவான்*
*செயலாளர்*
*பழைய மாணவர் சங்கம்*





# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் வாழ்த்து

இ. யோகராசா
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

அச்சுவேலி மகாவித்தியாலய நூற்றாண்டு மலர் வெளிவருவதை யிட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம் மலர் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலைகளினாலும், இடப் பெயர்வினாலும் உரிய நேரத்தில் வெளியிட முடியாதிருந்தும் பல இடர்ப்பாடுகளுக்கிடையில் காலம் தாழ்த்திய நிலையில் வெளிவந்தாலும் இம் மலர் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ்ப்பாண மக்களின் இடப்பெயர்வின் பின், வலிகாமத்திற்கு மக்கள் மீளக்குடியேறிய போது உருக்குலைந்திருந்த பாடசாலை இதனை பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் ஆகியோரது அயரா முயற்சியினால் இன்று பாடசாலை அழகாகக் காட்சி அளிப்பதோடு கல்வித்தரமும் உயர்ந்துள்ளது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பாடசாலையின் உயர்வுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும், பெற்றோரும், பாடசாலை நலன் விரும்பிகளும், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களும் தம்மாலான முயற்சிகளை வரும் காலத்திலும் செய்ய வேண்டுமென்றும், வருங்கால சந்ததியினரும் நம் பாடசாலையின் புகழ் ஓங்கி வானளாவ வளர அரும்பாடுபட்டு உழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, எமது பாடசாலை பல துறைகளிலும் புகழுடன் ஒளிவீச வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

# கல்லூரியின் கல்விப் பணியும் அமெரிக்கன் மிஷனரியும்

*திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா*
B.A. Dip-in-Ed.
பிரதி அதிபர்

## சமயமும் கல்வியும்

சமயமும் கல்வியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. கல்வியறிவில் உயர்வடைபவனே சமய தத்துவ ஞானம் பெற்று ஆன்மிக நிலையிலும் உயர்வு அடையலாம் என்ற நம்பிக்கை அறிஞர்களிடையே நிலவி வருகின்றது. மறுதலையாக கல்வியறிவின் உயர்வுக்கு சமய உணர்வு அவசியம் என்ற நிலையும் காணப்படுகின்றது. ஆன்மிக உணர்வோடு கூடிய கல்வியே மனித விழுமியங்களுக்கு அடிப்படையாக அமைகிறது.

நீண்ட காலமாகவே சமய போதனையும், கல்விப் போதனையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாகவே காணப்படுகின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே தோற்றம் பெற்ற சமண, பௌத்த சமயங்கள் உலகெங்கும் பரவி நிலவுவதற்கு சமய போதனையுடன் கல்விப்பணி இணைக்கப்பட்டதே காரணமாகும். உப நிடத காலக் கல்வியானது சமயக் கல்வியாக இருந்தமையை இந்து நாகரீக மரபின் ஆரம்பகால வரலாற்றை ஆராய்வோருக்குப் புலப்படும்.

சமணப் பள்ளிகளும், பௌத்த மடங்களும் திண்ணைப் பள்ளிகளாக அமைந்து கல்வியூட்டின. சமணர்களின் பள்ளி என்ற சொல்லில் இருந்தே பாடசாலைகட்கு பள்ளிக்கூடம் எனப்பெயர் வரலாயிற்று.

## மேலைத்தேயக் கல்வி

மேலைத்தேயத்தவர்கள் கீழைத்தேய நாடுகட்கு வந்து தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியபோதும் சமயம், கல்வி இரண்டையும் இணைத்தே புகட்டினர். முதலில் போத்துக்கேயரும் பின்னர் ஒல்லாந்தரும் ஈற்றில் ஆங்கிலேயரும் இதனையே செய்தனர். ஒரு வகையில் இன்று நாம் சர்வதேச மட்டத்தில் விஞ்ஞான, தொழில்நுட்ப, அறிவியல் வளங்கள் பெற்று உயர்ந்து வாழ்வதற்கு ஐரோப்பியர் வழங்கிய கல்விச் செல்வமே காரணம் எனக் கூறலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் முக்கியமாக ஒல்லாந்தர் வருகையோடிணைந்த புரட்டஸ்தாந்து மதப் பிரசாரமும் அதனோடிணைந்த கல்வி வளர்சியும் குறிப்பிடத்தக்கன. சிறப்பாக அமெரிக்கன் மிஷனறிமார் சமயப் போதனையை முக்கிய நோக்காகக் கொண்டு பாடசாலைகளை நிறுவினர். ஏனைய மத நிறுவனங்களிலும் பார்க்க அதிக கல்விக் கூடங்களை வட பகுதியில் அமைத்து அறிவுப் பயிரை வளர்த்தவர்கள் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தவர்களே.

மேலைத்தேய கல்விமுறையை கிறிஸ்தவச் சூழ்நிலையில் வளர்த்தமை இவர்கள் பணியாகும்.

## அச்சுவேலிப் பகுதியில

அமெரிக்கன் மிஷனரிமாரின் சமயக் கல்விப் பணிகள் 1854இல் அச்சு வேலிப் பகுதியில் ஆரம்பமாயின. பல்வேறு இடையூறுகளும், தடங்கல்களும் ஏற்பட்ட போதிலும் மிஷனரிமாரின் தளராத ஊக்கமும் திருச்சபையின் ஆதரவும் இப்பணி தொடர வழிவகுத்தன. கிராமங்களிலேயே தங்கி அங்குள்ள மக்களுக்கு ஊழியம் செய்து தம்மை அர்ப்பணித்து பணியாற்றியதன் மூலம் பலரைக் கிறிஸ்தவர்கள் ஆக்கினர். கல்வி அறிவூட்டலோடு தொழில் அறிவும் ஊட்டப் பட்டமை குறிப்பிடத்தக்கது. நல்லொழுக்கமும் சமூகச் சீர்திருத்தங்களும் புகட்டப்பட்டன.

ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை அத்திவார மாகக் கொண்டு தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து மெழுகுதிரியாகத் தம்மை உருக்கி அச்சுவேலி, வளலாய், கதிரிப்பாய், நவற்கிரி ஆகிய இடங்களில் அமெரிக்க மிஷனரிக் கல்விக் கூடங்களை உருவாக்கினர். எமது கல்லூரி இவற்றின் மத்தியில் ஸ்ரேசன் பாடசாலை என்ற பெயருடன் திகழ்ந்தது.

## கல்லூரியின் ஆரம்பநிலை

எமது கல்லூரி வளவில் அமைந்திருக்கும் ஆலயம் 1892 ஜனவரியில் ஸ்தாபிக்கப்பட்டு தனிச்சபையாக இயங்கியது. 1892மே மாதம் பிரபல மிஷனறிக் கலாநிதி கௌலாண்ட் அவர்களால் ஜே.எம்.சாண்டேஸ் என்பவர் குருவாக அபிஷேகிக்கப்பட்டார். இவர் தம் பணியைக் கடவுள் நம்பிக்கையுடனும், தன்னம்பிக்கையுடனும் சாதித்து மக்கள் மனம் கவர்ந்தார். இவரே கல்லூரியின் ஸ்தாபகரும் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

கோயில்ப்பற்றும் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் இடைநிலை உயர்நிலை கல்விகளைப் பெறும் வாய்ப்பை வழங்கும் வகையில் இக் கல்லூரி பிரகாசிக்க ஆரம்பித்தது. சுதேச ஆசிரியர்கள் பலர் நியமிக்கப்பட்டு தமிழும், ஆங்கிலமும் போதிக்கப்பட்டன. இக் கல்லூரியின் முதலாவது அதிபராக திரு. கே. சின்னத் தம்பி என்பவர் நியமிக்கப்பட்டார்.

## கல்லூரியின் சிறப்பு

கிராம எழுச்சியை மனதில் கொண்டு செயற்பட்ட சாண்டேஸ் போதகர் ஏனைய மத நிறுவனங்களில் இருந்துவரும் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கா கவும், இக் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் செயலாற்றினார். அச்சுவேலியில் கத் தோலிக்க "சன்மார்க்க போதினி" என்ற பத்திரிகை ஆசிரியராகவும், அச்சியந்தி ரசாலை ஒன்றின் உரிமையாளராகவும் விளங்கிய தம்பிமுத்து புலவரின் ஆதரவை யும் பெற்றுக்கொண்டார். அவருடைய வளர்ப்பு மகன் சுவாமி ஞானப்பிரகாசர் தமது ஆரம்பக்கல்வியை அச்சுவேலி சூசையப்பர் திண்ணைப் பள்ளியில் படித்து முடித்ததும் எமது கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்தார். இந்த வகையிலும் எமது கல்லூரி பெருமை பெறுகின்றது.

### கல்வி வளர்ச்சி

அடுத்தடுத்து வந்த அரசியல் சீர்திருத்தங்கள் மாற்றத்தை ஏற்படுத்திய போதிலும் அரசு பொறுப்பேற்ற போதிலும் கூட மத ரீதியான போட்டியும், வளர்ச்சியும் மிஷனறிப் பாடசாலைகட்கும் இருந்தன. தொடர்ந்து வந்த அதிபர்களும், ஆசிரியர்களும் மிஷனரிமாரின் உறுதியான கொள்கைக்கு உரமூட்டுபவர்களாகவும், சேவை மனப்பான்மையும் திறனும் கொண்டவர்களாயும் செயற்பட்டனர். இதனால் கல்லூரி மென்மேலும் வளரலாயிற்று. பல்துறைகளிலும் ஆற்றல் வாய்ந்தவர்களையும் பலராலும் போற்றப்படுபவர்களையும் பல அறிஞர்களை எமது கல்லூரி உருவாக்கித் தரலாயிற்று. 1971இல் எமது கிறிஸ்தவக் கல்லூரியுடன் அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலையின் இணைவும் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் தோற்றமும் செயற்பாடுகளும் படிப்படியாக வளம் பெற்று பாடசாலையின் உயர்வுக்கு உத்வேகமளித்தன. மிஷனரிமாரின் சேவையும், பிணைப்பும் தொடர்ந்து இருந்து வருகிறது. கல்லூரியின் மத்தியிலமைந்துள்ள தென்னிந்திய திருச்சபையின் ஆளுகைக்குட்பட்ட ஆலயம் இன்றும் எமது அச்சுவேலிப் பகுதியில் வாழும் இளம் சிறார்களை தமது பகல் பராமரிப்பு நிலையத்தில் இணைத்து கல்வி வழங்கி மீண்டும் அவர்களை எமது கல்லூரியுடன் இணைத்து தம் பணியைத் தொடர்கிறது.

### பணி தொடரட்டும்

என்றும் அவர்களின் இப்பணி தொடரட்டும். அவர்களது அன்பும், ஆதரவும் நமக்குக் கிடைக்கட்டும். அவர்கள் செய்த நற்பணியை மதித்து இக் கல்லூரியின் வளர்ச்சியில் அனைவரும் இணைந்து ஒளியேற்றுவோமாக.

உனக்குள் அளவற்ற ஆற்றலும், அறிவும், வெல்ல முடியாத சக்தியும் குடி கொண்டிருக்கின்றன என்று நீ நினைப்பாயானால், அந்த சக்திகளை உன்னால் வெளியே கொண்டுவர முடியுமானால், நீயும் என்னைப்போல் ஆக முடியும்.

– சுவாமி விவேகானந்தர் –

# புதிய கல்விச் சீர்திருத்தத்தில் பாடசாலைகளின் மீள் கட்டமைப்பும், பாடசாலை மட்டக் கணிப்பீடும்

திரு. மா. ஞானலிங்கம்
B.A. Dip. in.Ed

ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வித்திட்டத்தினாலும் அதனை நடைமுறைப்படுத்தலினாலும் தான் நிர்ணயிக்கப்படுகின்றது. நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களில் கல்வித்திட்டங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களுக்கும், வளர்ச்சிக்கும் வலுமிக்க சாதனமாக விளங்குவது கல்வி. நாட்டின் வளர்ச்சிக்காக உருவாக்கப்படும் பல்வேறு திட்டங்களுடனும் கல்வித்திட்டங்கள் இணைத்திருத்தல் இன்றியமையாதது. நாட்டின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவுவதுடன் பல்வேறு இடைக்காலப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் ஏற்புடையதாக கல்வித் திட்டங்கள் அமைதல் வேண்டும்.

இலங்கையில் இன்றைய பிரச்சனைகளுள் முக்கியமானவை உணவில் தன்னிறைவுபெறல், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணல், போர்ச்சூழல், படித் தோருக்கு வேலைவாய்ப்பின்மை, இளைஞர்களிடையே விரக்தி, ஏழ்மை நிலை, குடியாட்சிப் பண்புகள் மீறப்படல், சமூக ஒருமைப்பாடின்மை, மக்களிடையே அமைதியின்மை, பகைமை உணர்வு, தேசிய நலனில் அக்கறை கொள்ளாமை என்பனவாகும்.

நாட்டின் தொழில் வளர்ச்சியையும் உற்பத்தித் திறனையும் பெருக்கி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி சர்வதேச ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் தரத்திற்கு உயர்த்துதலாகும். தேசிய கல்விக் கொள்கையை உருவாக்கும்பொழுது இத்தகைய உயர் நோக்கங்களை மனதில் கொண்டே உருவாக்குதல் வேண்டும். அதுவே சிறந்த கல்விக் கொள்கையுமாகும்.

## கல்விச் சீர்திருத்தங்கள்

1990ம் ஆண்டு இளைஞர் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் தேசிய கல்வி ஆணைக்குழுவொன்றினை உருவாக்குவதற்கான நிலை ஏற்பட்டது. இதன் பேறாக 1991ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழவானது இலங்கையின் கல்வித்திட்டம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தது.

இலங்கையில் பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்த விடயங்கள் இதுவரை நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கல்வி அமைப்பு முறைகள் என்பன பற்றி ஆழமாகவும், அகலமாகவும் நோக்கின.

கல்வியுடன் தொடர்புடையவர்கள் என்ற வகையில் கல்வியாளர்கள் அறிஞர்கள் சமயத்தலைவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், தொழிற்சங்கப் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், அரசியற் கட்சித் தலைவர்கள்,

கட்சிப் பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதோடு நாட்டின் பிரதான நகரங்களில் அணைக்குழுவின் அமர்வுகளை ஏற்பாடுசெய்து வாய்மொழி மூலமும் எழுத்து வடிவிலும் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை 1992ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. புதிய அரசு 1994ம் ஆண்டில் பதவிக்கு வந்ததும் கல்விச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை வழங்குமாறு தேசிய கல்வி ஆணைக் குழுவிடம் வேண்டியது. அதனைத் தொடர்ந்து பொதுக்கல்வி பற்றிய அறிக்கை 1995ம் ஆண்டு மார்கழிமாதம் தேசியகல்வி ஆணைக்குழுவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான சில முன் மொழிவுகளும் பத்திரங்களும் வெளிவந்தன. பல்கலைக்கழகக் கல்வி தொடர் பான தேசிய கொள்கை பற்றிய அறிக்கை 1996ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

பொதுக்கல்விக்கான சீர்திருத்தங்கள் என்னும் அறிக்கை தேசிய கல்வி ஆணைக்குழவினால் 1997ம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதுவே பொதுக்கல்வி தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள சீர்திருத்தங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள பல முன்மொழிவுகள் பரீட்சாத்த முறை யிலும் அமுல்படுத்தல் ரீதியிலும் நாட்டில் தற்பொழுது நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

பொதுக்கல்விச் சீர்திருத்தங்களை கொண்டுவரவேண்டிய அவசியத்தை இளைஞர்கள் மத்தியில் விரக்தி, நாட்டில் எழுத்தறிவு இன்மை முற்றாக நிங்காமை, கல்வியைப் பெறும் வாய்ப்பில் கிராம நகர, பொருளாதார, வேறு பாடுகள் மிகுந்து காணப்படுகின்றமை, 5–14 வயதுக்கு உட்பட்ட கட்டாயக் கல்வி வயதுப்பிரிவினரில் 15 வீதத்தினர் பாடசாலைக்குச் செல்லாமை, பரீட்சைகள் சித்திகளை மட்டும் முன்னெடுத்தமை, கல்வி வாழ்க்கையின் வெற்றிக்கான அறிவு, திறன் மனப்பாங்கை வலியுறுத்தி நிற்காமை, கல்வி புத்தகக் கல்விக்கும் மனனஞ் செய்தலுக்கும் மட்டும் முன்னுரிமை வழங்கியமை. பாடசாலைக்கல்விக்குப் போட்டியாக தனியார் கல்வி நிலையங்கள் விளங்கு கின்றமை, கற்ற கல்வியைக்கொண்டு தொழில் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை, என்பன வலியுறுத்தி நிற்கின்றன.

## பாடசாலைகளின் மீள் கட்டமைப்பு

இலங்கையின் தற்போதைய பாடசாலைக்கட்டமைப்பு ஐரோப்பியரின் வருகையோடு ஆரம்பமாகியது. ஐரோப்பியரின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் மரபு ரீதியிலான பாரம்பரியத்தில் நிலவிவந்த கல்வி அமைப்புக்கள் ஐரோப்பியரது சமூக பொருளாதார பண்பாட்டு நடவடிக்கைகளோடு இணைந்ததாக பிற்காலத்தில் மாற்றப்பட்டன.

சுதந்திரத்திற்கு பின்னர் பாடசாலைகளின் ஒழுங்கமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டன.

* பாடசாலைகளில் தேசிய மொழிகள் கல்வி மொழியாக்கப்பட்டமை.
* கிராமப்புறக்கல்வி மேம்பாட்டின் நிமித்தம் மத்திய மகாவித்தியாலயங்கள் நிறுவப்பட்டமை.

- ✱ உதவி நன்கொடை பெற்ற பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப் பட்டமை.
- ✱ நாடு முழுவதற்கும் பொதுவான கலைத்திட்டம் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ✱ திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப சர்வதேச பாடசாலைகள் அறிமுகம் செய்யப்பட்டமை.
- ✱ புலமைப்பரிசில் திட்டங்கள் விரிவாக்கப்பட்டமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## தற்போது நடைமுறையில் உள்ள பாடசாலைக் கட்டமைப்பு (1999 ஆம் ஆண்டு வரை)

- வண் ஏ.பீ. வகைப்பாடசாலைகள் (One A,B, School)
- வண் சீ வகைப்பாடசாலைகள் (One C, School)
- வகை இரண்டு பிரிவில் உள்ள பாடசாலைகள்
- வகை மூன்று பிரிவில் உள்ள பாடசாலைகள்

1. வண் "ஏ.பீ." வகைப்பாடசாலைகள்

   க.பொ.த.உயர்தரம் வரை விஞ்ஞானம், கலை , வர்த்தகம் ஆகிய வகுப்பு பிரிவுகளைக் கொண்டுள்ளன. இந்த வகையில் இலங்கையில் 583 பாடசாலைகள் அமைந்துள்ளன.

2. வண் "சீ" வகைப்பாடசாலைகள்

   க.பொ.த.உயர்தரம் வரை கலை, வர்த்தகம் ஆகிய வகுப்பு பிரிவுகளைக் கொண்டுள்ள பாடசாலைகள் இந்த வகையில் இலங்கையில் 1827 பாடசாலைகள் அமைந்துள்ளன.

3. வகை "இரண்டு" பிரிவில் உள்ள பாடசாலைகள்

   க.பொ.த. சாதரணதரம் வரை வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகள் இந்த வகையில் இலங்கையில் 3668 பாடசாலைகள் அமைந்துள்ளன.

4. வகை "மூன்று" பிரிவில் உள்ள பாடசாலைகள்

   ஆரம்ப பாடசாலைகளாக உள்ளன. இந்த வகையில் இலங்கையில் 4029 பாடசாலைகள் அமைந்துள்ளன.

தற்போதைய பாடசாலை அமைப்பு முறையில் எல்லாமாக 10, 107 பாடசாலைகள் அமைந்துள்ளன.

## புதிய கட்டமைப்பு

தேசிய கல்வி ஆணைக்குழவின் பொதுக்கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகளில் பாடசாலைகளை மீள் ஒழுங்கமைத்தல் பிரதானமான பரிமாணமாக அமைகின்றது.

பாடசாலைகளை மறுசீரமைப்பு செய்தல் தொடர்பான பணிகள் 1999ஆம் ஆண்டு தொடங்கி 2003ஆம் ஆண்டுவரை படி நிலையாக நிறைவு செய்யப் படவுள்ளன.

இது தொடர்பான திட்ட வரைபுகளை கல்வி உயர்கல்வி அமைச்சு வலயக்கல்வி பணிமனைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் கடந்த தசாப்தத்துள் வீழ்ச்சி அடைந்துள்ளமையால் பாடசாலைகளில் சேருகின்ற மாணவர் தொகை இல்லாமையால் குறைவான பாடசாலைகளில் உள்ள மாணவர்களக்கு மேம்பாட்டுக் கல்வியை வழக்கத் தேவைப்படுகின்ற பண்பாட்டு, பௌதீக வளங்களை வழங்குவது வினைத்திறன் குறைந்த செலவாக காணப்படுகின்றது.

எனவே சகல மாணவர்களுக்கும் சமமான கல்வி வாய்ப்பினையும் மேம்பாட்டுக் கல்வியினையம் பெற்றுக் கொடுப்பதற்கு உறுதுணையாக பாடசாலைக் கட்டமைப்பினை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

புதிய மீள் கட்டமைப்பின் பிரகாரம் பாடசாலைகள் இரு கட்டமைப்புக் களாக வகைப்படுத்தப்படவிருக்கின்றன. அவையாவன,

1) முதலாம் தரம் தொடக்கம் ஒன்பதாம் தரம் வரையிலான கனிஷ்ட பாடசாலைகள் **(Junior Schools)** (இள நிலைப்பாடசாலைகள்)

2) பத்தாம் தரம் தொடக்கம் 13ம் தரம் வரையிலான சிரேஷ்ட பாட சாலைகள். **(Senior Secondary Schools)** (முதுநிலைப் பாடசாலைகள்)

இலங்கையின் பாடசாலைச் செயல் முறையில் மாணவர் இடை விலகல் பெரும் அறைகூவலாக உள்ளது. முதலாம் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரையிலான கல்வியை ஒரே பாடசாலையில் தொடரும் போது மாணவர் இடைவிலகலை தவிர்க்கக்கூடியதாக இருக்கும்.

பல்வேறு வயது மட்டங்களைக் கொண்ட மாணவர்களுக்கு பொருத் தமான பாடசாலைப் பண்பாட்டை மேலும் பொருத்தமானதாக அமைப்பதற்கு இது துணை செய்யும்.

சிரேஷ்ட நிலைப் பாடசாலையை மேலும் வளம்படுத்தி சிறப்பார்ந்த கற்கைநெறிகளை வடிவமைப்பதற்கு புதிய கட்டமைப்பு உதவக்கூடியதாக இருக்கும் என மீள்கட்டமைப்பை வலியுறுத்துமிடத்து தேசிய கல்வி ஆணைக்கு வலியுறுத்தியுள்ளது.

தற்பொழுது 1–5 வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர் தொகை 11க்கு குறைவான எண்ணிக்கைகளைக் கொண்ட பாடசாலைகள் 2 கிலோ மீற்றர் தூரத்தினுள் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலைகளோடு ஒன்றிணைக்கப்படும்.

1–6 வகுப்புக்கள் 1–7 வகுப்புக்ள் 1–8 வகுப்புக்கள் 1–9 வகுப்புக்கள் நடைபெற்று வரும் பாடசாலைகளில் மாணவர் தொகை 16க்கு குறைவாக

இருக்கும் இடத்து 4 கிலோ மீற்றர் தூரத்துக்குள் அமைந்துள்ள பாடசாலை களோடு ஒன்றிணைக்கப்படும்.

தற்பொழுது செயற்பட்டுக் கொண்டிருக்கும் பாடசாலைகள் இளநிலைப் பாடசாலைகள் 1–9 வகுப்புக்கள் முதுநிலைப் பாடசாலைகள் 10–13 வகுப்புக்கள் என்ற கட்டமைப்பின் கீழ் வகுப்புக்கள் ரீதியாக உயர்த்தப்படு வதற்கு ஒவ்வொரு வகுப்பிற்கும் 15க்கு மேற்பட்ட மாணவர் தொகையையும் வகுப்புக்கள் புதிதாக நடாத்துவதற்கான பௌதீக பண்பாட்டு வளங்களையும் கொண்டிருந்தால் மட்டுமே பாடசாலைகள் வகுப்புக்கள் ரீதியாக அபிவிருத்தி செய்யப்படும். 15க்கு மேற்பட்ட மாணவர்கள் இல்லாத இடத்து வகுப்புக்கள் ரீதியான அபிவிருத்தி இல்லாமல் தற்போது உள்ள தர நிலையில்தான் செயற்பட முடியும்.

## மீள்கட்டமைப்பின் போது ஏற்படும் பிரச்சனைகள்

பாடசாலைகள் மீள் கட்டமைப்பு செய்யும் போது எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனைகள் பல தோன்றும். அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

பாடசாலைகளின் மீள்கட்டமைப்பு தொடர்பான முன்மொழிவுகளின்படி இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் தரம் உயரும். இந்த நிலை கவர்ச்சிகரமானதாக இருந்த போதிலும் தரம் உயரும் பாடசாலைகள் எல்லாம் அதற்கான சகல வசதிகளையும் பெற்று சமத்துவமான கல்வி வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்குமா? என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாக விளங்கலாம்.

தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரை இயங்கிவரும் 3500க்கு மேற்பட்ட பாடசாலைகளில் கணிசமான தொகை தரம் ஒன்று தொடக்கம் ஒன்பது வரை உள்ள பாடசாலைகளாக தரம் குறைக்கப்படும். அதேபோன்று தரம் ஒன்று தொடக்கம் பதின்மூன்று வரையுள்ள வண் சீ தரவகைப் பாடசாலைகளிலும் பல தரம் ஒன்பது வரையுள்ள பாடசாலைகளாக தரம் குறைக்கப்படும். அதனால் ஏற்படும் மாறுபாடுகள் பெற்றோர், மாணவர், ஆசிரியர், நலன்விரும்பிகள் மத்தியில் பலதரப்பட்ட சிக்கல்களைத் தோற்று வித்து நிற்கும்.

கனிஸ்ட பாடசாலைகள், சிரேஸ்ட பாடசாலைகள் என இருவகையாகப் பாடசாலைகளின் மீள்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தலின் போது பாடசாலை அமைப்பிற்கு ஏற்ப ஆசிரியர் வளப்பகிர்வு மேற்கொள்வதிலும் எதிர்பாராத நெருக் கடிகள் ஏற்படும். பாடசாலைகளின் தரம் பாடத்துறைகளின் தேவை என்பவற் றிற்கு ஏற்ப ஆசிரியர் நியமன வாய்ப்புக்கள் காணப்படவில்லை.

பாடசாலைகளில் செயற்பாட்டு அறைகளையும், சிறிய பண்ணைகளையும் உருவாக்குவதற்கு குறிப்பிட்ட காலம் தேவையாக இருப்பதோடு, பாடசாலை களின் பௌதீக வளங்களையும் கற்பித்தல் சாதனங்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்துவதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

## பாடசாலை மட்டக் கணிப்பீடு

புதிய கல்விச் சீர்திருத்தங்களில் மாணவர் மதிப்பீடு தொடர்பான விடயங்களை வலியுறுத்தும் விதத்தில் செய்யப்பட்டுவுள்ள முக்கியமான பரிமாணம் பாடசாலை மட்டக் கணிப்பீடு.

தேசியக்கல்வி ஆணைக்குழு தனது அறிக்கையில் "கற்றல் வெளிப் பாடுகளை கணிப்பது தரமேம்பாட்டிற்கு மிக முக்கியமான சாதனமாகும். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் ஒரு பகுதியே பாடசாலை மட்டக் கணிப்பீடாகும். பாடசாலை மட்டக் கணிப்பீட்டு உத்திகள் வளர்ச்சியடையும் போது ஆசிரியர்கள் இத்துறையில் பயிற்றுவிக்கப்பட்டு மாணவர் தேர்ச்சி மட்டத்தை எதிர்பார்த்தளவு அடைவதற்கு இயலும்" எனக் கூறிச் செல்கின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள மதிப்பீட்டு முறைகள் மாணவர்களை பல்வேறு உளஉடல் தாக்கங்களக்கு உள்ளாக்கி எதிர்பார்த்த பலனைத் தராத நிலையை ஏற்படுத்தியதுடன் மாணவர்களைக் கல்விச் செயற்பாட்டிலிருந்து இடைவிலகச் செய்வதாக உள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்கு எடுக்கப் பட்ட முயற்சியின் வெளிப்பாடே பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம்.

பாடசாலை மட்டக் கணிப்பீடு உண்மையிலேயே வகுப்பறை மட்டக் கணிப்பீடு என்றே அழைக்கப்படவேண்டும். ஏனெனில் வகுப்பறையில் ஆசிரியர் களினால் கற்றல், கற்பித்தல், கணிப்பீடல் நடைபெறுவதினாலாகும். எனினும் பாடசாலையில் அதிபரின் பங்கும் மேற்பார்வையும் அதிகமான அளவில் இருப்பதினால் பாடசாலை மட்டக்கணிப்பீடு என்று பெயர் பெறுவதாயிற்று.

பாடசாலை மட்டக்கணிப்பீட்டுத் திட்டம் வகுப்பறையில் உள்ள மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டுள்ள வேளையில் ஆசிரியர்கள் மாணவர்களுடன் இருந்து கொண்டே கற்றல் திறன் திறமையின்மை தொடர்பாக அடிக்கடி கண்காணித்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு உடலாலும், உள்ளத் தாலும் உதவியளித்து எதிர்பார்க்கும் தேர்ச்சிமட்டத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கும் அவர்களிடத்தில் ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்வதற்கும் வாய்ப்பளிக்கும்.

❖ மாணவர்களின் கற்றல் பண்பாட்டை அதிகரித்தல்.

❖ ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்தல்.

❖ கற்றல் கற்பித்தல் செயற்பாடு மிகவும் வினைத்திறன் உள்ளதாக அமைவதற்க வழிகாட்டும் விதத்தில் மதிப்பீட்டுச் செயற்பாட்டை மேம்படுத்தல்

❖ பாடசாலைத் தொகுதியில் மதிப்பீட்டுக் கலாச்சாரத்தில் இருந்து கணிப்பீட்டுக் கலாச்சாரத்திற்கு மாறுவதற்கு வழிகாட்டுதல்

ஆகிய முக்கிய நோக்கங்கள் இத்திட்டத்தின் மூலம் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலை கணிப்பீட்டு திட்டமானது பரீட்சார்த்தமாக தெரிந்தெடுக்கப் பட்ட பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டு அவை தொடர்பான ஆய்வுகள் செய்யப்பட்டு பின்பு இலங்கையில் உள்ள எல்லாப் பாடசாலைகளிலும் 6ம் தரத் தில் 1998ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தொடர்ந்து ஆண்டு வாரியாக தரம் 01ல் இருந்து தரம் 13 வரையான வகுப்புக்களுக்கு விஸ்தரிக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

# பாடசாலை மட்டக்கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கான கால அட்டணை

இடைநிலை – உயர் வகுப்புக்களில்

| ஆண்டு | தரம் 6 | தரம் 7 | தரம் 8 | தரம் 9 | தரம் 10 | தரம் 11 | தரம் 12 | தரம் 13 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1998 | பரீட்சா | பரீட்சா | | | | | | |
| 1999 | அமுல் | பரீட்சா | பரீட்சா | பரீட்சா | | | | |
| 2000 | | அமுல் | பரீட்சா | அமுல் | பரீட்சா | | | |
| 2001 | | | அமுல் | | அமுல் | பரீட்சா | | |
| 2002 | | | | | | அமுல் | பரீட்சா | |
| 2003 | | | | | | | அமுல் | பரீட்சா |
| 2004 | | | | | | | | அமுல் |

ஆரம்ப வகுப்புக்களில்

| வருடம் | தரம் 1 | தரம் 2 | தரம் 3 | தரம் 4 | தரம் 5 |
|---|---|---|---|---|---|
| 1999 | பரீட்சா | | | | |
| * 2000 | அமுல் | பரீட்சா | | | |
| 2001 | | அமுல் | பரீட்சா | | |
| * 2002 | | | அமுல் | பரீட்சா | |
| 2003 | | | | அமுல் | பரீட்சா |
| 2004 | | | | | அமுல் |

பாடத்தின் ஒவ்வொரு அலகும் கற்பிக்கப்பட்டு முடிவில் கணிப்பீடு மேற்கொள்ளப்படும் இச்செயற்பாட்டின் மூலம் மாணவர்களின் கற்றல் நிலையும் ஆசிரியர்களின் கற்பித்தல் நிலையும் கண்டுகொள்ளப்படுவதோடு கணிப்பீட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் பரிகாரக்கற்பித்தல் உடனுக்குடன் மேற்கொள்ள வாய்ப்பேற்படுகின்றது.

ஒவ்வொரு தவணையிலும் எட்டுத் தடவைகளுக்கு குறையாமலும் பத்துக்கு மேற்படாமலும் கணிப்பீடு மாணவர்கள் கற்றுக்கொண்ட பாட அலகு களில் நடைபெறும். ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக குறிப்பிட்ட பாட அலகில் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

கணிப்பீடுகள் கற்றல் விளைவுகளை முன்வைத்தே தயாரிக்கப்படும் அத்துடன் மாணவருக்கு உளவியல் ரீதியாக எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாத விதத்தில் தயாரிக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கணிப்பீட்டு கருவிகள்

கணிப்பீட்டுக் கருவிகளாக பதின்நான்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன,

1. குறுஞ்சோதனை (எழுத்து – வாய்மொழி)
2. வாய்மொழிச் சோதனை
3. கேட்டல் சோதனை
4. பேச்சு சோதனை


5. வாசிப்புச் சோதனை
6. செய்கைமுறைச் சோதனை
7. செவ்வை பார்த்தல் பட்டடியல்
8. அவதானிப்பு அட்டவணை
9. ஒப்படை
10. செயற்திட்டம்
11. படங்களைக் கொண்ட சோதனை
12. செயலடைவுக் கோவை
13. தரப்படுத்தல் அளவீடு
14. திறந்த நூல் பரீட்சை

கணிப்பீட்டில் மாணவர் பெறும் புள்ளிகள் பாடரீதியாக கீழ்க் காணப்படும் நான்கு தொகுதிகளாக வகைப்படுத்தப்படும்.


| புள்ளிகள் | தேர்ச்சி | நிறம் | விளைவு |
|---|---|---|---|
| 00 – 20 | மிகக்குறைவு | கறுப்பு | தேர்ச்சி அடையவில்லை |
| 21 – 60 | குறைவு | மஞ்சள் | தேர்ச்சி அடையவில்லை |
| 61 – 80 | நன்று | பச்சை | தேர்ச்சி மட்டத்தை நெருங்கியுள்ளார் |
| 81 – 100 | மிகநன்று | சிவப்பு | தேர்ச்சி |

ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக கணிப்பீட்டுக்கென அப்பியாசப் புத்தகங்கள் பேணப்படுவதோடு கணிப்பீட்டு அப்பியாசப் புத்தகங்களில் கணிப்பீடு தொடர்பாக நிலை, நிறம், இயல்புகள் என்பன வரைபுகள் மூலம் மாணவரின் உதவியுடன் பதிவு செய்யப்படும்.

## மாணவர் தோற்றப்பாடு



**பாடத்தின் தோற்றப்பாடு**




"பதிவு செய்யப்படும் இத தகைய வரைபுகளில் இருந்து குறிப்பிட்ட பாடஅலகில் மாண வரின் கற்றல் வெளிப்பாடுகள் இனங் காணப்படுவதோடு ஆசி ரியர் தனது கற்பித்தல் உத்தி யைத் திட்டமிடவும் மாணவ ருக்கு உதவியளிக்க வேண்டிய கட்டத்தை இனங்காணவும் உதவுகின்றது.

வரைபுபடுத்தல், அறிக் கைப்படுத்தல், அட்டவணைப் படுத்தல், காட்சிப்படுத்தல் என்பவற்றில் மாணவர்களும் பங்குகொள்வதால் மாணவர்கள் தமது அடைவுமட்டத்தை தாமே அறிந்து கொள்ளவும் சுயமதிப்பீடு செய்யவும் சந்தர்ப்பம் வழங்குவதோடு கற்றல் உத்திகளை அதிகரிக்கவும் செய்கின்றது.

பாடசாலை மட்டக் கணிப்பீடுகள் தொடர்பான பெறுபேறுகள், முடிவுகள் சிறப்பானது என இணங்காணப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான விளக் கமோ சந்தேக நிவர்த்தியோ பெற்றோர் மத்தியில் பொருத்தமான முறையில் ஏற்படுத்தப்படவில்லை.

ஆசிரியர்கள் கூட பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பாக பொருத் தமான விளக்கத்தை பெற்றுக் கொண்டதாக இல்லாமல் பொறிமுறையாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பாக ஆசிரியர்களின் வேலைப்பமு மேலும் அதிகரிக்கப்பட்டிருப்பதோடு அதிகாரிகளை பதிவேடுகள் மூலம் திருப்திப்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது என்பது பொதுவான புகாராகும்.

பாடசாலைகளின் மீள் கட்டமைப்பு, பாடசாலை மட்டக்கணிப்பீடு என்பன வெற்றிகரமான இயல்புகளைக் கொண்டனவாக தெரிந்த போதிலும் கல்வியால் புறக்கணிக்கப்பட்ட, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங் களில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள மற்றும் பெயரளவில் மட்டும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பாடசாலைகளின் விடயத்தில் எவ்வளவு செயற்பாட்டுத் திறத்தைக் கொண்டிருக்கும் என்பது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சந்தே கத்தை தோற்றுவித்துள்ளது.

நாட்டின் பிரதான நகரங்களில் நடைபெற்ற தேசிய கல்வி ஆணைக் குழுவின் அமர்வுகள் இதுவரை வடக்குக் கிழக்கில் நடைபெறவில்லை என்பதும் தமிழ் மக்களின் நியாயமான சந்தேகங்களை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

அரசியல் இலாபம் கருதாத தேசிய நலன் நோக்கிய தீர்மானங்களும், கல்வி நிர்வாகிகள் ஆசிரியர்களின் அர்ப்பணிப்போடு கூடிய சேவையும் பெற்றோர் நலன் விரும்பிகளின் பூரணமான ஒத்துழைப்பும் புதிய கல்விச் சீர்திருத்தங்களின் வெற்றியை நிர்ணயிக்கும்.

# எமது கல்லூரியின் இலட்சினை



எமது கல்லூரி இலட்சினை நூற்றாண்டு நூற்றாண்டு பலகோடி நூற்றாண்டு வாழும் பாங்கினைக் கொண்டு பல தத்துவ உண்மைகளை தன்னுள் அடக்கி வெற்றியின் பரிசான கேடயவடிவம் தாங்கி, தூர நோக்கு சிந்தனையை தன்னுள் பதித்து கலை அம்ச சிறப்போடு தானும் வாழ்வாங்கு வாழ்ந்து மற்றையோரையும் வாழ வைக்கும் செழுமையையும் தாங்கி நிமிர்ந்து நிற்பது அதன் பெருமைச் சான்றாகும்.

1892ம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது இலச்சினை எமது பிரதேச வளத்தையும் பிரதான வாழ்வையும் தாங்கி ஆத்மீக அறிவொளியில் பிறந்த பெருமைமிக்க பொருட்களை தன்மேல் பதித்து தன்னிகரில்லாத் தலைமைக் கருத்தையும் தான் சுமந்து நிற்பதில் பெருமை கொள்கின்றது.

இதய தீபமான இலச்சினை தாங்கி நிற்கும் பொருட்கள் ஒப்பீடு இல்லாத சிற்ப சிகரமாக திகழ்கின்றன. இமயத்திற்கு ஒப்பான இலச்சினையின் இடது பக்கத்தில் திறந்த நிலையில் வைக்கப்பட்ட புத்தகம் அக இருளைப் போக்கும் அறிவின் அர்த்தமாக பதிந்துள்ளது. வாசிப்பதன் மூலம் வளமான அறிவைப் பெறமுடியும். கல்லூரிச் சூழல் அறிவின் அரங்கமாக திகழவேண்டும் என்னும் அற்புதக் கருத்தை ஆழமாகப் பதிந்து நிற்பதைக் காணலாம்.

இலச்சினையின் வலது பக்கத்தில் வாய்ப்புக்கள் பலவற்றிற்கு வழி காட்டி நிற்பது பசுமை நிறைந்த பனைமரமாகும். இது வாழ்ந்தாலும் ஆயிரம் காலம் வீழ்ந்தாலும் ஆயிரம்காலம் எனும் ஒப்பில்லா உண்மையின் உள்ளடக்கத்தை நிறுத்தி எமது பிரதேச தொழில் வளத்தையும் யாழ்ப்பாண மாவட்ட தனித்துவத்தையும் எடுத்துக் காட்டுவதோடு கேட்பதையெல்லாம் கொடுக்கும் கற்பக விருட்சமாய் அமுத சுரபியாய் பனை மதிப்புப் பெற்று எமது வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த உண்மையை உருவாக்கி உயர்ந்து நிற்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

இலச்சினையின் மத்தியில் மங்கள ஒளியாய் சுடர்விட்டு நிற்பது இரு கையில் ஏந்திய ஒளிர்விளக்காகும். ஏந்திய விளக்கு என்றும் பிரகாசிக்கும் என்பது உலகறிந்த உண்மை. எமது கல்லூரியும் என்றென்றும் ஏந்திய விளக்காய் பிரகாசித்துக்கொண்டே திகழும் எனும் பெருமையை வெளிப்படையாய் காட்டி நிற்பதைக் காணலாம். அறிவை மயக்கும் அறியாமை அகற்றப்பட வேண்டும். அறிவுக்கண் திறக்கப்பட வேண்டும் என்பதை உறுதிபட உதய தீபமாய் ஊட்டி நிற்கிறது.

"EVERSHINING LIGHT" என்ற மகுட வாசகம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டாலும் அதன் பொருளும் தத்துவமும் என்றென்றும் பெருமை சேர்ப்பதாய் உள்ளது. விளக்கைத் தேடி விட்டில்கள் எவ்வாறு விரையுமோ அவ்வாறு அறிவைத் தேடும் ஒவ்வொருவரும் அறிவுக்களஞ்சியமான எமது கல்லூரியை நோக்கி ஓடிவருவர் என்பதை தெளிவுற காட்டுவதோடு அறிவை வளர்ப்பதில் அணையாத ஆலயதீபமாய் திகழ வேண்டுமென்பதை திட சங்கற்பத்துடன் தாங்கி நிற்பது தனிச்சிறப்பாகும்.

இலச்சினையின் அடித்தளமாக அமைந்துள்ள கட்டிட வரிசைகள் கல்லூரியின் எதிர்கால வளர்ச்சி, அறிவியல் நிலையின் மேம்பாடு, கல்வியின் சிறப்பு என்பவற்றைத் தூண்களாக நிமிர்த்தி துல்லியமாக விளக்கி நிற்பதோடு கல்வி உறுதியான சொத்து என்பதையும் புலப்படுத்துகின்றது என்றும் ஒளிரும் விளக்கு ஒளியோடு மிளிர வேண்டுகின்றேன்.

*- திரு. பொ. சகலகலாநிதி -*
*ஆசிரியர்*

## To become a good coversationalist

## சிறந்த பேச்சாளராக

| | |
|---|---|
| Txpress your viewes freely. | தயக்கமின்றி உன் கருத்தைக் கூறு |
| Think well before you speak. | பேச முன் நன்கு யோசனை செய் |
| Use polite word. | மரியாதை வார்த்தைகளை உடயோகி |
| Avoid bad humour. | தீயவழி முறைகளை தவிர் |
| Be through with the subject. | விடயத்தை நன்கு படித்து தயாராயிரு |





1998 மே. 18ம் திகதி நடைபெற்ற க. பொ. த.
உயர்தர மாணவர் மன்ற ஒன்று கூடல் நிகழ்வில்
பிரதமவிருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்த
பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
(கலைப்பீடாதிபதி யாழ்-பல்கலைக்கழகம்)
திருமதி. கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ்




1999 மார்ச் 20ம் திகதி நடைபெற்ற க. பொ. த.
உயர்தர மாணவர் மன்ற ஒன்று கூடல் நிகழ்வில்
பிரதமவிருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்த
பேராசிரியர் கலாநிதி கே. குகபாலன்
(தலைவர் புவியியத்துறை யாழ்-பல்கலைக்கழகம்)

தரம் ஒன்று வகுப்பு~கால்கோள் விழா~1999



மரம் நாட்டு விழா~ 1999



# A Message

V. M. Muthurajah
Asst. Director of Education (English)

It is my pleasant privilage to send this Message to a historic Souvenir being published to mark the Centenary Celebrations of this prestigious institution.

I am all the more privileged when I recall the fact that I started my Kindergarten Schooling here. A part from being an officer of the department of education, my association with this institution had been more close than that of any other departmental official. I had the opportunity of actively -Motivating this institution as a teacher of English for nearly twelve years and also as an In-Service Advisor (Eng) Kopay Division.

I had spent nearly 28 years of my life as a student and a teacher in this college, which has been to me, a Second home. My mind is rich in memories of those who guided us during that time. I wish to pay humble tribute to them. Many of them have now gone beyond the veil.

Founded primarily as a protestant Vernacular school, it had been nursed and nourished by dedicated and out-standing principals. They had guided the destinies of the school with Missionary Zeal until 1961, the year in which the school was vested with the government. Yet another band of dynamic and talented local principals took over in Succession, lifting the school to greater heights by their efforts, vision and foresight. The contributions made by these principals can never be forgotten by the old students of this college.

The transition from the Christian Missionary school to a state school with over 90 percent of the pupils Hindus and with a Christian principal had to be gradual and smooth without wounding the religious susceptibilities of the American Mission clergymen who had exercised full control over this institution.

The school has maintained a good standard in education, sports and religious activities. The reason for this is quite obvious the able guidence and perfect administration of successive principals, the Co-operation given by the most efficent and talented members of the staff and above all the untiring efforts of the faithful, dutiful and brilliant students.

The school which is one of the oldest educational institutions in the country, has over the past century made and unrivalled contribution towards the educational development of the children of this area. Its products occupy eminent positions in all walks of life in this country and abroad today.

While expressing my deep appreciation of these achievements, I sincerely hope that the school will grow from strength to strength in the coming years, enabling it to make an even greater contribution towards the nations education as it has done hitherto.

The school underwent severe difficulties during the last few years due to the tense situation prevailed. However, the courage, wisdom and the dedicated services of the then principals and staff and the co-operation of students, old boys and parents helped to overcome the many difficulties the school faced.

We must be very proud of the fact that the present principal of this institution is Mrs. S. Kanagarajah, an old girl of this college.

She is very energetic and popular both with the stuents and the staff on account of her Charming personality. She is always very polite and tactful in her dealings with the staff. Whenever she had an occasion to


point out certain lapses, she did it without hurting the feelings or dignity, which I was able to witness during my official visits.

She is interested greatly in the academic progress of the College. The excellent results achieved at the GCE (O/L) and (A/L) examinations in the recent past bear ample testimony to this endeavour.

She is specially intereested in the primary school children and provide them with the best of facilities. She encourages the students in sports and games too. Her perseverance and hidden talents made her a Grade I of the SriLanka Principal Service. I am sure, under her guidence and leadership this institution would continue to spread its glory far and wide.

In conclusion, I join the old boys of the Christian College, living in all parts of the world, in thanking God for the gift of the illustrious principals and teachers who must be personifying their dear school in their minds. I join them and all well-wishers of the school in wishing its many many years of service for the enrichment of the lives of our people. We pray that the grace of God may abide with all those called upon to serve this College, give them strength and guide them in their work.

*I wish the school all success*



# கலைத் திட்டத்தில் தொழில் முன்னிலைப் பாடம்

*திரு. நா. சண்முகரத்தினம்*
*பகுதித் தலைவர்*

சுதேசிகளின் அரசியல் நிலைப்பாடுகள் முனைப்படைந்து சுதந்திர உணர்வு மேலோங்கிய காலப்பகுதியில் நாட்டின் அபிவிருத்தி, சுதேசிகளின் நலன் என்பவற்றை கருத்திற் கொண்டு கல்விச் செயற்பாடுகள் செயல் வடிவம் பெறத் தொடங்கின.

நாட்டின் வளர்ச்சியையும், அந்நாட்டின் வாழ்க்கை முறைகளையும் பிரதி பலிப்பது கலைத்திட்டமே என்ற உயர்ந்த குறிக்கோளைக் கருத்தில் கொண்டு பொதுமைப்படுத்தப்பட்ட கலைத்திட்ட வடிவமைப்பில் தொழில் முன்னிலைப் பாடங்கள் முதன்மை பெறுகின்றன.

தொழில் முன்னிலைப் பாடநெறி பல்வேறு வடிவமைப்பில் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தபோதிலும் 1972ஆம் ஆண்டுகளில் ஐக்கிய முன்னணி அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலைக் கலைத்திட்ட அமைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட முன்மொழிவுகள் கொண்டுவரப்பட்டன. இதன்படி தொழில் நுட்பப் பாடநெறி கலைத்திட்டத்தில் மிகமுக்கிய இடத்தைப் பெறத் தொடங் கியது. தொழில் முன்னிலைப் பாடநெறி என்பது தெரிவு செய்யப்பட்ட சில தொழில்களைப் பற்றிய அறிவைப் பெறுதல் என்பதாகும்.

தொழில் முன்னிலைப் பாடத்தை ஒழுங்கான முறையில் நடைமுறைப் படுத்துவதை வலியுறுத்தும்போதும் தேசிய வருமானத்தில் கணிசமான தொகை செலவு செய்யப்பட்டபோதும்; பாடசாலையை விட்டு நீங்கும் மாணவர்களில் பெரும்பாலானோருக்கு நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பன விருத்தி அடையவில்லை. அவர்கள் தாம் கற்ற கல்வி மூலம் சிறப்பாக வாழும் வழிகளை அறிந்திருக்கவில்லை.

பாடசாலையை விட்டு விலகுவோரில் பெரும்பாண்மையோர் மரபு வழி வந்த உத்தியோகங்கள் கிடைக்கவில்லை என்பதை அறிந்திருந்தும் ஏமாற்றமும், உதவியற்ற நிலையையும் அடைகின்றனர்.

தற்போதைய கல்விமுறை பாடசாலையை விட்டு விலகுபவர்களை இயன்ற மாற்று வழிகளைப் பற்றி சிந்திக்கவும் தயார் செய்யவில்லை.

வேலையை பெரிதாக மதிப்பிடவும், தொழிலாளியை குறைவாக மதிப் பிடவும் இக் கல்வி கற்பித்துள்ளது.

கற்றலோடு தொழிலாளிகள் இணைக்கப்படவில்லை. கற்றவர்கள் தொழி லாளிகளாக இருக்கவும் இல்லை. அவர்களை இருந்து செயற்படுத்தும்படி வலியுறுத்தப்படவும் இல்லை.

பாடவகைகளிடையே உயர்வு, தாழ்வு சிந்தனை வலியுறுத்தப்பட்டதோடு தந்தை செய்யும் தொழிலின் தன்மையை மகன் உணராத; அறியாத மன நிலையை இக் கல்வி வளர்த்தது எனவும் கூறப்பட்டது.

இத்தகைய குறைபாடுகளை நீக்கி இளைஞர்களதும், சமூகத்தினதும் மிக முக்கியமான பிரச்சினைக்கு கல்வியின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இலக்கை அடைவதற்கு தொழில்நுட்ப பாடநெறிக்கு கலைத்திட்டத்தில் முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தப்பட்டது.

இக் காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலைக் கலைத் திட்ட அமைப்பில் தொழில் நுட்பப் பாடநெறி 1, தொழில் நுட்பப் பாடநெறி 2 என்பன உருவாக்கப்பட்டன.

1972ஆம் ஆண்டு 6ம் தரத்தில் இது அறிமுகப்படுத்தப்பட்டது. இது தர ரீதியாக விஸ்தரிக்கப்பட்டு என் சீ ஜீ ஈ (தேசிய பொதுக்கல்வித் தராதரப் பத்திரம்) பரீட்சையில் உள்ளடக்கப்பட்ட 10 பாடத்துறைகளில் இரண்டு பாடநெறிகளாக உள்ளடக்கப்பட்டன. தொழில்நுட்ப பாடநெறி 1 : இதில் விவசாயம், கைப்பணி, (மரவேலை, உலோகவேலை, களிமண்வேலை, நெசவுவேலை) மனையியலும், தையலும் உள்ளிட்ட பாடத்துறைகளும் அடங்கின. தொழில்நுட்பபாடநெறி 2 : மாணவர் வாழ்விடச் சூழலிலுள்ள தொழில்துறைகளும் உள்ளடக்கப்பட்டது.

1976ஆம், 1977ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற தேசிய பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை 1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசினால் மாற்றி அமைக்கப்பட்டது. 1978ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்த தொழில்நுட்ப பாடங்கள் 6ம் வகுப்பில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு 7ஆம், 8ஆம், 9ஆம் 10ஆம் வகுப்பு என விஸ்தரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

1978இல் இருந்து மரவேலை, உலோகவேலை, விவசாயம், மனைப் பொருளியல், தையல், மட்பாண்ட வேலை, தும்பு வேலை, மோட்டார் பொறி முறை திருத்தல், மின்வாயு, ஓட்டுவெலை, மேசன் வேலை, மீன்பிடி என்பன உள்ளிட்ட பல தொழில்துறைகள் போதிக்கப்பட்டன. அழகியல் பாடத்துறையுடன் இருந்து வந்த வர்த்தகமும் இதனுடன் இணைக்கப்பட்டது.

1991ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கனிஷ்ட தொழில்நுட்ப பாடநெறியில் விவசாயம், வர்த்தகவியல், மனைப்பொருளியல் தொழில்நுட்பத்தில் முறையே 20, 09, 06, 18 அலகுகளில் ஏதாவது ஒரு பாடத்தில் ஒரு அலகைக் கற்கலாம். இதற்கான பரீட்சை 1998ஆம் ஆண்டுக்கிடையில் நிறுத்தப்பட்டு வாழ்க்கை தேர்ச்சிக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது.

1996ஆம் ஆண்டு 10ஆம் ஆண்டிலும், 1997ஆம் ஆண்டு 11ஆம் ஆண்டிலும் தொழில்நுட்ப பாடங்களாக விவசாயத்துறை, கைத்தொழிலும் தொழில்நுட்பத் துறையும், மனைப்பொருளியல் ஆகிய பாடத்துறைகள் அறிமுகம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தொழில்நுட்ப பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும்போது முன்வைக்கப்படும் இலக்குகள் கவர்ச்சிகரமானவையாக இருந்தபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும், அதன் விளைவுகளிலும், அதற்காகச் சமூகத்தில் கிடைக்கும் கௌரவத்திலும் காணப்படும் தளம்பல் நிலைகளால் எதிர்பார்த்த நிலைப்பாடுகள் நிறைவு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது எனலாம்.

# GLEANINGS FROM OUR THOUGHTS – HISTORY IN BRIEF ATCHUVELY MAHA VIDYALAYA

Mrs. Thaneswary Rajaratnam
(Primary Sectional Head)

One hundred and eight years have rolled in the land mark in the history of Atchuvely. Yes, the original name of Atchuvely Maha Vidyalayam was American Ceylon Mission English School, Atchuvely.The American Mission functioned during the 19th century period the Mission Church was formally established in 1892. The School also found in the same year by Rev. J. M. Sanders by the church of the Ceylon Mission project. Mr. Thambimutthu Pulavar -prophet, greatly assisted encouraged. He is a Prominent citizen of Atchuvely at that time and a leading member of the Catholic Community.

Thambimuttu pulavar is not only a poet but also the proprietor and editor of bilingual paper called in English "TRIBUNE" and Tamil "SANMARKA POTHINI". He wield a great influence on the literary standard of the village -ATCHUNAGAR. His stepson Vythilingam who later became Rev. Father Gnanapiragasam the famous scholar and linguistic. He is the first batch of students admitted to the side by side in a seperate building. Started by privateparties and handed over to American Mission when they came to the scene. The Tamil School was composed of two sections, male section and female section and each section occupied seperate building and handed over to the Head Teacher and it was later amalgamated with the English School probably in the forties at the time of change, over and the medium of Instruction to Tamil. It formed the primary section of the amalgamated school. The name of the school was changed at this time "ATCHUVELY CHRISTIAN COLLEGE". The name further changed at the time of take over of the school by the ceylon Government in 1961 as ATCHUVELY Maha Vidyalayam.

Mr.E.K. Kanapathipillai of Pathermeni Atchuvely was a trained teacher and the Head Master of the Male section of the Tamil school for more than thirty years during the first half of this century. He was veryversatile teacher who could teach any subject ably and confidently. He was a powerful speaker in Tamil. He was considered an expert in measuring the areas of lands and much, sought after for this purpose by villagers. He rendered his service free to all and sundry. He was a prominent person in the village and welknown to every one. He was tall of stature and majestic in appearance. It was impossible to miss or ignore him when met on the road or at public gathering.

Mr.K.A. Kuruvilla of Kerala was a graduate of a Madras University and held the post of Head Master for the English School for more than twenty years, during the first half of the century. He was an able teacher of English and History and he used to came lavishly during his period of Office the English school was upgraded and classes upto S.S.C. was held. He had a distinguished figure and several addition to the school building especially the Northern and Southern wings were put during his time. He was a much pespected person in the village, though a Malayalee he could speak Tamil fluently. It is said that when the American Missionaries arrived in Ceylon in the year in the year 1816. The British Governor who was not pleased with their presence send them to the Arid North to languish. The British Governor's anticipation did not materialise unstead the Torch of learning lit by the missionaries had spread far and wide like wild fire and illuninated many a village in the North including Atchuvely.

The Geography teacher in the early days of the English used to define the boundaries of this village of Atchuvely on the following lines.

| | | |
|---|---|---|
| North | - | Thambalai and Valalai |
| East | - | Salt river |
| South | - | Puttur and Navakeeri |
| West | - | Vasavilan and Palaly |

On this area ths school has stood up supreme for the last one hundred and eight years sheeding its light of learning to the benefit of any

and promoting the advancement of the village. No rival school of comparative status has come up in the area during the said period.

From the status of a primary School it has blossomed into full fledged secondary scholl with classes up to G.C.E. A/L and possesses building facilities and grounds of which any village could be proud of. May Atchuvely Maha Vidyalayam survive, serve and flourish for many more years to come and be a boom and legacy to the village in general and to the youth in particular. Atchuvely Maha Vidyalayam true to its motto "EVER SHINING LIGHT" will flourish well in the near future. Our Vidyalayam has matured to this status through organic and inorganic growth.


As a state controlled institution its status grew from strength to strength, A glance of its records or acadamic and co-curricular achievements through. 70s, 80s and 90s reveal reveal its growth in quality and quantity of 115 pupils. Ethnic crises in our country has wrought undeliable impact on our Educational system. Atchuvely Maha Vidyalayam didn't escape from this inslaught. May this rich hericage of Atchuvely Maha Vidyalayam remain stronger even though future changes.

I have been in close Association with Atchuvely Maha Vidyalayam for the past four decades, that is the reason why I feel privileged to contribute this article to the Souvenior to Celebrate the 108th Anniversary of the school. I had spent forty years of my life as a student and teacher in Atchuvely Maha Vidyalayam which has been to me a second home still now. Many events events too, some land marks in the history of the school, others cherished because they bring back the memories of the happy days. I have spent at Atchuvely Maha Vidyalayam as a student and now a teacher are still vivid.

May God Bless Atchuvely Maha Vidyalayam Principal, Staff and Students and its Motto is "Ever Shing Light".

Lastly a word about this Souvernior it has taken a much longer time to bring out this issue. Now it is in your hands.

இல்லமெய்வல்லுநர் போட்டி 1999



ஆரம்பப்பிரிவு மாணவர் விளையாட்டுப் போட்டி 1999



சிங்கரட்ண மண்டபத்தின் எழில்மிகு தோற்றம்



பழையமாணவர் சங்கத்தினர் அதிபரை வரவேற்றல்



# பரத நடன ஆசானின் இலட்சணம்

செல்வி. சி. தேவகுமாரி
நடன ஆசிரியை

நவபாத்திரத்தில் நளவவட்டனவே கட்டளையாம்

அவமன்றி ஆடதலா வடுவாகும் ஜகமீது

வட்டமதனால் மிகத்தவவுண்டானால்ல நல்ல

நட்டுவனே எனவாம் நட்டுவன் குணம்

பரத நடன ஆசானின் இலட்சணம் என்பது நாட்டியம் பயிற்றுவிக்கும் குருவிற்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் ஆகும். பல இலட்சணங்கள் இருப்பினும் அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

குரு சிஷ்யன் வணங்கக் கூடிய மேலான குலத்தில் பிறந்தவராகவும் இனிய தன்மையுடையவராகவும், எல்லா உயிர்களிடத்தும் கருணையுடையவரா கவும், பொறுமையுள்ளவராகவும், திடசித்தமும் தீர்மான அறிவுடையவராகவும், நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

சிஷ்யன் மனதில் உள்ள அழுக்கை நீக்கும்படி கோரும் தெய்வபக்தி உடையவராகவும், கல்வியை எளிதாகக் கற்றுக் கொடுப்பதில் தேர்ச்சியும் மாணவர்க்கு மனதில் படும் படியான உதாரணங்களால் எடுத்துக் காட்டும் வல்லமையும் அமைந்தவராய் இருத்தல் வேண்டும்.

சிஷ்யர்களின் தவறுகளைப் பொறுத்துக் கொண்டு விளக்கம் கொடுப் பவர்களாகவும் புராண இதிகாச வியாக்கியானங்களில் தேர்ச்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

மேலும் நல்ல குருவானவர் அற்ப வித்வான்களால் பாதிக்கப்படாத தேர்ச்சி மனவலிமை உடையவராகவும் சிஷ்யர்கள் ஏழையாய் இருப்பின் அவர்களுக்கு திரவியம் தந்து காப்பாற்றும் சக்தியுரையவராயும், சிஷ்யர்களுக்கு உண்மையை சந்தேகமறக் காட்டும் பெருமை உடையவராகவும், யாவரும் மேம்பாடான காரியங்களை கோரும்படி சிறந்து விளங்குபவராகவும் நல்லோர்கள் நாடி வந்து அடிக்கடி கலந்து பேசும் தகுதியும், உலக நடவடிக்கைகளை செம்மையாய் அறிந்திருப்பவராகவும் இருக்கவேண்டும். இத்தகைய அடிப்படை இலட்சணங்களைக் கொண்டவரே பரத நடன ஆசானாக விளங்கத் தகுதி வாய்ந்தவராகும்.

பரத நடன ஆசான்கள் பாடத்தைச் சொல்லிக் கொடுக்கும் முறையில் ஐந்து பிரிவினராக வகைப்படுத்தப்படுகின்றன.

**1. மத்ஸ்ய தந்திரம்**

மீனானது தன் சினைகளைக் கண்ணால் பார்த்த அளவிலே அச்சினைகள் குஞ்சுகளாகி தாய் மீனைத் தொடர்ந்து விளையாடுவது போல் சிஷ்யர்களுக்குத் தன் கிருபா நோக்கத்திலேயே ஞானத்தைக் கொடுப்பவர்கள் ஆவர்.

**2. கூர்ம தந்திரம்**

ஆமை முட்டையைத் தரையிலிட்டு பின் நீரில் மூழ்கி அம்முட்டை யினிடத்து ஞாபகத்தை செலுத்தி மனோ வலிமையால் குஞ்சுகளைத் தன்னி டத்து வரும்படி செய்யும். அதுபோல் ஆசான் தனது சிஷ்யர்களை ஒரு முறை பார்த்துவிட்டு அவனை ஆசிர்வதித்து அவன் மேல் அடிக்கடி தன் கவனத்தைச் செலுத்தி சிஷ்யன் பக்குவமடைந்து அதன் வழி செல்லுதல் ஆகும்.

**3. பிரமர தந்திரம்**

எங்கோ கிடக்கும் ஒரு புழுவைக் கொண்டு வந்து தன் கூட்டில் வைத்து குழவியானது தான் கொட்டுதல் போல் பாசாங்கு செய்வதால் அப்புழு குழவியின் உருவைப் பெறுவது போல் அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடக்கும் சிஷ்யனை தன்னிடம் குரு வைத்துக் கொண்டு அவனை ஞான நிலையை அடையச் செய்தவாகும்.

**4. மார்ஜார தந்திரம்**

பூனை தான் போட்ட குட்டிகள் சுயேச்சையாய் ஆகாரம் முதலியவற்றை செய்து சங்கரிக்கிற வரையில் அவற்றை தன் வாயால் கவ்வி பல இடங்களுக் குக் கொண்டு சென்று காப்பாற்றுவது போல் தனது சிஷ்யர்களுக்கு நல்ல பக்குவம் வரும் வரையில் குரு அவனை கண்காணித்துக் காப்பாற்றுதலாகும்.


**5. மர்க்கட தந்திரம்**

தன் குட்டிகள் வயிற்றைக் கட்டிக் கொண்டு இருப்பினும் குரங்கானது சிறிதுமே லட்சியம் இல்லாமல் தன்னிச்சைப்படி மரங்களில் தாவியும் தனக்குத் தோன்றிய காலத்தில் குட்டிகளுக்கு பால் கொடுத்து காப்பது போல் சிஷ்யன் எவ்வளவு தான் அனுகித் தொண்டு செய்தாலும் அவனை அலட்சியம் செய்வது போல் நடித்து பிறகு அவனுக்குப் பக்குவம் பார்த்து உபதேசம் செய்வதாகும்.

ஒரே குருவே இவ்விதம் பல தந்திரங்களையும் உபயோகித்து சிஷ்யனின் பக்குவபேதத்திற்குத் தக்கபடி உபதேசம் செய்யலாம்.

> **அன்பினால் செய்யப்படும்**
> **ஒவ்வொரு காரியமும் ஆனந்தத்தை**
> **கொண்டு வந்தே தீரும்.**
>
> *– சுவாமி விவேகானந்தர் –*

# விளையாட்டுத் துறையில்





# எமது கல்லூரி

*விளையாட்டுத்துறை
ஆசிரியர் குழு*

யாழ் மாவட்டத்தில் வலி கிழக்குப் பிரதேசத்தில் நிலைய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள எமது கல்லூரி விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகளைப் புரிந்து நூற்றாண்டுகளைக் கடந்து தலைநிமிர்ந்து நிற்கின்றது.

விளையாட்டுத் துறைக்குக் கலைத் திட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள முன்னுரிமை மாணவர்களின் உளஉடல் வளர்ச்சியை மேம்படுத்தி நாட்டிற்கு ஏற்ற நற் பிரசைகளை உருவாக்குவதை வலியுறுத்தி நிற்கிறது.

கல்வி வட்டாரத்திலும், வலய மட்டத்திலும், மாவட்ட ரீதியிலும், உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவும், வடகிழக்கு மாகாண மட்டத்திலும் அகில இலங்கை ரீதியாகவும் எமது பாடசாலை விளைாட்டுத் துறையில் பல வெற்றிகளைப் பெற்று தனிமுத்திரையைப் பதித்துள்ளது யாவரும் அறிந்த உண்மையாகும்.

மெய்வல்லுனர் போட்டிகள், உடற்பயிற்சிப் போட்டிகள், கரப்பந்தாட்டம், கால்ப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் போன்ற பல்வேறு போட்டிகளிலும் கல்லூரி மாணவர்கள் சாதனைகளைப் படைத்ததோடு பழைய மாணவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், உலகின் பல்வேறு பாகங்களிலும் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகின்றனர்.

கல்லூரியின் வரலாறு நூறு ஆண்டுகளைக் கடந்துள்ளபோதிலும் அதன் வளர்ச்சிப் பாதையில் பெற்றுக் கொண்ட விளையாட்டுச் சாதனைகளை வெளிக்காட்ட முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது. பாடசாலை இடப்பெயர்வுகளினால் ஆவணங்கள், கோவைகள் அழிந்துவிட்ட நிலையில் விளையாட்டுச் சாதனைகளை பட்டியல்படுத்திக் காட்ட முடியாமைக்கு வருந்துகின்றோம்.

**அன்மைக் காலத்தில் எமது பாடசாலை ஈட்டிய சாதனைகள் சில:-**

**உடற்பயிற்சிப் போட்டிகள்-**

| | | |
|---|---|---|
| 1993ஆம் ஆண்டு | :- | 16 வயது பெண்கள் 2ஆம் இடம் கோட்ட மட்டம் |
| | | 17 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம் |
| | | 19 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம் |
| | | 17 வயது ஆண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம் |

கல்லூரியின் சார்பில் கலந்து கொண்ட அணிகளில் மூன்று அணிகள் முதலாம் ஒரு அணி இரண்டாம் இடத்தையும் பெற்று வெற்றிப் பெருமிதம் அடைந்துள்ளது.

1994ஆம் ஆண்டு :- 15 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
17 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
19 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
17 வயது ஆண்கள் பாராட்டுப்பரிசு கோட்ட மட்டம்

17வயது பெண்கள் அணி மாவட்ட மட்டத்தில் 3ஆம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

1995ஆம் ஆண்டு :- 15 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
17 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
19 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
15 வயது ஆண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
17 வயது ஆண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்

1996 ஆண்டு இடப் பெயர்வின் பின்னர் உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெறவில்லை.

1997ஆம் ஆண்டு :- 15 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
17 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
19 வயது பெண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்
17 வயது ஆண்கள் 1ஆம் இடம் கோட்ட மட்டம்

1998ஆம் ஆண்டு :- பெண்கள் அணி 1ஆம் இடம் கோட்ட மட்டம்
ஆண்கள் அணி 1ஆம் இடம் கோட்ட மட்டம்

இவ்வருடம் போட்டிக்கு இரண்டு அணிகள் மட்டுமே பங்குபற்ற அனுமதிக்கப்பட்டது.

பெண்கள் வலயமட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றமை போற்றப்பட வேண்டியதே.

1998ஆம் ஆண்டில் 19வயது கரப்பந்தாட்டக்குழு கோட்ட மட்டப் போட்டியிலும், வலய மட்டப் போட்டியிலும் வெற்றிபெற்று யாழ் மாவட்டத்தில் சிறந்த குழுவாகத் தெரிவு செய்யப்பட்டதோடு வடக்குக்கிழக்கு மாகாணப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போக்குவரத்துச் சீர்குலைவினால் வடக்கு கிழக்கு மாகாணப் போட்டியில் பங்குபற்ற முடியாமை வேதனைக்குரியதாகும்.

வருடந்தோறும் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் ஆரம்பப்பிரிவு, மேற்பிரிவு எனத் தனித்தனியாக சாண்டேஸ், பிக்கனல், செல்லையா, சிங்கரத்தினம் என்ற இல்லங்களிடையேயும் நடைபெற்று வருகின்றது.

பாடசாலையோடு இணைந்த நிலையில் பொருத்தமான விளையாட்டு மைதானமோ உடற்பயிற்சித் துறையில் சிறப்புப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களோ இல்லாத நிலையிலும் எமது கல்லூரி மாணவர்கள் அண்மைக் காலத்தில் பல சாதனைகளை படைத்துள்ளனர். இதற்கு மாணவர்களின் கடுமையான பயிற்சியும், விளையாட்டுத்துறை ஆசிரியர் குழுவின் பொருத்தமான வழிகாட்டலும் உறுதுணையாக அமைந்தன.

கரப்பந்தாட்ட அணி~ 1998


1998 ம் ஆண்டு யாழ்மாவட்ட நிலையில் முதலாவது இடத்தைப்பெற்று வடக்குக் கிழக்கு மாகாணமட்டத்திலான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட 19 வயது ஆண்கள்



வலைப்பந்தாட்டக்குழு ~ 1999




செண்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அணி - 1999




சாரணர் குழு - 1999





நூற்றாண்டு விழாக் கொண்டாடி
ஒளி வீசிய கலைக்கூடம்
பல்லாயிரம் ஆண்டு வாழ்க !




அழகுசாதனப் பொருட்கள், T.V, டெக்,
உதிரிப்பாகங்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
மின்சார உபகரணங்கள்
போன்றவற்றை ஒரே இடத்தில்
பெற்றிடவும்









T.V, டெக், றேடியோ மற்றும்
மின்சார உபகரணங்களை
உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றிடவும்
நாடவும்

# ராஜன் எலக்ரோனிக்ஸ்
# & சுப்பர் கொம்பிளக்ஸ்

அத்துடன் பாடல் பதிவும், பற்றிச் சார்ஜ்சும்
செய்து கொடுக்கப்படும்.

பஸ்நிலையம்
அச்சுவேலி

பல கல்விமான்களை உருவாக்கி நூற்றாண்டு விழா காணும்
அச்சுவேலி மகா வித்தியாலயம்
மேலும் பல கல்விமான்களை உருவாக்க
மனதார வாழ்த்தி நிற்கிறோம்



நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்






உடல் நோய் தீர்க்கும்
மருந்துகள் எம்மிடம்
உளநோய் தீர்க்கும்
மருந்துகள் இறைவனிடம்

# சூரியா மருந்தகம்

பஸ்நிலையம்
அச்சுவேலி

கிளை1: ஆவரங்கால் சந்தி
அச்சுவேலி

கிளை2 : பிரதான வீதி
புத்தூர்

---

அச்சு தீபமாய் ஒளிர வாழ்த்தும்





# குருபரன் கல்வி நிறுவனம்

**புத்தூர்**

இயக்குனர்
திரு. நா. விஜயகுமார்

**பலர் மனதிலும் பதிந்து**
**பல் புகழ் ஓங்கி வளர**
**வாழ்த்துவோர்**

**இரண்டு ரூபாவுடன் இலங்கையின் எல்லாப் பாகத்திற்கும்**
**குறைந்த கட்டணத்தில்**
**தொடர்பு கொள்ள** Coin Box No. **2086, 2617**
**தங்குமிட வசதிகள்,** Fax, **போட்டோப் பிரதிகள்**
**நவீன தொழில்நுட்பக் கருவி மூலம்**
**உடனுக்குடன் தெளிவாக பதித்துக் கொடுக்க**
**நாடுங்கள்**

R.L **நவீன கருவி மூலம் உலகின் எல்லாப் பாகங்களிலும் இருக்கும்**
**உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன்**
**இன்ப வெள்ளத்தில் உல்லாச பவனிவர**
**நீங்கள் நாட வேண்டிய இடம்**



# ஸ்ரீ புவி தொலைத் தொடர்பு நிலையம்

அச்சுவேலி மகா வித்தியாலயத்திற்கு
அருகில்
இராச வீதி, அச்சுவேலி
T.P. 070 - 212342
T.P. 070 - 212391
Fax. 070 - 212342



148, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

T.P. 2059
T.P. 2535


**கொஞ்சம் நில்லுங்கள்**
**குறை இருப்பின் எம்மிடம் கூறுங்கள்**
**நிறைவிருப்பின் பிறரிடம் கூறுங்கள்**

சமூகத்தின் வெட்டுமுகமாக

நின்று தழைத்தோங்க

எனது நல்வாழ்த்துக்கள்

திரு. க. செல்வரத்தினம் J.P
ஆஸ்பத்திரி வீதி,
தோப்பு
அச்சுவேலி



வளர்க என வாழ்த்தி நிற்கும்



# தயா நகைப் பூங்கா


## (தங்க வைர நகை வியாபாரம்)

எழில் குன்றா அழகிய தங்கப் பவுண் நகைகளை
ஓடர் கொடுத்துச் செய்து பெற்றிடலாம்

22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

213, C கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர் :
செல்வரட்ணம் தயானந்தன்



நூற்றாண்டு விழா காணும்

அச்சுவேலி


மகா வித்தியாலயத்தை

மனதார வாழ்த்தும்


***அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை***
***வைத்தியர்கள், ஊழியர்கள்***

---

**கல்வியில் சிறந்தோங்க வாழ்த்துகின்றோம்**




**சைக்கிள், மோட்டார் சைக்கிள்,**
**நீர் இறைக்கும் இயந்திரம்**
**போன்றவற்றின் உதிரிப்பாகங்களை**
**நிதான விலையில்**
**பெற்றுக் கொள்ள நாடுங்கள்**



# தங்காஸ் ரேடிங்

பஸ் நிலையம் அச்சுவேலி

அச்சுவேலி
மகா வித்தியாலயத்தின்
பணி தொடர
எமது நல் வாழ்த்துக்கள்




தரமான அரிசி, பல சரக்கு,
பால்மா வகைகள்,
அலுமினியப் பாத்திரங்கள்,
பிளாஸ்ரிக் சாமான்கள்,
பிஸ்கெட் வகைகள்
யாவும் பெற்றுக் கொள்ளலாம்.



கோழித்தீன் வகைகளும் இங்கே கிடைக்கும்.

# கண்டி ஸ்ரோர்ஸ்

**அத்துடன்**
**தொலைத் தொடர்பு சேவையையும்**
**பெற்றுக் கொள்ளலாம்**


☎ 070-212534

அச்சுவேலி

**மேலும் நூற்றாண்டு வாழ எம் மனமார்ந்த வாழ்த்துக்கள்**







சகல விதமான பலசரக்குப் பொருட்களையும்
பாண், பணிஸ், பிஸ்கற், கேக் வகைகளையும்
மற்றும் ஐசிங் செய்து பெற்றிடவும்
குறைந்த விலையில்
நிறைந்த பொருட்களைப் பெற்றிடவும்
இன்றே நாடுங்கள்


# கல்பனா ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்
வே. சிறிகுமார்

பஸ் நிலைய வீதி அச்சுவேலி

---

**ஒளி மயமாய் அறிவுப் பசி தீர்க்க வேண்டுமென வாழ்த்தும்**



புடைவை, சில்லறை சாமான்,
அழகு சாதனப் பொருட்கள்
யாவற்றையும் மலிவான விலையில் தரமாகப்
பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

# அம்பாள் புடைவை அகம்

*யாழ். பருத்தித்துறை வீதி,* **புத்தூர்**

நூற்றாண்டு விழாக் காணும் கல்விக் களஞ்சியம்
அச்சுவேலி மகா வித்தியாலயம்
மேன்மேலும் வளர்ச்சியடைந்து
பல நூற்றாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.




அச்சுவேலி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)


அச்சுவேலியில் பனம்பொருள் உற்பத்திப் பொருட்களை
மலிவான விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரேயொரு இடம்



# கற்பகம் விற்பனை நிலையம்

பஸ் நிலையம் அச்சுவேலி

மேலதிக தொடர்புகளுக்கு
பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
தலைமைக் காரியாலயம்
பருத்தித்துறை வீதி
அச்சுவேலி



# மக்கள் வங்கி


**உங்கள் வாழ்நாள் முழுவதும் நிழல் போல் உங்களைத் தொடர்ந்து வரும் மக்கள் வங்கி**

**மக்கள் சேவையில் 36 ஆண்டுகளைத் தாண்டி விட்டது!**


- **60 இலட்சம் வாடிக்கையாளர்கள்**
- **400 இற்கு மேற்பட்ட கிளைகள்**

**இந்த உன்னத நம்பிக்கைப் பிணைப்பில் நீங்களும் சேருங்கள்**

வங்கியின் வழமையான **சேவையுடன்**



- பாடசாலை மாணவருக்கான விசேட சேமிப்புத் திட்டம் .
  " **மாணவர் மலர்ச்சி** "
- மகளீருக்கான திட்டம்
  " **மகளீர் அதிஸ்டக் கணக்கு** "
- ஆசிரியர்களுக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம்
  " **குருசேத** "
- சுகாதார சேவையிலுள்ள தாதியருக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம்
  " **சுவசெவண** "



- தொழில் அற்றோர் சுயதொழில் தொடங்குவதற்கு திட்டம்
  " **சுய தொழில் ஊக்குவிப்புக் கடன்** "
- முதியோருக்கான திட்டம்
  " **முதிய பிரஜைகள் யாத்திரைக் கணக்கு** "
- வருடந்தோறும் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிஸ்டலாபப் பரிசு வழங்கும் திட்டம்

**இன்னும் பலப் பல திட்டங்கள் !!**
**அனைத்தும் உங்கள் வளர்ச்சிக்கே !!**

**வாடிக்கையாளராகி நலம் பெறுவீர் !!!**

## மக்கள் மனமறிந்த வங்கி
## மக்கள் வங்கி

பிரதேச தலைமை அலுவலகம்
யாழ்ப்பாணம்

## வாழ்த்துகிறோம்



# சிவ கணேசன் ஸ்ரோர்ஸ்

41, கிறான் பஜார் யாழ்ப்பாணம்

## எமது வாழ்த்துக்கள்

தரமான வீட்டுப் பாவனைக்கு சில்வர், அலுமினியம், பிளாஸ்ரிக் பொருட்களும் கோவில் உபகரணங்க ளான திருவாசி குத்துவிளக்கு, விக்கிரகம், மணி கள் ஓடருக்கும்

கண்ணாடிகள், படங்கள், அன்பளிப்புப் பொருட்கள், கோவில் அபிஷேகம், கிரியை விழாக் களுக்கான பொருட்களும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# ஈஸ்வரன் வர்த்தக நிலையம்



பிரதான வீதி
அச்சுவேலி

## எமது நல் வாழ்த்துக்கள்

மரத்தளபாடம், கண்ணாடிப் படங்கள், பூட்டுக்கள், ஆயுதவகைகள், படம் பிறேம் போடுதல்

போன்றவற்றிற்கு
நாட வேண்டிய இடம்

# சசிகுமார் வர்த்தக நிலையம்






பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி
பாடசாலைக்கு அருகாமை

அச்சுவேலி மகா வித்தியாலயம்
மேலும் பல நூற்றாண்டுகள் சிறப்புற்று
வளர வாழ்த்துகிறேன்

# முகுந்தன் வைத்தியசாலை

## அச்சுவேலி



Dr. V. பால கிருஷ்ணன்

# எங்கள் வீட்டுப் பூனை




எங்கள் வீட்டுப் பூனையார்
எங்கிருந்தோ வந்தவர்
கறுப்பு நிறப் பூனையார்
கண்கள் முளிப் பூனையார்

பானை சட்டி தட்டியே
பாலைக் குடிக்கப் பார்க்கிறார்
பாய்ந்து பரனில் ஏறியே
பாலை நக்கிச் சுவைக்கிறார்

நல்ல நல்ல பூனையார்
நான் வளர்க்கும் பூனையார்
நான்கு குட்டி போட்டுமே
நல்லாய் வாழ்ந்து வருகிறார்

*செல்வி. செல்வநாதன் மேனகா*
*தரம்* 1B

# எங்கள் ரீச்சர்




பாட்டுப் பாடி நடித்துக்காட்டி
படிக்கச் சொல்லும் ரீச்சர்
கூட்டம் கூட்டிக் கதைகள் சொல்லி
கொஞ்சிப் பேசும் ரீச்சர்

எண்ணிக் காட்டிப் பொருட்கள் தொகைக்கு
இலக்கம் எழுதச் செய்வார்
கண்ணைப் போல எம்மை என்றும்
காத்து அன்பு செய்வார்

எழுத்துக் கூட்டிச் சொற்கள் ஆக்கி
எழுதிக் காட்டும் ரீச்சர்
வழுக்கும் வண்ணப் படங்கள் தந்து
வழிப்படுத்தும் ரீச்சர்

*செல்வி. சிவரத்தினம் சுஜிபனா*
*தரம்* 1A




# எனது செல்லப் பிராணி

எனது செல்லப் பிராணி நாய்க்குட்டி அதன் பெயர் ஜிம்மி. ஜிம்மியின் நிறம் வெள்ளையும் கறுப்பும் ஆகும். ஜிம்மிக்குப் பிடித்த உணவு இறைச்சி ஆகும். மாலையில் பாடசாலையால் வந்து நானும் ஜிம்மியும் விளையாடுவோம். நான் பாடசாலை விட்டு வீடு வரும்போது ஜிம்மி என்னைக் கண்டவுடன் துள்ளிக் குதிக்கும். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நான் ஜிம்மிக்குக் குளிக்க வார்ப்பேன். வீட்டுக்காரர் தவிர்ந்த வேறு யாராவது வீட்டுக்கு வந்தால் இது வள்வள் என்று குரைக்கும். என்னுடைய செல்லப் பிராணியான ஜிம்மி எலியைக் கண்டால் துள்ளிச் சென்று பிடித்துக் கொன்றுவிடும். ஜிம்மி நன்றி உள்ள மிருகம்.

*செல்வி. ந. சிந்தனா*
*தரம் 02*

# கல்வி தனைப் போற்றுவோம்



கல்வி தனைப் போற்றுவோம்
கருத்தில் ஏற்றிக் கொள்ளுவோம்
நல்லறிவைத் தேடவே
நாடிக்கல்வி கற்றிடுவோம்!

கலைகளோடு கைத்தொழிலும்
கவின் நிறைந்த தொழில்களும்
கட கட என வளருதே
கல்வியினால் விளைந்ததன்றோ!

விண்வெளியில் சஞ்சரித்து விதம் விதமாய்
அறிவு பெற்றோம்
எண்ணினோமோ! இதனை முன்பு
கல்வியினால் வந்ததன்றோ!

கல்லுதலார் கல்வி என்பார்
கல்லுகிறோம் இயற்கை தனை
எல்லையிலா விந்தை கண்டோம்
சொல்ல வார்த்தை ஏது

வள்ளுவரும் இளங்கோவும் வகுத்தவழி
நல்ல கல்வி கற்றிடுவோம்
தோழர்களே வாரீர் – என்றும்
நாடிக் கல்வி கற்றிடுவோம்



*பா. அங்குசன்*
*தரம் 3A*



உடற்பயிற்சிக்குழு - 1998
கோப்பாய்க் கல்விக்கோட்ட மட்டத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் (ஆண்கள் அணி) 1வது இடத்தைப்பெற்றது



உடற்பயிற்சிக்குழு - 1998
கோப்பாய்க் கல்விக்கோட்ட மட்டத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் (பெண்கள் அணி) 1வது இடத்தையும் வலயமட்டத்திலான போட்டியில் 3வது இடத்தையும் பெற்றது.

# முயற்சி




பாலன், சீலன் இருவரும் வகுப்பறை நண்பர்கள். பாலன் நன்கு படிக்கக் கூடியவன். சீலன் படிப்பில் குறைந்தவன். பாலன் மிகவும் ஏழை, ஆனால் சீலனோ பணக்கார வீட்டுப் பையன். அன்று திங்கட்கிழமை வழக்கம் போல பாடசாலை முடியும் மணி அடித்தது. பாலன் வேகமாகச் செயற்பட்டான். பாடசாலை விட்டதும் சீலனிடம் விடைபெற்றுக்கொண்டு வேகமாக வெளியேறி வீதி வழியாக ஓட்டமும் நடையுமாக சென்றான். இதனைத் தினமும் அவதானித்து வந்த சீலன் ஏன் பாலன் தினமும் பாடசாலை விட்டதும் வேகமாகச் செல்கிறானே என எண்ணியவாறு அவன் செல்லும் திசையை நோக்கி தானும் சென்றான்.

வேகமாகச் சென்ற பாலன் ஒரு கடையின் திண்ணை ஓரத்திலே தனது பாடசாலை புத்தப்பையை வைத்துவிட்டுக் கடையின் மறைவிலே சென்று தனது பாடசாலை உடையையும் மாற்றி ஒரு கிழிந்த சேட்டும் அழுக்குப்படிந்த காற்சட்டையும் அணிந்து கொண்டு வந்து, ஒரு சிறிய திண்ணையிலே இருந்து பல சப்பாத்துக்களை (காலணி) எடுத்து வெளியிலே வைத்தான். பின் ஒரு சப்பாத்தை எடுத்துத் தைக்கத் தொடங்கினான். இவற்றை மறைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சீலன் நேராகப் பாலனிடம் வந்தான். சீலனைக் கண்ட பாலன் அவனை சிரிப்புடன் வரவேற்றான். சீலனோ என்னடா பாலா? நீ இந்தத் தொழிலா செய்கின்றாய்? எனக் கேட்டான். பின் இப்படித் தொழிலும் செய்து கொண்டு எப்படி படிப்பிலும் முதல் மாணவனாக இருக்கின்றாயே என்று கேட்டான். இதற்கு பாலன் எல்லாமே "முயற்சி" தாண்டா காரணம், "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்ற பொன் மொழிக்கு அமைய நானும் முயற்சி செய்து கஸ்டப்பட்டு உழைக்கின்றேன். இரவு நேரம்தான் நன்றாகப் படிக்கின்றேன். இதனால் முதலாம் மாணவனாக வரமுடிகின்றது என்றான். இதனைக் கேட்ட சீலன் பாலனைப் பாராட்டினான். தனது நிலையை எண்ணி வெட்கப்பட்டான். நானும் இனி மேல் உன்னைப் போலவே வாழ்வேன் என்ற கூறி பாலனுக்குரிய படிப்புச் செலவையும் அன்று தொடக்கம் தானே பொறுப்பேற்றுக் கொண்டான். பாலன் மிகுந்த நன்றியைத் தெரிவித்துச் சீலனை கட்டி அணைத்துக் கொண்டான்.

*செல்வன். பா. பிரதீபன்*
*தரம்* 04

# வெடிப் பொருட்களின் அபாயம்



மனித சமூகம் 20ம் நூற்றாண்டுக்கு விடை கொடுத்துப் புதிய நூற்றாண்டை நோக்கி வீறு நடை போடும் இக்காலத்தில் இன்றைய விஞ்ஞான வளர்ச்சிகள் அறிவின் உச்சக்கட்டமேயாம். மாண்புறும் மனித இனம், கொம்பியூட்டர், பக்ஸ் இன்ரநெற் றோபோ என எத்தனையோ வியத்தகு சாதனங்கள் மூலம் இன்றைய நாகரீக உலகைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது.

வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைகாட்டி, கப்பல், விமானம், புகைவண்டி எனச் சிறியரக சாதனங்கள் முதல் பெரிய ரக சாதனங்கள் வரை உற்பத்தி செய்வதன் மூலம் மனித இனம் தனது சமூகத்தின் தேவைகளை இலகுவாக்க வழிகண்டுள்ளது. நவீன விஞ்ஞானத்தின் சிந்தனைகளால்தான் இப்பெரும் நிகழ்வுகள் ஏற்பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது.

மனிதன் தன் விஞ்ஞான அறிவைக்கொண்டு தான் வாழும் பூமிப் பந்தையோ, பூமியின் மேற்பரப்பையோ மட்டும் ஆய்வு செய்வதோடு நின்று விடவில்லை. பாதாள உலக ஆராய்ச்சிகள் மூலம் கனிய வளங்களையும் கண்டுகொண்டான். அறிவுப் பசிக்கு உணவு தேடி விண்வெளிப் பயணத்தைத் தொடர்ந்தான். விண்வெளி ஆராய்ச்சியின் பயனாக இன்று சந்திரன், செவ்வாய் போன்ற கோள்களில் கால் பதித்து நடந்து செல்கின்றான்.

தேவைகள் கூடிச்செல்ல அவற்றை இலகுவாக்கும் வழிவகைகளையும் கண்டுபிடிக்க வேண்டிய தேவையும் மனிதனுக்கு ஏற்பட்டது. அதன் விளைவாக ஆய்வுப் பாதையில் செல்லும் மனிதன் தான் செல்லும் பாதையில் ஏற்படும் தடைகளை உடைத்தெறிய துடித்தான். அதற்கு வழியும் கண்டுகொண்டான். அளப்பெரும் சாதனைகளைப் படைத்து நிமிர்ந்து நின்று விடைபெறும் 20ம் நூற்றாண்டிற்கு கையசைக்கின்றான்.

இந்த நூற்றாண்டின் அரிய கண்டுபிடிப்புக்களும் வளர்ச்சிகளும் மனித அறிவின் ஏணிப்படிகளே. இன்று உலகின் மூலைமுடுக்கெல்லாம் பேசப்படும் வெடிபொருட்களும் சிந்தனையாளர்களின் கண்டுபிடிப்புக்களே.

ஆக்கத் தேவைகளுக்கென மனிதன் தேடித் தேடிக் கண்டு பிடித்தவற்றுள் இன்று முழுமனித சமூகத்தையும் அச்சுறுத்துகின்றதும், அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்வதும் வெடிப்பொருட்கள்தான் என்றால் மிகையாகாது. அறிவில் முதிர்ந்த சமூகத்திலே போட்டி, அதிகாரம், மேலாதிக்கப் போக்கு என்பன தலைவிரித்தாடுகின்றது. இவற்றைவிட மதச் சண்டை, மொழிச் சண்டை, எல்லைச் சண்டை என ஒவ்வொரு நாட்டிலும்

சண்டைகள் நடந்த வண்ணமே இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக வெடிப் பொருட்களின் பாதிப்பு உலகில் பெருந்தொல்லையாகி விட்டது.

எயிட்ஸ், போதைவஸ்து போன்ற மனித குலத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் பொருட்களின் வரிசையில் வெடிப்பொருட் களும் அடங்குவதனாலேயே வெடிப்பொருட்கள் பற்றி மனித இனம் விழிப் புறவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வெடிப் பொருட்களின் பிடியில் இருந்து தப்ப வழி வேண்டும். மிகவும் வேகமாகப் பூமியில் வாழும் மனித உயிர்கள், விலங்குகள், பறவைகள் என எந்த வேறுபாடுமின்றி அழிக்க வல்ல வெடிப்பொருட்கள் உயிர் கொல்லி மட்டுமல்ல, ஊமையாக்கி, முட மாக்கியும்கூட அதனுடன் சிந்தை கலங்கி, புலன்களின் செயற்பாடுகளைக் கூட சீரழிக்கக் கூடியவை. ஆகையால் வெடிப்பொருட்களும் அவற்றின் விளைவுகளும் பற்றிப் பாடசாலை மாணவர் மட்டுமன்றி இளைஞர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள் என அனைத்து மக்களும் அறிந்திருக்க வேண்டும். அதனாலேயே இந்த வெடிப்பொருட்கள் பற்றிய சகல விபரங் களும் ஆசிரியர்கள், அதிபர்கள் மூலம் அனைத்து மக்களுக்கும் எடுத்துச் செல்ல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"அங்கே கண்முன்னே தெரியும் ஒரு காட்சி கால், கை இழந்து எம் மைந்தர் தவிக்கின்றார் பாரீரோ" என்று ஒரு தாயானவள் புலம்புகின்றாள். எதனால் இது. வெடிப் பொருட்களின் பாதிப்பினால் ஏற்பட்டதேயாகும். நம் யாழ் குடா நாட்டில் கண் இழந்தோர், ஓடித்திரியும் கால் இழந்தோர், எழுதிப் படிக்கும் கையிழந்தோர், பேசித்திரியும் நா இழந்தோர் என வெடி குண்டின் கொடுமையைப் பட்டியலிடலாம். வெடிகுண்டினால் எத்த னையோ சிறார்கள் தாய், தந்தையை இழந்தும், கணவன் மனைவியை இழந்தும், மனைவி கணவனை இழந்தும் உறவுகளை இழந்த மனிதர் களுமென சமூகத்தின் ஆணி வேரையே இது ஆட்டிவிட்டது.

நெல், கிழங்கு, அவரையென உணவுப் பொருட்கள் விளைய வேண்டிய பூமியின் மேற்பரப்பில் கண்ணிவெடி, பொறிவெடி, மிதிவெடி எனப் பல வெடி பொருட்கள் விதைக்கப்பட்டுள்ளன. இவற்றின் பயன் பாட்டுக் காலம் நீண்டதாகும். இவற்றைவிட கைக்குண்டு துப்பாக்கி ரவை, ஷெல் குண்டு, பீரங்கிக் குண்டு, ஏவுகணை, அணு என எங்கும் எதிலும் வெடிப் பொருட்களே மலிந்துள்ளன. வெடிப் பொருட்களின் அபாயத்திலிருந்து மனித சமூகம் காக்கப்படவேண்டுமானால் எல்லோரும் இதன் அபாயம் பற்றிய அறிவுடன் வாழ வேண்டும்.

தீயவினைகளோடு, அழிவுகளையும் விட்டுச்செல்லும் இந்த நூற் றாண்டுடன் மனித அழிவுப் பொருட்களையும் அகற்றுவோமாக. கத்தி யின்றி இரத்தமின்றி புதிய உலகம் படைப்போமாக. அன்பு, சாந்தி, சமா தானம் நிறைந்த ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் பாங்குடன் நிம்மதி நிறைந்த புதிய உலகம், புதிய நூற்றாண்டில் ஆரம்பமாக இறை வன் அருள் புரிவாராக.

*செல்வி.இ.சஸ்மிதா - தரம்* 05

**கோட்டமட்டத்தில் பரிசு பெற்ற கட்டுரை**

# எமது கிராமம்

எமது கிராமம் அச்சுவேலி. பெயருக்கு ஏற்ப அழகு வாய்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பிரதான வீதி எமது கிராமத்தை ஊடறுத்து உச்சி வகிந்தாற்போல் செல்கின்றது. பிரதான வீதியின் பதினெட்டாவது கிலோமீற்றரில் அமைந்துள்ள எமது கிராமத்தின் வடக்கு எல்லையாக தொண்டமானாறும், கிழக்கு எல்லை யாக வல்லைப் பரவைக்கடலும், தெற்கு எல்லையாக ஆவரங்கால் புத்தூர் கிராமங்களும், மேற்கு எல்லையாக வசாவிளான் கிராமமும் பலாலி இராணுவ முகாமும் அமைந்துள்ளன.

எமது கிராமத்தில் எனது பாடசாலையாகிய அச்சுவேலி மகா வித்தி யாலயம் மூலதாரப் பாடசாலையாக விளங்க அதனைச்சூழப் பத்துப் பாட சாலைகள் அமைந்துள்ளன. சைவ, கிறிஸ்தவ கத்தோலிக்க சமயத்தினர் மிக அன்னியோன்யமாக வாழ்ந்துவரும் எமது கிராமத்தில் சைவர்கள் பெரும் பான்மையினராக வாழ்கின்றனர். மக்களின் வழிபாட்டிடங்களாக பதினாறிற்கு மேற்பட்ட சைவ ஆலயங்களும் இரண்டு கத்தோலிக்க தேவாலயமும், ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் விளங்குகின்றன.

நீர் வளமும், நில வளமும் நிறைந்த அச்சுவேலிக் கிராமத்தில் விவசாயம், கைத்தொழில்கள், வர்த்தக நிலையங்கள், குடிசைக் கைத் தொழில்கள் உட்பட பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்றன. எமது கிராமத்தில் பொதுச்சந்தை, பஸ்நிலையம் என்பன அமைந்திருப்பதோடு நகராக்கத்திற்குரிய அமைப்புக்களோடு வளர்ந்து வருகின்றது. அச்சுவேலி யிலிருந்து தொண்டமானாறு வீதி, பருத்தித்துறை வீதி, சங்கானை வீதி, இராசவீதி, யாழ்ப்பாண வீதி என ஐந்து வீதிகள் கிளைவிட்டுச் செல்கின்றன.

வாழை, திராட்சை, வெற்றிலை, உருளைக்கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு, வெங்காயம், தக்காளி, மிளகாய், மரவள்ளி உள்ளிட்ட பல்வேறு உணவுப் பயிர்களும் தானிய வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அச்சுவேலிக் கிராமத்தில் சிறப்பாக இயங்கிவந்த கைத்தொழில் பேட்டையும், செல்வநாயக புரம் குடியேற்றத்திட்டமும் இராணுவ நட வடிக்கைகளால் முற்றாகச் சீரழிந்து சிதைவடைந்து உள்ளன. சீரோடும் சிறப்போடும் விளங்கிய எமது கிராமம் அண்மைக்கால இடப்பெயர்வுகளி னால் பாதிப்பு அடைந்தாலும்கூட மீண்டும் புதுமெருகு பெற்றுப் பழைய நிலைக்குத் திரும்பி வருகிறது.

வாழ்க எமது கிராமம்

வளர்க எமது கல்லூரி

*செல்வி. அ. வினிதிகா - தரம் 06*

# எங்கள் பாடசாலை

எமது கல்விக் கண்களைத் திறப்பது பாட்சாலையே ஆகும். பாட சாலைகள் இல்லாத ஊர் பாழடைந்த ஊரே. பாடசாலைகள் ஊருக்கு அழகு சேர்ப்பன இதனாலன்றோ புதுமைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் “வீடுகள் தோறும் கலைகளின் விளக்கம் வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி” என்று பாடியுள்ளார். அதற்கொப்பவே எமது பாட சாலையும் ஊர் நடுவே அமைந்து ஊருக்குப் பெருமை சேர்க்கின்றது. எமது பாடசாலையின் பெயர் அச்சுவேலி மகாவித்தியாலயம் ஆகும். இப் பாடசாலை எமது கிராம மக்கள் அனைவரது நெஞ்சங்களிலும் இடம் பிடித்துள்ள ஒரு பாடசாலை ஆகும்.


எமது பாடசாலை நூற்றாண்டுப் பழமை வாய்ந்தது. இங்கு ஆயிரத் துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். எமது பாடசாலை யின் இன்றைய அதிபர் திருமதி ச.கனகராசா. உப அதிபர் திரு க.ஸ்ரீஸ் கந்தராசா. எமது பாடசாலை தரம் ஒன்று தொடக்கம் தரம் பதின்மூன்று வரை வகுப்புக்களைக் கொண்ட ஒரு கலவன் பாடசாலை ஆகும். இங்கே சிறந்த ஆளுமையும் ஆற்றலும் உடைய நாற்பது ஆசிரியர்கள் கல்வி புகட்டுகிறார்கள். அதனால் எமது பாடசாலை சிறந்த கல்விமான் களையும், தொழில்விற்பனர்களையும் சமூகத்திற்கு உருவாக்கித்தந்த பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

எமது பாடசாலை கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகளைப் படைத்துப் புகழுடன் திகழ்கின்றது. கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் 1998ம் ஆண்டில் பாடசாலையில் சகல திருத்தங்களும் செய்யப்பட்டு புதிய பாடசாலையாக இன்று காட்சி தருகின்றது. வகுப்பறைகள், நூலகம், ஆய்வுகூடங்கள், பல்வேறு கட்டி டங்கள் என்பன பாடசாலைக்கு அழகைத் தருகின்றன. இங்கு பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், சமய விழாக்கள் ஆகிய நிகழ்வுகள் உரிய காலத்தில் நடைபெறுகின்றன.


எமது பாடசாலையின் கல்வித்தரம் ஆண்டுதோறும் கூடிச்செல் கின்றது. இடப்பெயர்வின் பின்னும் புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் எமது பாட சாலை மாணவர்கள் சாதனை படைத்து வருகின்றனர். விளையாட்டுக் களிலும் கூட எமது பாடசாலையின் சிறப்பு மகத்தானது. பழம் பெரும் பாரம்பரியங்களைக் கொண்ட எமது பாடசாலை எமது கிராமத்தின் சொத்தாகும். இது மென்மேலும் வளர்ந்து சமூகத்தில் நல்மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றது.

*செல்வி. க. கோகிலா - தரம் 07*

**நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இக் கல்லூரி**
**மென்மேலும் வளர்ச்சி பெற**
**எனது வாழ்த்துக்கள்**



பத்திரிகை முகவர்



பாடசாலை உபகரணங்கள் மற்றும்
பல்பொருள் விற்பனையாளர்

# ஸ்ரீ நாகபூசனி அம்மன் பல்பொருள் அங்காடி

சந்தையடி ஆவரங்கால்

---



திருமணம் மற்றும் முகூர்த்தப்
பட்டுப் புடைவைகள் சேட்டிங் – சூட்டிங்
என்பவற்றை உங்கள் எண்ணம் போல்
எண்ணற்ற ரகங்களில் தெரிவு செய்திட
இன்றே விஜயம் செய்யுங்கள்




# இளவரசி ரெக்ஸ்ரைல்

**நம்பிக்கை**
**நயம் நாணயம்**

57, நவீன சந்தை யாழ்ப்பாணம்

**With Best Compliments**
**From**




# BOSECO



Manufacturer of Exercise Books,

School Practical Books, Account Books,





Letter Pads, Autograph and Distributors

of Stationeries & Printers



3, Modern Market,
Hospital Road,
Jaffna.

252, Point Pedro Road
Nallur
Jaffna

M.S. Chandraboas
**Managing Director**

வாழ்த்தி நிற்கும்



ஐங்கரன் புடவை வியாபாரம்

உரிமையாளர்
கி. ஐங்கரன்

சந்தை உட்புறம்
அச்சுவேலி


நல்வாழ்த்து கூறும்



அசோகா
நகையகம்

இல 275, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

நல்வாழ்த்துக்கள்



மீண்டும் மீண்டும்
செல்லத் தூண்டும்
காண்போர் மயங்கும்
காட்சிக் கூடம்

சிறீ நதியா நகைமாடம்


2 G ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

*கிளை :*
56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வளர வாழ்த்தும்

சகல விதமான சாமான்களும்,
அபிசேக சாமான், பழ வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்

நிசாந்தினி
விற்பனை நிலையம்




நவீன சந்தை
அச்சுவேலி


உரிமையாளர்
சீ. சிவம்

நூற்றாண்டு கண்டு நிற்கும்

மகாவித்தியாலயத்தை

மனமார வாழ்த்துகிறோம்





அச்சுவேலியில்

பலசரக்குச் சாமான்கள்

எண்ணெய் வகைகள்


கேக் வகைகள்

சோடா வகைகள்



மற்றும் வெற்றிலை, புகையிலை ஆகியன மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

# நிக்ஷன் பல்பொருள் வாணிபம்.



பஸ்நிலையம் அச்சுவேலி


## மலர் சிறக்க
## வாழ்த்துகிறோம்

திருமணம் மற்றும் முகூர்த்தப் பட்டுப் புடைவைகள்,
உள்நாட்டு வெளிநாட்டு சாறி வகைகள்,
பிளவுஸ் துணிகள், பஞ்சாபி சூட்,
ஸ்கேட் அன் பிளவுஸ்





சிறுவர்களுக்கான துணி வகைகள், மற்றும்
ஆடவர்களுக்கேற்ற சேட்டிங் ~ சூட்டிங்
என்பவற்றை உங்கள் எண்ணம் போல்
எண்ணற்ற ரகங்களில் தெரிவு செய்திட
நாடவேண்டிய இடம்




# ராகம்ஸ் பட்டுச் சோலை

இல 24, நவீன சந்தை
யாழ்ப்பாணம்


## வலி - கிழக்கு வட பகுதி
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## அச்சுவேலி

### எமது சங்கம் வாடிக்கையாளர்கட்கும், அங்கத்தவருக்கும் ஆற்றிவரும் சேவைகள்




- நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனை
- ஒப்பந்த சேவைகள்
- உலர் உணவுப் பொருட்கள் விநியோகம்
- கல்விச் சேவைகள்
- புடைவை வகைகள்
- வங்கிச் சேவைகள்
- உரம் கிருமிநாசினி விநியோகம்





- வாடகைக் கதிரைகள் சேவைகள்
- கோழித்தீன் வகை விநியோகம்
- மகளிர் மனைப்பொருளியல் சேவைகள்
- எரிபொருள் விநியோகம்
- மருந்தக சேவைகள்
- கட்டிடப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் விநியோகம்
- தொலைத் தொடர்பு சேவைகள்



**மேற்படி தரமான பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் எமது நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்**


**வலி கிழக்கு (வ.ப) ப.நோ.கூ. சங்கம்**
**அச்சுவேலி**

**With Best Compliments**

**From**

# PRABAA PHARMACY

## MULTI SHOP COMPLEX




315 (57) Stanley Road,
Jaffna

# THE USE OF NEWS PAPERS



Now a days in the fast moving world news papers are considered important communicative media. Though every country has its own news papers and magazines are imported. The news paper reading habbit is increasing rapidly. It is true the most of the people are unable to have a television and radio so they are reading news papers.

The uses of the news papers are excellent. It gives us many information we get foreign and local news. It expresses opinions and feelings. It gives us warning and instructions.

Also news papers have children pages which carry a lot of information regarding education. Businessmen, politicians and many others get benefits though news papers.

T. Karthikajany
Year 8 A

Schools must be places where the mind is enriched by the right visions and where the ends of life are learned

*- Sir Richard Livingstone -*

# கலங்கரை விளக்கே நீ வாழ்க!

அமெரிக்க மிசனறியின் அருந்தவச் செயலாலே
அச்சுவேலிப் பதியினில் அழகுறவே அமைந்திருந்து
கல்விப் பணிபுரியும் கலங்கரை விளக்கே
கரையிலா உன் கல்விப்பணி வாழ்க.

கல்வியின்றி கறைபடிந்து கலையிழந்த காலமதில்
காத்திரமாய் கால் ஊன்றி காதலோடு
கலை வளர்த்த வல்லாளர் வழிவந்த
கல்வித்தாய் நிலைத்திருந்து நீடு நீ வாழ்க.

அகிலமெல்லாம் ஒளி பரப்பும் ஆதவன் கதிர்போல்
அச்சுவேலியின் இருள் அகற்றி ஒளிபரப்பி
அரவணைக்கும் அன்னை அன்புடனே
அணைத்தோர்க்கு வழிகாட்டி நீடு வாழ்க.

கரையிலாக் கல்விதனை நிதமூட்டி
கலைவிளக்காய் ஒளிபரப்பும் நித்திலமாய்
கண் திறந்து வழிகாட்டி வளர்ந்துவரும்
கலங்கரை விளக்கே நீடு நீ நின்று வாழ்க.

*இராமச்சந்திரன் கங்கைஅமரன்*
*தரம் 9A*

**கல்வி ஒருவனை நல்ல மனிதப்**

**பண்புடையவனாகவும், நற்குடிமகனாகவும்**

**ஆக்கவேண்டும்.**

*- ரூசோ -*

# இராமாயணத்தில் பரதனின் மனநிலை

இராமாயணத்தில் வரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றுமே கம்பன் எமக்கு எடுத்துத்தந்த நன்முத்துக்களே. ஒப்புயர்வற்ற இக் காவியத்திற்கு இராமன் நாயகனாக .திக்ழலாம். ஆனால் இராமயண நிகழ்வுகளின் துன்ப துயரங்களை தாங்கி சகித்துக் கொண்டவன் என்ற வகையில் இராமனுக்கு இணையாக பரதனும் போற்றப்பட வேண்டிய ஒருவனே. பரதனின் ஒவ்வோர் குணாம்சங்களையும் அலசி ஆராய இச்சிறு கட்டுரை இடம் தராது எனினும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற வகையில் கம்பராமாயண திருவடி சூட்டுப்படலத்தை ஆதார மாகக்கொண்டு ஒரு சில விடயங்களை நோக்குவோம்.

கம்பன் காட்டிய வீரசிகர வெண்முத்தான இராமன் கதை அறியா மாந்தர் உண்டோ? இல்லை. இராமன் காடு செல்ல பரதன் பட்டதுயர் சொல்லுந்தரமன்று. அண்ணன் காடு சென்றதை அறிந்த அக்கணமே முடித்த வார் சடையோடு முனிவர் தூசுடுத்து அண்ணனை அழைத்துவரப் புறப்பட்டுவிட்டான்.

"மறையின் கேள்வதற்கு மன்னினற் தோன்றல் பின்
முறையி னீங்கி முதுநிலங் கொள்கிலே
னிறைவன் கொண்டில னாமெனின் யாண்டெலா
முறைவென் கானத் தொருங்குடனே"

எனச் சபதம் பூணும் அந்த மனப்பக்குவம் உலகியல் பற்றுக் கொண்ட மானிடர்க்கு உரியதோ என எண்ணத் தோன்றுகிறது.

காய் கனிகள் உண்டு பஞ்சணையில் உறங்கும் மேனி புழுதியில் படுத்துறங்கி அண்ணனிடம் சென்றடைந்த பரதன் விம்முகிறான் பொரு முகிறான். "உண்டு கொல் உயிர் என ஒடுங்கிய" பரதன்,

"வெந்துயர் தொடர்தர விம்மி விம்மி நீ
ருந்திய நிரந்தர மூற்று மாறில
சிந்திய குரிசிலச் செம்மல் சேந்தகண்
ணிந்தியங் களிலெறி கடலுள்ள டென்னவே"

துயர்தோய நிற்கின்றான். மனத்துக்குப் பொருந்தாதோ வரங்க ளால் உன்னையும் உனக்குப் பொருந்தாத நிலையான தவ முயற்சியிலே நிறுத்தி ஆனைச் சக்கரம் கொண்ட தசரதனைக் கொன்ற கைகேகியின் மகனாதலால் தான் தவக்கோலம் பூணுவது தக்கது அன்றோ என வெந் துயர் அடைகின்றான். பாவகாரியான கைகேகியின் வயிற்றிலே பிறந்த பாவியான நான் சாவதற்கும் எண்ணவில்லை. தவமும் மேற்கொள்ள

வில்லை. எத்தன்மையாக இப்பழியினின்று கரையேறுவேன்? மறந்தாயினும் நீதியினின்று விலகி தருமத்தை வாளினால் கொன்று தின்றதைப்போல நான் அரசாள்வேனா? வஞ்சகனாய் சோர்வு பார்த்து உன் அரசைக் கவர நான் உன் பகைவனா? என்றெல்லாம் குமுறுகிறான்.

மேலும் இராமனைக் காட்டுக்கு அனுப்பவேண்டாம் என்ற தசரத னின் மன்றாடலை ஏற்காத கைகேயியை "நீயும் என் தாரம் இல்லை. நின் மகன் பரதனும் என் மகன் அல்ல" எனத் தசரதன் துறந்துவிடுகிறான். தசரதன் இறந்த பின் பரதன் தசரதனுக்கு இறுதிக்கடன் செய்ய முன் வந்த பொழுது வசிட்டன் தசரதனின் துறந்தலைக் கூறி பரதனைத் தடுத்தபோது பரதனின் மனம் பட்ட துயர் சொல்லுந்தரமன்று.

இவ்வுலகம் தன்னைப் பழி கூறுமே தந்தை போன்ற தமையன் காட்டில் வாழ நேரிடுகிறதே, அண்ணனது அன்பை இழந்துவிடுவேனோ என்பன போன்ற அச்சங்களால் பரதன் படும் துயர் சகிக்கவொண்ணாது. இறுதியாக பரதன் இராமனிடம், "நீ தந்த பார் என்னதாகில் இன்று தந்த னன் மன்னன் போற்று நீ மகுடஞ் சூடெனின்" எனக் கூறுகின்றான். இந்த அன்பு யாருக்கு வரும்.

இறுதியாக இராமனின் அன்புக் கட்டளைப்படி பதினான்கு ஆண்டு கள் இராமனின் பாதச் சுவடிகளை தலையிலே சுமந்து சென்ற அதனை அரியாசனத்திலே இருத்தி ஆட்சிபுரிகின்றான். இராமன் அட்சி செய்யத் தக்க அயோத்தியுள் தான் செல்லத்தகாது என் கருதி நாட்டின் எல்லை யில் உள்ள நந்திக் கிராமம் என்ற ஊரில் இருந்து தவக்கோலம் பூண்டு தாமரை இலைமேல் நீர் போல பந்தபாசம், அரசியல் ஆசை அனைத் தையும் துறந்து அண்ணனுக்காக இராமனின் கட்டளையை சிரமேற் கொண்டு அரசு புரிகிறான். இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து இராவணனுடன் போர்புரிந்து சீதையை மீட்டது வரையுள்ள துயரைவிட பரதன் கொண்ட துயர் கொடியது. சொல்லும் தரமன்று.


தொகுத்து நோக்கின் இராமணத்தில் இராமன் என்ற பாத்திரம் ஏற்றமும் சிறப்பும் பெற பரதன் இத்தகைய உயர்ந்த ஒரு மனநிலையைக் கொண்டிருக்கா விட்டால் இராமாயணத்தில் காட்டப்பட்ட இராமனது உயர்ந்த குணங்கள் இந்தளவுக்கு சோபித்திருக்க இயலாது.

*தே. சுபேக்கா - தரம் 10*

**எக்காரணத்தை முன்னிட்டும் மனிதன் பொய் பேசலாகாது**
**பொய் பேசிப் பழகுபவன் படிப்படியாக பாவம் செய்வதற்கு**
**அஞ்சாத கீழான மனப்பான்மையைப் பெற்று வருகின்றான்.**


**– ஸ்ரீ இராமகிருஷ்ணர் –**

மென்மேலும் வளர்ந்தோங்க வாழ்த்தும்



மிதிவண்டி உதிரிப்பாக இறக்குமதியாளர்கள்
லோட்டஸ் மிதிவண்டி ரயர்,
ரியூப்களிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்,
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்,
நீர் இறைக்கும் இயந்திரங்கள்,





கலர் பிலிம் றோல்ஸ், வீடியோ, ஓடியோ கசற்றுக்கள்
மற்றும் பல்பொருள் விற்பனையாளர்கள்

# இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்


**உங்கள் தேவைகளுக்கு**
**இன்றே நாடுங்கள்**

50, 52 & 54 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
T.P - 2988 Fax –2368

பெயின்ற் வகைகள், இரும்பு,

கட்டிடப் பொருட்கள்,

மற்றும் மின்சார உபகரணங்கள்
இறக்குமதியாளர்கள்



# கஜமுகன் ஹாட்வெயர்


**உங்கள் தேவைகளுக்கு**
**இன்றே நாடுங்கள்**

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்


☎ 2833

கல்வி அழகூட்டும் அறிவாலயத்திற்கு

எமது நல்வாழ்த்துக்கள்




உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க, வைர நகைகளைப் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்



# சாரங்கா நகைமாடம்

177/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P - 2480
Fax - 2480



*தலைமையகம் :*
**அருள் முருகன் நகையகம்**
**96/1 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

*கிளை :*
**சிவா நகைமாடம்**
**யாழ் வீதி,**
**சாவகச்சேரி**

என்றென்றும் ஒளிமயமாய் ஒளிர வாழ்த்தி நிற்கும்

மங்கள வைபங்களுக்கேற்ப மூகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கும், மணிப்புரி, காஞ்சிபுரம், பட்டு வேட்டிகள், உள்நாட்டு, வெளிநாட்டு சாறி வகைகளுக்கும் அதற்கேற்ப பிளவுஸ்பீஸ் வகைகளுக்கும் மற்றும் பல வண்ண வண்ண ஆடைகளை தெரிவு செய்ய யாழ் நகரில் ஓர் ஜவுளி சமுத்திரம்



# சோதீ ரெக்ஸ்ரைல்ஸ்

**17 மேல்மாடி**
**(பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு**

**14, நவீன சந்தை,**
**மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

கல்விக் கண்ணைத் திறந்து வைத்த

கலைக் கூடத்திற்கு

எமது நல் வாழ்த்துக்கள்



# எஸ். எம். பெர்ணான்டோ

## கண்ணாடி வழங்குபவர்கள்

580, ஆஸ்பத்திரி வீதி
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்


*சமூகப் பணிகளில்*
*தன்னிகரில்லா நிறுவனம்*

# S.M. FERNANDO


## OPTICIANS

Sight Tested – Prescriptions

Accurately Dispensed




**580, Hospital Road,**
**Jaffna (Near Bank of Ceylon)**




உயர்ந்து ஓங்க வாழ்த்தும்






# கபிலா சூ பலெஸ்







4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

*With Best Compliments*
*From*

# PETTAH ESSENCE SUPPLIERS


Suppliers to Confectioners & Bakers
Imorters of All Kinds of Food Colours
Essences, Chemicals, Groceries etc



104, Hospital Road,
Jaffna.

021 - 2386


வாழ்த்துகின்றோம்




பாடசாலை தரம் 1இல் இருந்து O/L, A/L வரையான புத்தகங்களும், பயிற்சிப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக தேவைக்குரிய காகிதாதிகள், அச்சக வேலைகள் யாவற்றையும் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ளும் இடம்

# சுப்பிரமணிய புத்தகசாலை

யாழ்ப்பாணம்






அழகு சாதன ஆடம்பரப் பொருட்கள்,
அலுமினியம், எவர்சில்வர், பிளாஸ்ரிக்
பொருட்கள், பலசரக்குச் சாமான்கள்
யாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள
இன்றே நாட வேண்டிய இடம்







# சென்மேரிஸ் ஸ்ரோர்ஸ்

சந்நிதி வீதி அச்சுவேலி

வாழ்த்தி நிற்கும்



## புடவை வியாபாரம்

உரிமையாளர் :
நா. கந்தசாமி

சந்நிதி வீதி,
அச்சுவேலி.

வாழ்த்துகிறோம்




## ஈஸ்வரி தொலைத் தொடர்பு நிலையம்

வெளி 0094 – 70 – 212252
உள்நாட்டு 070 – 212252

சந்நிதி வீதி
அச்சுவேலி


இன்னல்களை வென்று
வீறுநடை போட
எமது நல் வாழ்த்துக்கள்



முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

ASIHA SILKS
ASIHA SILKS

குறைந்த விலையில் சிறந்த ரகத்தில்
ஜவுளிகளை வாங்க நாடுங்கள்



ஆஷிகா சில்க்



4, நவீன சந்தை
யாழ்ப்பாணம்

நூற்றாண்டு

விழாக் கொண்டாடிய

கலைக் கூடத்தை

வாழ்த்துவதில்

பெருமை கொள்கிறோம்

# குகன் கல்வி நிறுவனம்

ஆவரங்கால்

புத்தூர்

வாழ்த்துகிறோம்

மிதிவண்டி, மிதி வண்டி உதிரிப் பாகம், அன்பளிப்புப் பொருட்கள் விற்பனையாளர்

# கஜன் ரேடேஸ்




இல 95, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்

நல் வாழ்த்துக்கள்

# சிவாஸ் சென்ரர்



மிதிவண்டி, றேடியோ, மணிக்கூடுகள், ரீ.வீ, டெக், பெற்றோமாக்ஸ், மின்சார உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

இல 70, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்

# The Charms of Country Life

What a world of difference between the town and country. In the town it is surrounded by man made things. But in the Country the environments are different. The country with fields and meadows its lakes and streams, its hills woods present scene far more beautiful than anything that town can offer. Where can the town get these.

Peace and Calm reign supreme in the country. The country is all bright and cheerful. A person can enjoy the pure open air to his hearts content. He can sit for hours on by the side of bubbling brook. He can watch the sun setting in all his glory behind some high hill or in the bosom of a lake. He can hear the chattering of birds as they return to their nests with the falling darkness. There is no one here to distrub the placed enjoyment of such sights and scenes. Do town and cities afford such charming prospects.

The country provides unlimited scope for innocent pleasures and enjoyments. Rising from bed early in the morning a long walk through the fields and meadows breathing pure air and smelling of fresh flowers is indeed delightful. Then perhaps a bathe in a river is fresh. Perhaps one of the greatest charms of country life is afforded by freshness and purity of the food stuffs available. One can have one's own vegetable garden, dairy and poultry for fresh vegetables, milk, butter and eggs. If he go to the river he can get fresh fish from the fisherman. Can town and city people dream of daily having pure, warm milk from the cows udders of enjoying the luxury of

newly laid eggs at their tables or of having vegetables just plucked, cooked for them.

The social life in the country though it has some drawbacks, is nevertheless much better than that of town or cities. In a town or city a man does not know his neighbours. In the country the people dwelling in particular locality know one another fully well. Each family is familiar with the history of other families in the nighbourhood. They lead a sort of corporate helping one another in times of troubles and difficulties or rejoining in his prosperity.

These then one the various attractions of country life and who would exchange these for the artifical of dreamy life of towns and cities.

K. Pakuthaniya
Grade 9

> *"When we're happy the world laughs with us when otherwise it laughs at us."*
>
> \- Shakspeer -



# கணணியின் உபயோகம்

நாங்கள் வாழ்ந்து கொண்டிருப்பது கணணி யுகம். இதைக் கருத்திற்கொண்டு நாம் அவசியம் செய்யவேண்டியது என்ன? இளவயதினரைத் தொழிலுக்கு வழிகாட்டும் இயக்கம் இற்றைக்கு 70 அண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டதாக அறிகின்றோம். தாமே கற்றலை மேற்கொண்டு அறிந்துகொள்ளல், தெரிந்தவற்றைத் தெளிவு படுத்தல் என்பன குழந்தைகளின் கல்வியின் அடித்தளம் என்பதற்கமையச் சிறுவயதிலேயே கணணியின் செயற்பாட்டை அறியவேண்டிய அவசியத்தைக் கவனிப்போம். மேல் நாட்டவர்கள் 50 வருடங்களுக்கு முன்னர் அறிந்தவற்றை எமது பிள்ளைகள் 2000 ஆண்டிலாவது அறிய சந்தர்ப்பங்கள் முழுமையாகக் கிடைக்குமா என்னும் போது அது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

வெளிநாடுகளில் கணணி வீட்டுக்கு வீடு சிறியவர் தொடக்கம் பெரியவர் வரையும் பலவகையில் பாவிக்கிறார்கள். "மின்சாரம் இன்றேல் நவீன வாழ்க்கை இல்லை" என்பது போல் மின்சார வசதி சீராக இல்லாமையால் கணணியை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் இருக்கிறது.

பல பாடசாலைகளுக்குக் கணணிகளை அரசு கொடுத்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். கணணியைப் பல்கலைக் கழகம் தொடக்கம் தனியார்துறை வரை கற்கும் வாய்ப்பினைப் பெற்ற பலர் அதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்கின்றார்கள். யாழ் குடா நாட்டில் அரசு தரும் கணணிகளை அறிமுகம் செய்து கற்பிக்கப் போதிய ஆசிரியர்கள் இல்லை. அவர்கள் தாம் கற்றுத்தான் கற்பிக்கப் போகிறார்கள். அது மட்டுமல்ல எல்லாப் பாடசாலைகளிற்கும் போதிய வசதிகளும் இல்லையென்றே சொல்லவேண்டும்.

கற்பித்தல் துறைக்கு கணணி பெரிதும் உதவி புரிகின்றது. ஆனால் கணணி என்றால் என்ன என்று பாடசாலையைவிட்டு வெளியேறும் வரையும் எமது தமிழ் மாணவர்கள் இதுவரை அறியவில்லை என்பது வேதனையான விடயமாகும். கணணி என்னும் போது அது ஒரு இயந்திரம் என்று நாம் ஊகிக்கலாம். அதன்செயற்பாட்டை திரையில் பார்த்துக்கொள்ளலாம்.

அதனை எழுத்து மூலம் பெறவேண்டுமாயின் அச்சிடும் இயந்திரம் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இப்படி இதன் செயற்பாடுகள் வளர்ந்துகொண்டே செல்லும் சிறப்புடையது.

கணணி மின்சார நாடித் தொகுப்புக்களால் இலத்திரன் அடிப் படையில் மனிதனின் கட்டளைகளை கணப்பொழுதில் கடுகதியில் மிகத் துல்லியமாக பிரமாண்டமான பணிகளைச் செய்து தருகின்றது. இதற்கு உயிரினங்களின் மூளையைப் போன்று அனுபவம், ஞாபகம் என்பன இல் லவே இல்லை. எயிட்ஸ் நோய்க்குச் சிறந்த விலைகுறைந்த மருந்து களைக் கண்டுபிடிப்பதில் இன்றும் தாமதம் இருந்தாலும்கூட கணணி உலகம் மிகவும் விரைவாக விரிவுபட்டுக் கொண்டே போகிறது. இலங் கையில்கூட இன்ரனற் உதவியுடன் வெளிநாட்டுச் செய்திகள் அனைத் தையும் உடனுக்குடன் பெறக்கூடியதாக உள்ளது. புதிய புதிய கண்டு பிடிப்புக்களை கணணி மூலம் நாம் சாதிக்கிறோம் "கற்றது கைமண் ணளவு கல்லாதது உலகளவு" என்று ஔவை மூதாட்டி கூறியது நிரூபன மாகின்றது. மேலும் பல சாதனைகளைக் கணணி மூலம் படைக்க உள்ளனர்.

கணணியின் பெருக்கம் ஆசிரியர்களை தேவையற்றதாக்கிவிடுமோ என ஆசிரியர்கள் கவலைப்படுகின்றனர். ஆனால் அப்படி அஞ்சத் தேவை யில்லை. கணணிகள் என்றுமே நல்ல ஆசிரியர்களுக்கு ஈடாகமாட்டா. ஆம் குருவில்லா வித்தை பாழ் தொழில் நுட்பம் மனித அறிவின் பரப்பை விரிவாக்குகிறது. கணணிப் பயிற்சி மூலம் ஆசிரியர்களையே உருவாக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. புதிய கண்டுபிடிப்புக்கள் பாவனைக்கு வரும் போது சிலவேளை இன்றைய குழந்தைகள் வளர்ந்து பெற்றோர்களாகி விடுவார்கள். அதாவது காலம் பிந்திவிடும். வாசிப்பதால் மனிதன் பூரண மடைகின்றான் என்ற நிலை போய் காட்சிகளைப் பார்த்தும், ஒலிப்பதிவு நாடாக்களைக் காதினூடாகப் பெறுவதன் மூலமும் அறிவு பெறும் காலம் வந்துவிட்டது. உலகில் கணணி உபயோகம் புகுத்தப்பட்டு பல கோடிக் கணக்கான சஞ்சிகைகள் வெளியாகின்றன. தொலைபேசித் தகவல்கள் அடங்கிய ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட புத்தகங்கள் வெளி வருகின்றன. "லேசர்கதிர்" மூலம் தயாரிக்கும் புத்தகங்கள் ஒரு கணணி யில் புகுத்தப்பட்டதும் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கத் தேவையில்லை. தேவையான பக்கங்களை கணணியை இயக்கிப் பார்த்துக் கொள்ளலாம். இது போன்று தொலைத்தொடர்பு மூலம் செய்திகள், படங்கள் அனுப்பப் படுகின்றன. ஒரு நாட்டில் வழங்கப்பட்ட கடவுச் சீட்டிலுள்ள புகைப் படத்தை கணணியின் மூலம் வேற்றுநாடுகளில் கூட ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு இருக்கின்றது.

ரத்த பரிசோதனை, கண்பரிசோதனை, சலம் பரிசோதனை என்ப வற்றை ஒரு சில நிமிடங்களில் கணணி மூலம் பெறக்கூடிய நிலை வைத்தியத்துறைக்குப் பெரிதும் உதவியாக உள்ளது. மோட்டார் சைக்கிள் கள், பொதிகள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றிற்கு இலத்திரன்

பூட்டுக்கள் திருடர்களிடம் இருந்து காப்பாற்றுவதற்காக பொருத்தப் படுகின்றன. சிறு பிள்ளைகளின் விளையாட்டுப் பொருட்களைப் போல் தொலைக்காட்சிப் பெட்டிகளில் இணைக்கப்பட்ட கணணியைக்கொண்டு வயது வித்தியாசமின்றி சகலரும் விளையாட்டுப் பொருட்களாகப் பாவித் துப் பொழுது போக்குகிறார்கள். அண்மையில் சதுரங்கப் போட்டியில் தொடர்ந்து வெற்றி பெற்றுவந்த ஒருவரையே கணணி வென்று சாதனை படைத்துவிட்டது. கணணியின் பயன்பாடுகள் எல்லையற்றதாகி பல திரு விளையாடல்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றுவிட்டது.

செவ்வாய்க் கிரகத்திற்கு "பாஸ்பயிண்டரை" அனுப்பி இங்கு பூமியில் இருந்து இயக்கி இங்குள்ள ஒவ்வொரு அமைப்புக்கள் வசதிகள் பற்றியும் புகைப்படங்கள் அனுப்பச்செய்து அவற்றை நாம் உடனுக்குடன் பார்க் கும்போது எமது மாணவர்கள் எவ்வளவு தூரம் பின்னிற்கிறார்கள் என் பதை உணர்ந்து கணணிக் கல்வியை அவர்களுக்கு புகட்டி அவர்கள் கணணி உலகில் புதிய சாதனைகள் படைக்க வழிவகுப்பது எமது கடமையாகும். மொழி வேறுபாடு தெரியாத கண்ணி தமிழ் மொழி மூலமும் செயற்படுகிறது. இந்தியாவிலுள்ள தமிழர் பல கண்டுபிடிப்புக்களை கணணி மூலம் செய்து சாதனை படைத்திருப்பினும் இங்குள்ள தபால் சேவை போல அந்த நுட்பங்களை எம்மவர் உடனுக்குடன் அறியத் தாமதமாகின்றது. "நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்றபடி கணணி பற்றி அறிந்த வர்கள் மற்றவர்களுக்கும் உதவவேண்டும். எமது பிள்ளைகள் கணணித்துறையில் முன்னேற அரசும், வாய்ப்பளிக்கவேண்டும். கற்றவர்களும் முன் வரவேண்டும். எல்லோரும் ஒரே மனத்துடன் செய லாற்றும்போது ௨000ம் ஆண்டில் இலங்கை கணணி மயமாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

*செல்வன் தி. பிரபாகரன்*
*தரம்* 11

**தூய்மை, பொறுமை, விடாமுயற்சி மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை ஆகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்**

**- சுவாமி விவேகானந்தர் -**

# தமிழ் இசைக் கலையின் வளர்ச்சி

பண்டைக் காலத்திலிருந்தே தென்னிந்தியா சங்கீதத்திற்குப் பெயர் போன பிரதேசமாகும். பரதரே தென்னிந்தியாவைப் பற்றி "பல கீதங்கள், நிருத்தங்கள், வாத்தியங்கள் நிறைந்த நாடு" என்று புகழ்கிறார். இன்னும் "மதுரமான அங்க அபிநயங்கள் திறமையுடன் செய்யக்கூடிய வல்லவர்கள் நிறைந்ததுமான அந்நாட்டின் எல்லை தெற்குச் சமுத்திரத் திலிருந்து விந்திய பர்வதம் வரைக்கும்" என்று சிறப்பாகக் கூறுகின்றார். இவ்வாறு 2000 வருடங்களுக்கு முன்னரே தென்நாட்டுச் சங்கீதம் சிறப்பாக விளங்கியது. இன்னும் மிதிலையில் அரசுபுரிந்த நான்ய தேவர், பாரத முனிவர் எழுதிய நாட்டிய சாஸ்திரத்துக்கு தான் எழுதிய "பரத வார்த்திகம்" எனும் உரையில் கர்நாடக சங்கீதத்தின் தாளங்களைப் பற்றிக் கூறுகின்றார்.

தமிழ் இசை வடிவங்களில் நமக்கு கிடைத்துள்ள ராகதாள அமைப்புடன் கூடிய உருப்படிகளில் மிகப்பழமையானது தேவாரம் ஆகும். இறைவன் இசை வடிவமானவன் "இறைவனை இசையாலே அர்ச்சனை" என்ற கூற்றுக்கிணங்க ஆலயங்களிலே இசை மூலமாக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டன. இருக்கு வேதத்தில் ஒரு பகுதியும், சாம வேதம் இசை ரூபமாகவும் ஓதப்படுகின்றன. அக்காலத்தில் ஆலயச் சூழலில் வாழ்ந்த மக்கள் பூசைகள் முடிந்ததும் பஞ்ச புராணங்கள் ஓதியும் இறைவனை இசையால் பாடியும் வாத்தியங்கள் மீட்டியும் ஆடியும் வழிபட்டு வந்தனர். இதனாலேயே தேவாரப் பதிகங்களுக்கு தனிச்சுவையும், பிரகாசமும் ஏற்பட்டுள்ளது. இதனால் கேட்பவர்களுக்கு உணர்ச்சியை உண்டாக்குகின்றது. தேவாரப்பண்கள் ஸ்வரப்படுத்தி வைக்கப்படாமல் போயினும் குருசிஷ்ய பரம்பரை மூலமாக அவைகளின் வர்ண மெட்டுக்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

இப் பண்கள் 103 ஆக இருந்தது. தற்காலத்தில் 24 பண்கள் உள்ளன. கானகாலத்தின் மூலமாகப் பண்கள் மூன்று வகையாகப் பரிக்கப்பட்டுள்ளன. பகற்பண், இராப்பண், பொதுப்பண் என்பனவாகும். நாயன்மார்களால் அருளப்பட்ட தேவாரங்கள் மன்னர், மக்களின் இசை பெரிதும் வளர்ச்சியடைந்திருந்தது. மேலும் திருவாசகம் முன்னிலைப் பண்ணிலும் திருவிசைப்பா ஆனந்த பைரவி ராகத்திலும் திருப்பல்லாண்டு பஞ்சமப் பண்ணிலும் புராணம் செந்துருத்திப் பண்ணிலும் பாடப்பட வேண்டும். திருபுகழைப் பொறுத்த வரையில் எந்த ராகத்திலும் பாடலாம். பண் தாய் ராகம் என்றும் திறம் என்பதை ஜன்னிய ராகம் என்றும் அழைப்பர்.

இராகங்களின் வளர்ச்சியினால் இசை வளர்ச்சியடைந்து வந்தது. சிறந்த வாக்கேய காரர்களினால் தென்னிந்தியாவில் காணப்பட்ட இவ் விசை காலப்போக்கில் எல்லா இடங்களிலும் பரவலாயிற்று. இதனால் இன்று இசைக்கலை முக்கியத்துவம் அடைந்து வளர்ந்து வருகின்றன. இவ்விசை மேலும் வளர்ச்சி டைவதற்கு வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகை, இசை நாடாக்கள் போன் றன வழிவகுத்துள்ளன. இன்று இசைக் கலையை வளர்க்கும் நிறுவனங்களாக அண்ணாமலை இசைக் கல்லூரி, தமிழ்நாட்டு இசைக்கல்லூரி, யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி போன்றன அரும்பணி புரிகின்றன. இவ்வாறு இசைக்கலையானது நன்றாக வளர்ச்சியடைந்து மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பையும் வாழ்த்தையும் பெற்று உச்ச நிலையை அடைந்துள்ளது. இதனால் அழகியல் உணர்வுகள் இன்றைய மக்களால் பெரிதும் போற்றப் படுகின்றது.

*செல்வி. து. உஷாந்திலா*
*2001 கலைப்பிரிவு*

**ஏட்டுக் கல்வியால் மனிதனுக்கு ஆவதென்ன?**

**பிரார்த்தனையும், ஆத்ம சாதனமும் அவனுடைய**

**முன்னேற்றத்திற்கு அவசியமானவைகள்**

*- பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் -*

**நம்பிக்கையும் உறுதியுமே அடிப்படை**

**இவை இரண்டும் இருந்தால்**

**எல்லாம் இருந்த மாதிரித்தான்.**

*- தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி-*

# இலக்கியமும் வாழ்க்கையும்

இறைவன் மனிதனை அறிவு வளர்ச்சிக்குரிய மூளையோடும், கற்பனையும், உணர்வுகளும் ஊற்றெடுத்துப் பாயும் உள்ளத்தோடும் படைத்துள்ளான். மனிதனின் முழுமையாக வாழ்வீற்கு அறிவும், உணர்வும் மிக அவசியமானதாகும். இதில் ஒற்றைப்போற்றி மற்றதைப் புறக்கணிப்பதனால் மனித வாழ்வு ஊனமடைகிறது. இந்நிலையில் அறிவியலை விஞ்ஞானமென்றும், உணர்வும், கற்பனையும் கொண்ட படைப்புக்களை கலையென்றும் பாகுபாடு செய்வர் அறிஞர். கலைகளை நுண்கலை அழகுக்கலை, கவின்கலை என்றும் கூறுவர். அது சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம், இலக்கியம், நாடகம் எனப் பல பகுப்புடையவை. இக் கலைகள் அனைத்திலும் இலக்கியம் சிறப்புடையது. அது மொழியினைக் கருவியாக் கொண்டு பிறப்பது. உணர்ச்சியும், கற்பனையும் கூடிய அனுபவ வெளிப்பாட்டின் பிரதிபலிப்பாக அமைவது மனித வாழ்க்கையின் நிகழ்வுகளைச் சுவைபட இலக்குடன் வெளிப்படுத்துவது. இக் காரணங்களால் அது ஏனைய கவின் கலைகளிலும் சிறப்புடையதாகிறது.

இத்தகைய இலக்கியத்தின் பயன் மிகப் பல. அவற்றுட் பிரதானமானது உலக வரலாற்றை மாற்றியமைக்கும் தன்மை, அறிவியல் வளர்ச்சியின் மாற்றங்களிலும் பார்க்க மன வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களே வரலாற்றை மாற்றும் ஆற்றலுடையவை அதாவது மனித சமுதாயத்தின் மனவளர்சிக் கூறுகளான விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை போன்றவற்றை பயன்படுத்துவதனாலேயே வரலாறு பெருமளவு மாற்றம் அடைகிறது. ஒரு அரசியலமைப்பிலே சீர்திருத்தம் உண்டாக வேண்டுமானால் உள்ளத்தின் ஆழத்திலே அன்பு, அருள், தன்னலமறுப்பு, தியாகம் முதலிய நல்லுணர்வுகள் உண்டாகவேண்டும். இவ் நல்லுணர்வை மனிதனிடையே ஏற்படுத்தக்கூடியது இலக்கியம். எனவே சமுதாய வளர்ச்சியை உண்டாக்க இவ் இலக்கியங்களை வரலாற்றுக் கண்கொண்டு நோக்குவோர்க்கு இவ் உண்மை புலனாகும். அதனாலேதான் சட்டம், அறிவியல், தத்துவத்துறை முதலியவற்றை ஆக்குவோரினும் பார்க்க இலக்கியம் படைக்கும் புலவர்கள் ஆற்றலும், செல்வாக்கும், சிறப்பும் உடையவர்களாக மனித உள்ளங்களை ஆழ்கிறார்கள் என இலக்கிய விமர்சகர்கள் கூறுவார்கள்.

மேலும் இலக்கியமானது மக்கள் போட்டி பூசல்களை எதிர்கொண்டு சமாளித்து வாழும் மனப் பக்குவத்தினையும் ஏற்படுத்துகின்றது. வரலாற்று முறையில் நாம் நோக்கும்போது உலகில் மனிதன் தோன்றிய நாள் தொடக்கம் இன்று வரை பல்வகைப்பட்ட புதிய புதிய பிரச்சினைகள் கிளைத்தெழுந்துள்ள மையை அறிதல் இயலும். தேசங்களோடு தேசங்களும், நாடுகளோடு நாடுகளும் பகைத்தெழுந்து சீர்குலைந்துள்ளன. மக்கள் ஒருவரோடு ஒருவர் பழகும் போதும் குடும்பமாக வாழும்போதும் சாதி மத பேதங்களினால் பிணக்குகள் பல தோன்றியுள்ளன. இத்தகைய சீர்கேடுகளும் பிணக்குகளும் தோன்றக் காரணமாயமைவது மக்கள் மனதிலே கலையுணர்வும் சால்புணர்வும் மேற்கொள்ளாமையே. இளங்கோவின் சிலப்பதிகாரமும், கம்பனின் காவியமும், வில்லியின் பாரதமும், பாரதியாரின் கவிதைப் பூந்துணரும் இவ்விரு வகையுணர்வுகளையும் வெளிப்படுத்தும் இயல்புடையவை. எனவே இவ்விரு வகையுணர்வுகளையும் மக்கள் மனதிலே ஆழப்பதித்து விடுவன இலக்கியங்கள். இதனால் இலக்கியம் கற்றவர்கள் பூசல்

களையும், பிணக்குகளையும் தக்க வகையில் புறங்கண்டு தோல்வியும் துன்பமும் அற்ற நல்வாழ்வு வாழ முடிகிறது.

மக்களெல்லோரும் குறைபாடுடையவர்கள். குறைகளின்றி நிறைவு பெற்ற மனிதன் எவனுமே இவ்வுலகில் இருத்தல் இயலாது. அங்கனம் இருப்பானே யாயின் அவன் மனித நிலையைக் கடந்து உயரிய அமரநிலை எய்தியவனாக கருதப்படுவான். இந்நிலையை அடைவதற்கு ஒருவன் தன்னிடமுள்ள குற்றங் குறைகளையுணர்ந்து அவற்றை நீக்கும் வழிகளையறிந்து அவற்றை நீக்க வேண்டும். அதற்குச் சிறந்த கருவிகளாக விளங்குபவை இலக்கியங்களாகும். இலக்கியங்கள் புலவனது உணர்ச்சியையும், கற்பனையையும் மாத்திரமன்றி அவனது அனுபவங்கள்ளையும் புலப்படுத்தும் இயல்பு கொண்டன. அவ் அனுபவங்களுக்கு உருவம் கொடுத்து பாத்திரங்களாக நடமாட வீடுகின்றனர். இராமாயணத்திலே உயர்ந்த பண்புகளின் சிகரமாய் இராமன் வருகின்றான். தியாகத்தின் திரு உருவமாக பரதன் வருகின்றான். கள்ளங் கபடமற்ற அன்பின் சிகரமாய் குகன் வருகின்றான். வீரமும், கலையுணர்வும், பக்தியும் கொண்டிருந்தும் பிறன் மனைவியை அழிவுறும் இராவணன் வருகின்றான். வஞ்சனையின் வடிவமாக கூனி வருகின்றாள். இவ்வாறே பாரதத்திலும் பலவகை இயல்பு கொண்டோர் உலாவுகின்றனர். இப் பாத்திரத்தின் இயல்புகளை ஆழ்ந்து கற்பதனால் நல்லுணர்வுகளைப் பெருக்க முடியும். தீய உணர்வுகளைப் போக்க முடியும். இதனால் அனுபவக் களஞ்சியங்களான இலக்கியங்கள் ஒவ்வொரு மனிதனையும் சீர் திருத்த வல்லனவாகின்றன. இதனால் தான் கவலையடைந்தோரும், உலக வாழ்வில் வெறுப்படைந்தோரும் எவற்றை வெறுக்கத் துணிந்தாலும் உயர்ந்த இலக்கியங்களை வெறுக்கத் துணிவதில்லை.

பண்டைத் தமிழரின் பெருமை, சிறுமைகளையும் பிறவற்றையும் அறிவதற்கு கால வரையறையோடொட்டிய வரலாறு இல்லையெனப் பலர் கவலையுறுவர். மக்களின் சிந்தனையில் வளர்ந்த எண்ணங்களையும் வாழ்க்கை முறையையும் காட்டுவதே உண்மை வரலாறு. இந்நிலையிலே தமிழ் இலக்கியங்கள் உண்மைச் சரித்திரங்களாக தமிழினத்தின் எண்ணப் போக்கையும், வாழ்க்கை முறையையும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு வெவ்வேறின மக்களின் உண்மை வரலாற்றினை அவர்களது இலக்கியங்கள் மூலமாகக் கண்டு கொள்ளலாம்.

இத்தகைய இலக்கியங்களானவை கவிதை இலக்கியம், உரைநடை இலக்கியம் என்ற இரு வகைகளில் மக்கள் வாழ்வீற் வலுவூட்டுகின்றன. பண்டைய இலக்கியங்கள் பெரும்பாலும் கவிதை வடிவானவை. தற்கால இலக்கியத்தில் உரைநடை முக்கியத்துவம் பெறுகின்றது. சமூக, வரலாற்றுப் புதினங்கள் மனிதனை மகிழ்வூட்டி நல்வழிப்படுத்துகின்றன. நகைச்சுவைக் கதைகள், சிறு கதைகள் போன்றவை சிறந்த பொழுதுபோக்கு இலக்கியங்களாக பயன்படுகின்றது. எனினும் தற்காலத்திற் காணப்படும் சில வகைக் கதைகள் வீரமூட்டுவனவாகவும், மனிதனின் மிருக உணர்வைத் தூண்டுவனவாகவும் உள்ளன. இவற்றைத் தவிர்த்தல் வேண்டும். எனவே இலக்கியம் என்பது மனித வாழ்க்கையைப் பிரதிபலிப்பது. இலக்கியம் மனிதனை நல்வழிப்படுத்துவது, சிந்தனையை தூண்டுவது வரலாற்றுச் சான்று, சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுவது. இலக்கியமும் வாழ்வும் இரண்டறக் கலந்தவை. இத்தகைய இலக்கியங்களே பின்னால் வரும் சந்ததிக்கு முன்னால் நின்று வழி காட்டுவது.

*செல்வி. இ. காயத்திரி - க.பொ.த (உ/த) 2000*

பல நூறு ஆண்டுகள்

ஒளி வீச

நல் வாழ்த்துக்கள்




மங்கள வைபவங்களுக்கேற்ற பட்டுப் புடவைகள்,

உள்நாட்டு வெளிநாட்டு சாறி வகைகள்

பிளவுஸ் பீஸ் துணிகள் பஞ்சாபி சூட்,

ஸ்கேட் அன் பிளவுஸ் ஆடவர்களுக்கேற்ப

சேட்டிங் - சூட்டிங் றெடிமேட் ஆடைகள்



தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்

இன்றே நாடுங்கள்




**சிறந்த தெரிவு**

**நிதான விலை**

# ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

**13, 14 பெரிய கடை**

**யாழ்ப்பாணம்**



நூற்றாண்டு விழா காணும்

அச்சுவேலி மகா வித்தியாலயம்

கல்வியில் சிறந்தோங்க

வாழ்த்துகிறோம்


# நியூ பீக்கோன் கல்வி நிலையம்

ஆவரங்கால்

சந்தி

---

மனமார வாழ்த்துகிறார்கள்



## சோபியா திரை

## றமீனா வீடியோ


ஆவரங்கால்

---

நூற்றாண்டைக் கொண்டாடும் கல்லூரிக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

## துஷி

## திரை அரங்கு அன் வீடியோ ஓடியோ சென்ரர்



ஆவரங்கால்

மலர் சிறக்க

வாழ்த்துகிறோம்


## விஜிதா அரிசி ஆலை ஸ்தாபனங்களின் சேவைகள்

- ✲ தொலைத் தொடர்பு சேவை
- ✲ சீமெந்து, கம்பி வகை, கொங்கிறீற் கற்கள் உள்ளிட்ட கட்டிடப் பொருட்கள் மொத்த சில்லறை விற்பனை
- ✲ கதிரைகள் வாடகைக்கு வழங்குதல்

போன்றவற்றை புதிதாக ஆரம்பித்துள்ளோம்
இவ் வேலைகளை ஒரே இடத்தில் நிறைவாகப் பெற்றிட
நாட வேண்டிய ஸ்தாபனம்



# விஜிதா அரிசி ஆலை



வல்லை றோட்


அச்சுவேலி

☎ 070 - 212223

நூற்றெட்டு ஆண்டுகள்
நிறைவு செய்த
அச்சுவேலி மகா வித்தியாலயத்தை
மனதார வாழ்த்தும்



# கலையகம் கல்வி நிலையம்




இயக்குநர்
சிவானந்த சர்மா


ஆவரங்கால்
புத்தூர்

உங்கள் உடனடி உள்நாட்டு வெளிநாட்டு

தொலைத் தொடர்பு 24 மணி நேர சேவை

நாடுங்கள்

# லக்ஸி தொலைத் தொடர்பகம்



உள்நாட்டு வெளிநாட்டு
தொலைபேசி அழைப்புக்கள்
070 – 212223


சன்னதி றோட (வைரவர் கோவிலடி)
அச்சுவேலி

நூற்றாண்டு விழா காணும்
மகா வித்தியாலயத்தை மனமார
வாழ்த்துகிறோம்

மங்கள வைபவங்களுக்கேற்ற பட்டுப் புடவைகள்
உள்நாட்டு – வெளிநாட்டு சாறி வகைகள்
ஸ்கேட் அன் பிளவுஸ்








சிறுவர்களுக்கேற்ற துணி வகைகள்
மற்றும் ஆடவர்களுக்கான சேட்டிங் –சூட்டிங்
என்பவற்றை தெரிவு செய்ய நீங்கள்
நாட வேண்டிய இடம்

அஜந்தா ரெக்ஸ்
அஜந்தா ரெக்ஸ்

நவீன சந்தை
யாழ்ப்பாணம்

# JEYA COMMUNICATION

T.P. Local - 070 - 212599
IDD 0094 - 70- 212599



# ஜெயா கொமினிகேசன்

Prop. P. Jeyachandran

Rajaveethy,
Atchuvely

**Day & Night Service**

**இரவு பகல் சேவை**

இராச வீதி,
அச்சுவேலி



# Luxmy

## communication

Local 070 - 212577
I.I.D. 0094 - 70212577

sannithy Road    Atchuvely

**மலர் சிறக்க எமது**
**நல் வாழ்த்துக்கள்**

தரமான சுவையான மலிவான
சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட
சகலவிதமான வெதுப்பக உணவு
வகைகட்கும் நாடுங்கள்

# இலச்சுமி வெதுப்பகம்

## சுவையகம்




பஸ்நிலையம் அருகாமையில்    அச்சுவேலி

# வீதி விபத்துக்களை



# தவிர்ப்போம்



உலகில் விஞ்ஞான மாற்றங்கள் முன்னேற்றங்கள் எண்ணிப் பார்க்க முடியாதளவிற்கு நிகழ்ந்தேறியபடி இருக்கின்றன. பாரிய தொழில் நுட்ப அறிவியல் வளர்ச்சிகள் விஞ்ஞான வளர்ச்சியால் ஈட்டப்பட்டுள்ளன. உலகின் விஸ்தீரணத்தைச் சகல மக்களும் எட்டுவதற்கு வீதிப்போக்கு வரத்து அடிப்படையானதும், அவசியமானதுமாகும். ஓரிடத்தில் இருந்த வண்ணம் செய்மதிகளின் உதவியுடன் பல செய்திகளை அனுப்பி ரக்கெற்றுக்களை அனுப்பிப் பல சாதனைகள் புரிந்துபோதும் வானிலும் வீதிகளிலும் விபத்துக்ளைத் தவிர்க்க முடியாது இருப்பது விந்தையே.

நாட்டிலுள்ள நகரங்களை இணைக்கும் வீதிகள் உடம்பிலுள்ள இரத்த ஓட்டத்திற்கான நரம்புகள் போன்றன. இதனை ஓய்வு நாட்களிலும் ஊரடங்கும் வேளையிலும் வீதிகள் வெறிச்சோடிப்போய் இருக்கும் நிலையை ஒப்பிடும்போது நன்கு தெளிவாகின்றது. சேதத்தை உண்டு பண்ணுகின்றன. இயற்கை காரணமாக ஏற்படுவது, விரைவாகச் செல்வதனால் ஏற்படுவது, ஒருவரின் தவறால் ஏற்படுவது, எதிர்பாராத வண்ணம் ஏற்படுவது என விபத்துக்கள் பலவகைப்படுகின்றது. நாம் நமது வாழ்வில் அன்றாடம் வழமையான சில வீதிமுறைகளைக் கடைப்பிடிப்பதனால் வீதி விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்பதில் ஐயமில்லை.

போக்குவரத்து நெருக்கடி அதிகமாக உள்ள இடங்களில் வாகனங்கள் செலுத்தும்போது சாரதிகள் மிக அவதானமாகத் தனக்கும் தனது வாகனத்துக்கும் பிறருக்கும் சேதம், இடையூறு விளையாது சட்ட திட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். தடுப்பு இல்லாத வாகனத்தை ஓட்டிச் செல்லுதல், அதிக புகை வெளியேறும் வாகனத்தைச் செலுத்துதல், மது போதையில் வீதிகளில் செல்லுதல், மனநோயாளியின் திடீர் முடிவுகள், வெள்ளப் பெருக்கு, திடீரென ரயர் காற்றுப்போதல், விபத்து நடந்தும் தப்பிச் செல்ல முயற்சிப்பது போன்ற நிகழ்வுகள் வீதிப் பாவனையைப் பொறுத்து அதிகரிக்கத்தான் செய்கிறது.

மானிடராகிய நாம் மனித உரிமைகளை மதித்து தனக்கும் மற்றவர்களுக்கும் இடையூறு இல்லாது வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம். ஆயின் அனாவசியமாள மரணங்கள், அங்கவீனர்களாவது, காலவிரையம், பொருட்சேதம் என்பன தவிர்க்கப்படும். வைத்தியசாலைகளிலும் இட நெருக்கடி குறையும் தேவையில்லாது விபத்தில் காயமுற்று வேதனைப்பட்டு இவ்வுலக வாழ்க்கையை நாம் இருளடையச் செய்ய முயற்சிக்கக் கூடாது.

வான்வெளியில் ஏற்படும் விபத்துக் காரணமாக சேதமுறும் விமானம் போக்குவரத்து உள்ள வீதியில் விழுவதாலும் விபத்து ஏற்படுகின்றது.

இப்படியான விபத்துக்களை தவிர்ப்பதற்காகவே விமானிகளுக்கு விமானப் பயிற்சியின்போது, கடல் வெற்றுத்தரை போன்ற திசைகளில் திருப்பும் வாய்ப்பு இருக்கின்றதா என அவதானிக்கும்படி பணிக்கப்படுகின்றது. ஆனாலும் திடீரெனத் தவிர்க்க முடியாத அளவிற்குச் சில விபத்துக்கள் ஏற்படவே செய்கின்றன.

"வருமுன்னா் காப்போம்" என்ற வாக்கிற்கு அமைவாக பல சட்ட திட்டங்களை கடைப்பிடித்துப் போக்குவரத்து அமைச்சு காலத்திற்குக் காலம் எடுத்துவரும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கனவேயாம். இவற்றை, நாம் உதாசீனம் செய்யும்போது அதன் விளைவுகள் பலவாக இருக்கின்றன. மிக விரைவாக வாகனத்தைச் செலுத்துதல், அதிக பிரயாணிகளை ஏற்றிச் செல்லுதல், துவிச்சக்கர வண்டியில் இருவர் பக்கம் பக்கமாகக் கதைத்துக் கொண்டு செல்லுதல், இருவர் போதல், அதிக பாரம் ஏற்றிச் செல்லுதல், பாதையைக் கடக்கும்போது அவதானமில்லாமல் செல்லுதல், தனக்குரிய பாதை ஒழுங்கில் செல்லாதுவிடுதல், திடீரென வாகனத்தை நிறுத்துதல், சந்தி போன்ற இடங்களில் வாகனத்தை நிறுத்திச் செல்லுதல், இரவில் வெளிச்சமில்லாது செல்லுதல், நீண்ட நேரமாக தொடர்ச்சியாக வாகனம் செல்லுதல், மதுபோதையில் மனக் குழப்பத்தில் வாகனம் செலுத்துதல், பயிற்சி இல்லாது வாகனம் செலுத்துதல், வழுக்கும் தன்மையுடைய பொருட்களை வீதியில் போடுதல் போன்ற பல விடயங்களை பட்டியலிட்டுக் கொண்டு போகலாம் இவற்றை நாம் அவதானித்துச் செயற்படும்போது வீதி விபத்துக்களைத் தவிர்க்க முடியும்

பின்னால் அணுகிவரும் வாகனம் அவதானமாக வரவேண்டும். பாதசாரிகள் கடப்பதற்கென ஒதுக்கிய இடங்களில் விபத்துக்கள் ஏற்படாது வாகனங்களைச் செலுத்துதல் வேண்டும். வாகனத்தின் புகை சாம்பல் தூசி பேன்றன விழும்போது விபத்து ஏற்படுகின்றது. வாகனத்தைச் செலுத்திக்கொண்டு பிறருடன் கதைத்தல், கவர்ச்சியான காட்சிகளில் மனதைச் செலுத்தல், மனைவியின் நடத்தையை நினைப்பது, வறுமையின் கொடுமையை நினைப்பது, வளைவான ஏற்றம் இறக்கம் போன்ற இடங்களில் கவனம் செலுத்தாமை, ஆரம்பத் திட்டத்தை கவனியாதது, கோன் அடிக்கக்கூடாத இடத்தில் கோன் அடிப்பது, பொலிசாரினதும் வீதி கவனிப்பவா்களினதும் கட்டளைகளை உதாசீனம் செய்தல் என்பன வீதி விபத்துக்களிற்கு காரணங்களாகும்.

"எறும்பூரக் கல்லும் தேயும்" என்பதற்கிணங்க பாவனையுள்ள வீதிகள் சீரழிந்து விடுவதால் அவற்றை உரியபடி பராமரிப்பது அவசியம் தானே.

வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு வீதிகளில் கணணியின் உதவிகள் நாடப்பட்ட போதிலும் நாம் அதனைப் பின்பற்றாது விடின் விபத்துக்களைத் தவிர்க்க முடியாது போய்விடும். காலத்திற்குக் காலம் வாகனங்களை உரிய முறைப்படி பரீட்சித்தும் திருத்த வேண்டிய பிழைகளை உரிய முறைப்படி திருத்தியும் சேவையில் ஈடுபடுத்த வேண்டும். வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் வாகனம் செலுத்துவது தவிர்க்கபட வேண்டும். தற்போது போக்குவரத்து அமைச்சு

எடுத்துள்ள நடவடிக்கைக்கு அமைய எழுத்துப் பரீட்சை செய்முறைப் பரீட்சைகள் அவசியமே. பணத்திற்காக பிழையான பத்திரங்களை இரகசியமாக வழங்குவது தவறான விடயமேயாகும். இவ்வாறு செய்யும் செயல் எவருக்கும் உயிர் ஆபத்தை விளைவிக்கும் செயலே ஆகும்.

வெளிநாடுகளில் வீதிகள் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளதால் வீதிவிபத்து தவிர்க்கப்படுகின்றது. இப்படியான இடங்களில் வேகம் குறைத்து ஓடுவது குற்றச் செயலாக கருதப்படுகின்றது. சிங்கப்பூர் போன்ற இடங்களில் உள்ள தூசுகள் கூட இயந்திரத்தின் உதவியுடன் சுத்தம் செய்யப்படுகின்றது.

இந்தியா போன்ற நாடுகளில் வீதி விபத்துக்கள் கூடுதலாக நடைபெறுவதற்குக் காரணம் வீதி ஒழுங்கு நடைமுறைகளில் கூடிய கவனம் செலுத்தாமை என்றே கூற வேண்டும். தற்போது கணணியின் உதவியுடன் விபத்தக்களைத் தவிர்க்க எடுக்கப்படும் நடவடிக்கை சிறப்பானவையே.

வீதிப் போக்குவரத்துச் சட்டங்கள் கூடப் பலருக்குத் தெரியாமல் இருக்கின்றது. பாடசாலை மட்டத்தில் பாடசாலை மாணவருக்கு இவை தெளிவாகப் புகட்டப்பட வேண்டும். தற்செயலாக விபத்து ஏற்பட்டாலும் கூட உடன் செய்யப்பட வேண்டிய முதலுதவி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பயிற்சி சாரதிகள், நடத்துனர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் தெரிய வேண்டும். இந்த முதலுதவிப் பயிற்சிகள் சகல மட்டத்தினருக்கும் வழங்கப்படுதல் அவசியம் ஆகும். முதலுதவிச் சிகிச்சைப் பயிற்சிகள், செய்முறை விளக்கங்கள் அசிரியர்கள் அதிகாரிகள் ஆகியோருக்கு போக்குவரத்துப் பிரிவினால் வழங்கப்பட வேண்டும். உயிர்களைப் பேணி மதிக்கும் பயிற்சியை அனைவரும் பெறவேண்டும். எல்லோரும் விபத்துக்கள் வருமுன் காக்கப் பழக வேண்டும்.

இலங்கையில் போக்குவரத்துத் துறையில் நன்கு பயிற்சி பெற்ற சாரதிகள் இருக்கிறார்கள். இதனால்தான் எமது சாரதிகள் வெளிநாடுகளில் நல்ல வேலை வாய்ப்பைப் பெற்று நல்ல வருமானத்தையும் ஈட்டி வருகிறார்கள். சட்டதிட்டங்களை அனைவரும் மதித்த நடப்பதனால் வீதி விபத்துக்களும் தவிர்க்கப்பட்டு வருகின்றன. உயிர் அழிவுகளும் குறைந்து வருகின்றன.

"வாழு, வாழ விடு" என்பதற்கு அமைவாக நாமும் வீதிச்சட்டங்களைக் கடைப்பிடித்து வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம். அப்போது நாமும் வாழ்வோம். மற்றவர்களும் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

**போக்குவரத்து அமைச்சினால் நடத்தப்பட்ட**
**கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை**


*செல்வன் ந. பிரசாந்*
*தரம் 13, வர்த்தகம்*


மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்


மின்சார உபகரணங்கள்

விவசாய இரசாயனப் பொருட்கள்

மிதிவண்டி உதிரிப்பாகங்கள்









பாடசாலை உபகரணங்கள்

அழகுசாதனப் பொருட்கள்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகலதும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்


# சபா பல்பொருள் விற்பனை நிலையம்


## தொலைத் தொடர்பு சேவைகளுக்கு

# சபா தொலைத் தொடர்பு சேவை



## 24 மணி நேர சேவை





**பிரதான வீதி,**


**அச்சுவேலி**

உள்ளூர் 070-212359

வெளியூர் 0094-70-212359



## மலர் சிறக்க வாழ்த்துகிறோம்




### உங்கள் மங்கள நிகழ்வுகள் என்றும் நீங்கா முறையில்

- வீடியோ (போட்டோ) உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு செய்து கொள்ளவும்
- மிக்சிங் எடுப்பதற்கு ஸ்ரூடியோ வசதி, வெளிப்புற படப்பிடிப்பிற்கு பூங்கா வசதி
- பல நவீன தொழில் நுட்பக் கருவிகள் மூலம் படம் பிடித்திடவும்
- நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட சொக்கட்டான் பந்தல், மின் வீசிறிகள், மின்குமிழ்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், பாய்கள் எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட சுழல் தாமரை அன்ன வடிவமைப்பு தீப நாயகி வடிவமைப்பு







- பல புதுமைகள் புகுத்தி படம் பிடித்திடவும்
- திருமணக் கார் வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும்
- C.D மூலம் பாடல் பதிவு செய்து கொள்ளவும்

# சாயி வீடியோ

29, றக்கா வீதி,
(ஜோண் பொஸ்கோ முன்பாக)
யாழ்ப்பாணம்.

பஸ் நிலையம்
அச்சுவேலி


Type Setting & Offset Printing at St. Joseph's Catholic Press, Jaffna - 1999.